வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
## SUTANTIRAN




194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1993 மார்கழி திங்கள் 29-ம் நாள் ([illegible]—1—1963) ஞாயிற்றுக்கிழமை ஷஃபான் 16 | இதழ் 33



அனைவருக்கும் எங்கள் பொங்கல் வாழ்த்துக்கள்

# பல நூறு நறுமலர்கள் மலரட்டும்

# நமது இலக்கிய பூங்காவில்!

## 'காமஞ் செப்பாது கண்டது மொழிமோ!'

**திறனாய்வு செய்ய முற்படுபவர்கள் முதலில் இலக்கியப் பயிற்சி உடையவர்களாக இருக்க வேண்டும். இலக்கியம் படைப்பவர்கள் மொழி மரபைப் பேண வேண்டும். மன உளைச்சல்களைக் கொட்டித் தீர்ப்பது யதார்த்த இலக்கியமாகாது. இக் கருத்துக்களை வலியுறுத்த முற்பட்டதுடன், புதிய பாணியில் இலக்கியப் போர்வையில் நம்மை எதிர் நோக்கும் ஒரு பெரிய ஆபத்தையும் சுட்டிக்காட்டியுள்ளார், ஈழத்தின் சிறந்த இலக்கிய திறனாய்வாளரும் சிறுகதை எழுத்தாளருமான இக் கட்டுரையாசிரியர்.**

இலக்கியத் திறனாய்வுத் துறையில் ஈழத்தில் குழப்பமான ஒரு நிலை இன்று நிலவுகிறது. தமிழனின் தொன்மைக்கும, பெருமைக்கும் ஊறு விளைக்குங் கருவியாக இலக்கியத் திறனாய்வினைப் பயன் படுத்துபவர்களையிட்டுத் தமிழினம் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நூற்றுக்கணக்கான ஆண்டுகள் அந்நிய ராட்சியில் மொழி, இனப் பற்றை மறந்து கிடந்த நிலை மாற முன்னமே, இன்னொரு ஏகாதிபத்தியத்தின் மிகச் சிறு கூறு ஒன்று இந்நாட்டில் தமிழை அழிக்க முனைவதைக் காண்கின்றோம். இந்நிலையில் நமது இலக்கியத்தின் வளமார்ந்த தன்மைகளை உலகமறியும் வாய்ப்பு வர முன்னரே இலக்கியப் பூஞ்செடிகளை முளையிலேயே கருக்க முனையும் 'இலக்கிய விமர்சனங்களை'ப் பரப்பி வருகிறார்கள்!

எவ்விதமான சாதி, மத, அரசியல் பாகுபாடுகளின்றியும் மக்கள் வாழ்வின் மேம்பாடான கருத்துக்களை உள்ளடக்கியும், கலை மெருகு மிளிரப் படைக்கப்படும் இலக்கியங்களெல்லாம் சிறந்தனவே என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அவற்றை எல்லாம் முற்போக்கு இலக்கியம், அஃதல்லாத இலக்கியம், யதார்த்த இலக்கியம், மண்வளம், பிரதேசவளம் காட்டும் இலக்கியம் எனப் பிரித்து வைக்க வேண்டிய அவசியம் எதுவுமில்லை. ஆனாலும் உலக முழுமையிலும், நமது மண்ணிலும் இலக்கியத்தைக் கூறுபோட்டுக் கட்சி சேர்க்க வேண்டிய அவசியம் சிலருக்கு இன்றியமையாததாக இருக்கின்றது. இன்னுஞ் சிலரோ தமது சொந்த வாழ்க்கையின் விருப்பு வெறுப்புகளுக்கியையத் திரிந்துபட்ட மனநிலையின் இச்சைகளுக்கு ஏற்ப இலக்கியத்திற்கு விளக்கம் தருபவர்களாக இருக்கிறார்கள். இத்தகைய அதிசய நிலையில் ஈழத்து எழுத்தாளர்கள் திசை திருப்பப்பட்டு வருகிறார்கள். இலக்கியத்தைப்பற்றிய நிறைவான விளக்கம் ஒவ்வொரு எழுத்தாளனதும் மனதில் உறுதிப்படாதவரை 'நமது இலக்கியம்' 'விகட சாதனைகளின்' களமாக அமைவது தவிர்க்க முடியாத ஒன்றாகி வருமென்பது திண்ணம்!

### மொழிக் கொலைஞர்கள்

எழுத்தினை ஆளுகை செய்வதன் நோக்கம் மக்கள் வாழ்க்கையைப் பிரதிபலிப்பது அன்றேல் உயர்த்துவது என்பதுடன், எம்மொழியினில் நமது படைப்பைத்தருகிறோமோ அம்மொழியின் செம்மை திரும்பா வண்ணம் பாதுகாப்பதுமாகும். இவ்வுண்மை நமக்கு மாத்திரமன்று, உலக எழுத்தாளர்களனைவருமே ஒப்பக்கூடிய ஒன்றாகும். உலகின் நாகரிகமடைந்த மொழிகள் எவற்றிலும் இந்த உண்மையின் தாக்கங்களை நாம் மிகத் தெளிவாகக் காணலாம். ஆனால் தமிழைப் பொறுத்தவரை, அஃது ஒரு நிறைமொழியாக மிளிர்ந்துங்கூட, 'இல்லாதன இல்லை' என்று இயம்புமளவுக்கு எழில் மிகுந்ததாக இருந்துங்கூட நமது இன்றைய எழுத்தாளர்களிற் பலர் தலை சிறந்த 'மொழிக் கொலைஞர்'களாக விளங்குகின்ற இழிதன்மையைக் காணுகின்றோம், இலக்கியத் திறனாய்வுக்கு முன் மொழித்தூய்மை, அல்லது மொழி முட்டின்மை ஒழிந்தாகவேண்டும். அஃதின்றித் திறனாய்வு பேணல் இயலாத தொன்றாகும்.

### எது இலக்கியம்?

இலக்கியப் படைப்புக்கள் எவை என்ற கேள்வி எழுகின்றது; தொல்காப்பியக் காலந்தொட்டு இற்றைவரை படைக்கப்பட்டுள்ள அனைத்தும் இலக்கியமா? (தொல்காப்பியத்துக்கு முன்னமே தமிழிலக்கியமிருந்தது என்றால் அது தர்க்க ஆராய்ச்சியாளர்களுக்குரியது.

—நாவேந்தன்—

தொல்காப்பியரைக் குறிப்பிடுவது உதாரணத்திற்காகவே!) இலக்கியம் உரைநடையிலானதா? செய்யுளாலியன்றதா?சிறுகதை,நகைச்சுவைக் கட்டுரை, பெருங்கதை (நாவல்), நெடுங்கதை (குறுநாவல்) என்பனவும் இலக்கியங்கள் தாயா என்பன போன்ற ஐயப்பாடுகள் இன்றுஞ் சமுதாய நிலையின் பெரும் பங்கினை நிறைத்து நிற்கின்றது. இவற்றுக்குத் தீர்வு காணுதவரை நம்மிடையே இலக்கியத் திறனாய்வு 'கானல் நீரே' என்பதில் ஐயமின்று.

இலக்கியப் படைப்பாளர்களைத் தமிழ் மட்டுமே கற்றவர்கள், தமிழ்ப் பண்டிதர்கள், தமிழும் ஆங்கிலமும் கற்றவர்கள், பன்மொழிப் புலமை பெற்றவர்கள் எனப் பகுத்துக் கொண்டு, பெரும்பாலும் அவர்கள் படைப்புக்கள் எதனையுமே ஏறெடுத்தும் பாராது திறனாய்வு செய்கின்ற 'புத்திசாலிகளை' இங்கே தாராளமாக நாம் காண்கிறோம். இத்தகைய திறனாய்வுகளின் விளைவு மொழிக்கோ, மக்களுக்கோ பயன் தரும் என்று எட்டுணையும் நம்புதல் இயலுமா?

காலமாறுதலின் நியதிக்கேற்ப இலக்கியத்தின் தன்மைகள் இலகுபட்டு வருவதனை யாரும் மறுத்தல் இயலாது. ஆனால் நூலிழைத் தொடர்பாக, மாறுதல்களுக்கூடாக எம் மொழிக்கும் அம்மொழியின் மரபு பேணப்பட்டு வருவதனை மொழி வரலாறுகளை உய்த்துணர்ந்தவர்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

### திறனாய்வா? ஆபாச வர்ணனையா?

சங்க காலத்தைய இலக்கியங்களைப் போன்றே இன்றும் யாவும் செய்யுள்களாலியல வேண்டுமெனவும், அல்லது சிலப்பதிகாரக் காலத்தைப் போன்று உரைநடையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்களாலானதே இலக்கியம் எனவும் நிறுவுதலியலாது. ஏற்காது! இதற்காகவே, தமிழ்ப் பண்டிதர்கள் இன்றைய சமுதாய நிலையினை உண்மையுருவத்தில் கண்டு படைக்கக் கூடியனவெல்லாம் பரிகசிக்கத்தக்கனவென்று 'விமர்சனம்' புனைபவர்களுக்காக நாம் இரங்குகிறோம்!

மக்கள் வாழ்க்கையின் உண்மையுருவத்தை, உள்ளது உள்ளவாறே கலையழகுடன் எழுதிக் காட்டுவது இலக்கியமெனில் தமிழ் மட்டுமே தெரிந்தவர்கள் அவ்விலக்கியங்களைப் படைக்கவும் திறனாய்வு செய்யவும் நிறைவான உரிமையுடையவர்கள் என்பதனை யாரும் மறுத்தலியலாது. ஆனால் தமிழ் இலக்கியங்களில் சிறிதளவு பயிற்சியுமற்ற கற்றுக்குட்டிகள், 'பல்கலைக்கழகப் பரீட்சைகளில்' சித்தியெய்திவிட்ட தெம்புடன் இறுமாந்து செம்மாந்து 'திறனாய்வுக் களத்தில்' இறங்கி நின்று 'ஆபாச வருணனை'கள் செய்வதனைக் காண மனம் நாணுகிறது. 'திறனாய்வு' என்ற பெயரில் தமிழிலக்கிய அறிவுக்குறைவினை அம்பலப்படுத்தும் இவர்கள் செய்கை 'நுணலும் தன் வாயாற் கெடுமென்ற' பழமொழியை நினைவுறுத்தினலும் மொழிக்கும் இலக்கியப் படைப்பு முயற்சிகளுக்கும் இடையூறு விளைக்கும் தன்மையினை நாம் கண்டிக்காதிருக்க இயலாது!

'தமிழ் மட்டும் கற்றவர்களுக்கு ஒன்றுமே தெரியா'தென்ற நோக்குடன் ஆரம்பிக்கும் 'ஆங்கில மொழிப் பெரும் புலவர்களான இவர்கள்' தமிழில் தருங்கருத்துக்களை இலக்கியவுலகம் எள்ளி நகையாடத் தொடங்கிவிட்டது 'துரதிர்ஷ்டம் போலும்!' கருங்கக்கூறின் தமிழிலும் ஆங்கிலத்திலும் 'நுனிப்புல் கடித்த' இவர்களுக்குப் பன்மொழிப் புலவர்களான அருட்டிரு தனிநாயக அடிகளார், கா. அப்பாத்துரை, தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் போன்றோரது கருத்துக்களை அர்ப்பணிக்கின்றோம். தெளிவு பெறுவார்களாக.

### சங்ககால இலங்கியங்களும் யதார்த்த இலக்கியங்களே

புறநானூறு, அகநானூறு ஆகியவற்றின் பாடல்களில் எவ்வாறு வாழ்க்கையின் உண்மை உருவத்தைக்காண்கின்றோம்? அவையெலாம் 'யதார்த்த' இலக்கியங்கள் இல்லையா? ஒருகால் சிற்றினப் புலவி நுணுக்கம் தெரிக்கும் வகையில் 'ஆழம்' குறைந்தனவாக அவை தோற்றினால் அன்மைக் காலத்து விறலிவிடுதூது போதாதா?

மண்வளமும் பிரதேசவளமும் நமது பண்டைய இலக்கியங்களில் மிக மலிந்தன. புலவர்கள் நிறைய நிறைய அவற்றை ஆட்சிசெய்துள்ளனர். சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள்

> "பூவார் சோலை மயிலாடப்
> புரிந்து குயில் களிசை பாடக்
> காமர் மாலை அருகசைய
> நடந்தாய் வாழி காவேரி"

என்று பாடுகின்றபோது, மண்வளமும், பிரதேச வளமும் எவ்வளவு நிறைவுடன் பொலிகின்றன! எடுத்துக் காட்டுகள் பல இப்படிச்சுட்டலாம். தமிழிலக்கியத்தில் இவையெல்லாம் 'இல்லையே என்று சொல்லி வந்த வீரம்' இன்று போய்விட்டது! இன்றைய இலக்கியங்களில் 'இவை இல்லையே என்ற ஒப்பாரி' மட்டுமே எஞ்சி நிற்கின்றது. நாளடைவில் அதுவும் நின்று விடும். எனவே ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நிறைவுடன் மிளிரும் 'நமது இலக்கிய நிதியத்தை' இவர்களால் இழிவு படுத்த முடியாது! ஆனால் அனைத்துலகிலும் நடைமுறையில் 'ஒரு கொள்கை—அரசியல் சித்தாந்த' வயப்பட்ட இலக்கியப் படைப்புக்களே இலக்கியம் என ஏமாற்றி வருபவர்களைப் பற்றித்தான் அதிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்! இலக்கியத்தைப் பயன் படுத்துவது கருத்துக்களை 'விளக்கவென்பதனை ஒப்புகிறோம். ஆனால் ஒரு கொடுங்கோன்மையாட்சி அமைப்புக்கு வழி சமைக்க இலக்கியத்தைப் பயன்படுத்தவும், அதன் நெறிகளைச் சிதைக்கவும் நாம் அனுமதிக்க முடியாது. 'நமிவால் கொண்டு (இலக்கிய) கடல் ஆழம் காண'ப் புறப்பட்டுள்ள இத்தோழர்கள் சமுதாய விரோதமான எழுத்துக்களை 'முற்போக்கு' என்ற பெயரில் உலவ விடுவதும், அதுவே இலக்கியம் எனக் கூச்சலிடுவதும் நகைப்புக்கிடமானதாகும். சாதி, இன, மத சச்சரவுகளை வைத்து 'இலக்கியம்' புனைவதனால் பயனேதும் விளைவதில்லை, இலக்கிய நோக்கின்படி; ஆனால் பயனுண்டு இவர்களுக்கு நாளாந்த வாழ்க்கையடிப்படையில் சில பல சலுகைகளைப் பெற! அவ்வளவு தான்!!


### மொழி மரபு அற்ற இலக்கிய கர்த்தாக்கள்

சிறு கதை, நெடுங்கதை, பெருங்கதை, நகைச்சுவை, கட்டுரைகள் இன்ன பிற யாவும் இலக்கியங்கள் என்பதனை நிறுவுவதற்கு எம்மாலியலும், 'பண்டித உலகம்' இதனை ஒப்பாது என யாருமஞ்சத் தேவையில்லை. ஆனால் மொழி மரபு சிதையாவண்ணம் படைப்பு முயற்சியில் ஈடுபடமுடியாதவர்களுக்கு நாம் 'அதீதத் துணிவு' கொடுக்கத் தயாரயில்லை! மொழி மரபையும் தமிழ் இலக்கிய மரபையும் பேண முடியாத சக்தியற்ற சிலர் தமது தோல்விக்கு உறை போடப் பிற மொழி இலக்கியங்களின் கரை கண்ட மேதாவிகளாகத் தம்மைக் காட்ட முயற்சிப்பது அறிவுடைமையாகாது. சிங்கத்தின் தோலைப் போர்த்தாலும், சிறு நரி, நரிதானே! 'தமிழில்தான் எழுதப்படுகிறதா?' என்ற ஐயம் இத்தகையோரின் படைப்புகளைப் பார்க்கின்றபோது நமக்கேற்படுகின்றது. இவர்கள் தமது தோல்வியை ஏற்றுக் கொண்டு உண்மையான தமிழ் எழுத்தாளர்களாக மிளிர முயல வேண்டும்.

நமது இலக்கியப் பெரும் பரப்பில், இன்றுள்ள முக்கியமான சில கருத்துத் தேக்கங்கள் (பிரச்சினை) பற்றிய என் எண்ணங்களையும் ஓரளவு நமது பழந் தமிழிலக்கிய நெறிமுறைகளையும் இங்கு சுட்டிக் காட்டியுள்ளேன். இவற்றுக்கு மாறான முடிவுகள் இல்லை என்பது என் தெளிவல்ல, பல நூறு நறுமலர்கள் நமது இலக்கிய பூங்காவில் மலரட்டும். பல்லாயிரமாண்டுகளாக நம் மக்கள் அவற்றின் நறுமணம் நுகரட்டும். அதற்கு நமது திறனாய்வாளர்கள் வழிவகுக்க வேண்டும். 'காமஞ் செப்பாது கண்டது மொழிமோ!' எனப்பண்டைத் தமிழ்ப்பாவலன் நமக்கும் பணித்தபடியே எமது இலக்கியப் பணி இனிது நிறைவேறட்டும். ஈழத்தின் தமிழ் எழுத்தாளர்கள் அனைவரும் தமது எழுத்துக்களில் என்றும் மேன்மையுறுவார்களாக!


## தன்னிகரில்லாத் தனிரகம் வாய்ந்த

அழகான மரப்பெட்டியில், பாட்டரி மூலம் இயங்கும் 'டிரான்ஸிஸ்டர்' ரேடியோ.



★ ஏழு 'டிரான்ஸிஸ்டர்ஸ்'—2 ஜேர்மானியம் டையோடெஸ்.
★ நிரந்தரமான, தூரசக்தி வாய்ந்த ஒலிபரப்பி.
★ மத்திய, அலையும், 3 சிற்றலையும்.
★ தொனியைக் கட்டுப்படுத்த, அழுத்தும் பொத்தான்கள்.
★ உஷ்ண பிரதேசத்துக்கு ஏற்ற முறையில் அமைக்கப்பட்டது.
★ தரமான 'வால்நட்' மரத்தில், 'சற்றின்' மரமும் கலந்து ஆக்கப்பட்ட அழகான பெட்டி.

**விலை : ரூபா 550-00**

**சென்ற். அந்தனீஸ் ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்.,**

516, ஸ்கின்னேர்ஸ் ரோட் தெற்கு,
கொழும்பு-10.

போன் : 4261—2, 3




எஸ். டி. சிவமங்களம்,
கொழும்பு-4.

கே: எனது ஆபிஸ் கமெரா களவு போய்விட்டது. பொலீசில் புகார் செய்தால் பலன் கிடைக்குமா?

ப: இதற்கெல்லாம் நம்ம நாட்டுப் பொலீசார் லாயக்கில்லை. கேசரி தயாரிப்புக் குழுத் தலைவர் ஒருவர் இதில் கை தேர்ந்தவர். அதுவும் விலையுயர்ந்த "றெலிக் கோட்' கமெராவானல் நிச்சயம் அவரிடம் இருக்கும். அவரை அண்டிப் பாருங்கள்.

ஃ

எம். ஆர். எஸ். தங்கமணி,
பதுளை.

கே: தமிழரசுத் தந்தையின் எடை என்ன?

ப: ஏன், தராசில் வைத்து எடைக்கு எடை தங்கம் அளிக்கப் போகிறீர்களா?

ஃ

செல்வி குணநாயகி, கல்முனை.

கே: காலமெல்லாம் கன்னியாகவே வாழ்ந்துவிட ஆசைப்படும் ஒரு கன்னிப் பெண்ணுக்கு ஏன் இந்த உலகம் அனுமதி அளிப்பதில்லை?

ப: உலகம் தாராளமாக அனுமதி அளிக்கும். அதற்கு இரு நிபந்தனைகள்:- (1) காலமெலாம் கன்னிப் பெண்ணுகக் கழிக்கத் திடசங்கற்பம் இருக்க வேண்டும். இடையில் சபலம் தட்டிவிடக் கூடாது. (2) கன்னித் தன்மைக்கு எத்தகைய ஆபத்து வந்தாலும் அதனை எதிர்த்துப் போராடும் துணிச்சல் வேண்டும்.

ஃ

ஆர். எம். குணரட்னம்,
கொழும்பு—10.

கே: நான் சிங்களம் படிக்கும் போது மூளையில் ஏறுகின்றதில்லையே! என்ன செய்யலாம்?

ப: உங்களின் மூளை தன்மான முள்ளது. சிங்களத்தை ஏற்க மாட்டேனென்று சத்தியாக்கிரகம் செய்கிறது.

ஃ

நல்லையா, சிறுப்பிட்டி.

கே: நான் திருமணம் செய்து ஆறு வருடங்களாகியும் புத்திரப் பேறு கிட்டவில்லை. அதனுல் நான் வேறொரு பெண்ணை திரும்பவும் மணஞ்செய்ய உத்தேசிக்கிறேன். அதற்கு எனது மனைவி குறுக்கே நிற்பதால் நான் என்ன செய்யலாம்?

ப, மனைவி குறுக்கே நிற்காவிட்டாலும் இருதாரத் தடைச் சட்டம் குறுக்கே நிற்கும். விபரீத யோசனையை விடுத்து மருத்துவ உதவியை நாடும்.

ஃ

ஒ. கணபதிப்பிள்ளை,
அமிர்தகளி.

கே: அரசாங்கத்தால் இழுக்கப்படும் ஆஸ்பத்திரி கூவிப் பெரும்பாலாக தமிழ்ப் பிரதேசங்களில் விழுவதில்லையே! மர்மம் என்ன?

ப: தமிழர்களைப் புறக்கணிக்கும் கைங்கரியம் நாட்டில் மட்டுமல்ல, சீட்டிலும் நடைபெறுகின்றது போலும்!

ஃ

ஏ. எஸ். எம். யாசிம்,
பொல்காவலை.

கே: எனக்கு இரவு வேளையில் படுக்கைக்குப் போனல் தூக்கம் வருவதில்லை. ஆகையால் நீங்கள் இதற்கு ஒரு உபாயம் சொல்ல வேண்டும்.

ப: கண்ணைத் திறந்து கொண்டிருந்தால் தூக்கம் எப்படிவரும்? விடியும் வரை கண்ணை மூடிக்கொண்டு படுத்திருங்கள், சரியாகப் போகும்.

ஃ

கே. எம். சிங்காரம், பதுளை.

கே: சீனுவில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளபடியால், சிலோன் அரசாங்கம் இங்குள்ள நாய், தவளைகளைச் சீனுவுக்கு அனுப்புமா?

ப: பாம்பை விட்டுவிட்டீர்களே! பாம்பு உவையினுக்கும், பாம்பு சூப்புக்கும் சீனுவில் அதிக கிராக்கியாம். அவற்றை விருந்தினர்களுக்கு அகமகிழ்ந்து படைக்கிருர்களாம். இ[illegible]ருந்து சென்றுள்ள விருந்தினர்களுக்குமா என்று கேட்டுவிடாதீர்கள்! நாமும் அரிசிக்குப் பதிலாக நாய், பூனை, தவளை, பாம்பு, பல்லி ஆகியவற்றை சீனுவுக்கு அனுப்பி வைக்கலாம்.

ஃ

சி. சிவசுப்பிரமணியம்,
பண்ணுகம்.

கே: இன்று தமிழ்த் துரோகிகள் பட்டியலில் முதல் இடத்தைப் பெறுபவர் யார்?

ப: யாருமல்ல! சாட்சாத் வீரகேசரியேதான்.

ஃ

ந. அரசு, பதுளை.

கே: இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையைப் பற்றி "இலங்கையர்" என்ன கருதுகிருர்கள்?

ப: இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைக்கு

> திருவாளர்
> **குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> தபால் பெட்டி இல. 1183
> கொழும்பு-12.

பெரும் ஆபத்து என்று அலறுகிருர்கள் அரசாங்கஎம். பிகள் சிலர். இக்கொள்கை கொம்யூனிஸ்டு சார்புடையதாக மாறிவிட்டதாம்.—சீனுவின் பால் அரசாங்கம் காட்டும் அனுதாபம் அதனை நிரூபித்திருக்கிறதாம்.

ஃ

கா. விஜயராசசிங்கம்,
கொடிகாமம்.

கே: தற்போது இலங்கையின் குடிசனத் தொகை என்ன?

ப: ஒரு கோடியை எட்டிப் பிடித்திருக்கும் குடிசன மதிப்பு ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது. தேர்தலில் நடப்பதைப் போல ஆள் மாருட்டங்கள் இதிலும் நிகழ்ந்தால் எண்ணிக்கை இன்னும் பெருகிவிடும்.

ஃ

அ, வெள்ளைச்சாமி, பிட்டகந்தை.

கே: பெண்களுக்கு அதிகம் கோபம் வரக்காரண மென்ன?

ப: உள்ளம் மென்மையாக இருப்பதுதான் காரணம். அதில்சிறிது சலனம் ஏற்பட்டாலும், மனதின் சமநிலை பாதிக்கப்பட்டு கோபம் பிறக்கிறது.

கே: காதலின் பின் திருமணமா அல்லது திருமணத்தின் பின் காதலா? எது சிறந்தது?

ப: காதலின் பின் திருமணம் சிறந்தது. ஏனெனில் திருமணத்துக்கு முன்பே ஒருவரை ஒருவர் அறிந்து, புரிந்து, தெரிந்துகொள்ள காதல் வாய்ப்பளிக்கிறதல்லவா?

ஃ

மு. சின்னத்துரை, முல்லைத்தீவு.

கே: இக்காலப் பெண்கள் நாகரிகம் என்று அலங்கோலம் செய்து கடைசியில் நாகரிகம் தெரியாமல் மனிதன் திரிந்த நிலைக்குச் சென்றுவிடுவார்களா?

ப: இல்லை. சமுதாயச் சக்கரம் பின்பக்கமாக உருளாது. மனிதன் மீண்டும் அநாகரிக நிலையை அடையமாட்டான். காட்டுக்குச் சென்று படிப்படியாகக் குரங்காக மாறிவிடமாட்டான்.

ஃ

வெட்டுக்கிளி, ஏழாலை மேற்கு.

கே: இலங்கைப் பிரதமர் பீகிங்கில் காரியசித்தியடைவாரா?

ப: நிச்சயமாக அடைவார். ஆனல் புது டில்லியில் சித்தி பெறுதல் சுலபமன்று.

கே: தமிழரசுக்கட்சி கொடுத்த யுத்த நிதியை ஏன் பிரபல்யமாக வெளியிடவில்லை?

ப: நிதி திரட்டுவது பறைசாற்றவா? இந்தியாவுக்கு உதவி செய்யவா?

ஃ

முஸ்தக்கின், கிண்ணியா.

கே: மூதூர் எம். பி. மஜீத் மண்ணை பூமியைப் பொன்னுக்கித்தருகிறேன்என்று கூறினரே! ஏன் அதைப்போல்செய்யவில்லை?

ப: பொன் விலை இறங்கி வருவதால் மண்ணைப் பொன்னுக்கிப் பயனில்லையென்றும், அதை 4 முழம் கயிருகத் திரித்தாலாவது பயன்படுமென்றும் கருதுகிருராம்.

ஃ

எம். அரசி, தாவது.

கே: பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா யாழ்ப்பாணம் வருவதற்கு ஏன் தயங்குகிருர்?

ப: தனது மந்திரி சபைச் சகாக்களுக்குக் கிடைத்த "கறுப்புக் கொடி வரவேற்பு" தனக்கும் கிடைக்குமோ என்ற பீதியில்...

ஃ

நா. ஜெயசீலன்,
காங்கேசந்துறை.

கே: 1963-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 17-ம் தேதி இலங்கை கொம்யூனிஸ்டுக்கள் என்ன செய்து கொண்டு இருப்பார்கள்?

ப: தமிழரசுத் தொண்டர்களைக் காட்டிக் கொடுக்கும் ஐந்தாம் படை வேலையில் தீவிரமாக ஈடுபடுவார்கள்.

ஃ

அ. அருட்சோதி, சுன்னுகம்.

கே: ராஜாஜிக்கும், நேருவுக்கும் உள்ள குணவித்தியாசம் என்ன?

ப: நேரு அதிக சித்தாந்தக் கண்ணேட்டமுள்ளவர், ராஜாஜி யதார்த்தப் போக்கையே கவனிப்பவர்.

ஃ

எஸ். எஸ். சுந்தரம்,
பருத்தித்துறை.

கே: மூன்று குண்டர்கள் கூட்டம், 'பொதுமக்களா'கக் காட்சியளிப்பது யாருக்கு?

ப: பாதை தடுமாறும் பத்திராதிபர்களுக்கு.

ஃ

கே. எஸ். இராசரத்தினம்,
மூளாய்.

கே: கடவுளைக் கோயிலில் தான் வணங்க வேண்டும் என்கிருள் என் தங்கை, மனக் கோயிலில் வைத்து வணங்கினல் போதும் என்கிறேன் யான், உமது அபிப்பிராயம் என்ன?

ப: இரண்டு கருத்தும் சரி. மனக் கோயிலில் வைத்து வணங்குமளவுக்கு மனவலிமையற்றவர்கள் கோயிலுக்குச் சென்று வணங்கலாம்.

ஃ

அமராவதி, யாழ்ப்பாணம்.

கே: குயுக்தியாரே! நான் தற்கொலை செய்ய விரும்புகிறேன். ஒரு முழம் கயிறு அல்லது ஒரு துளி பொலிடோலா சிறந்தது?

ப: செய்தியைக் கயிருகத் திரித்துக் கழுத்திலே சுருக்குப் போடத் தெரிந்த கேசரியாரைக் கேளுங்கள். அவர்கள் உங்களுக்குக் கை கொடுப்பார்கள்.

## நிம்மதி எங்கே உண்டு?

—ரீ. பாக்கியநாயகம்—

வாசலில் மணியின் ஓசை
வருதலே கேட்டு அங்கு
பாசமாம் அன்பு கொண்டு
பார்த்திடும் போது 'போஸ்ட்மன்'
வீசிடும் அஞ்சலைத்தான்
விரித்ததும் முகமே மாறும்;
நேசமாம் ஆசை அத்தான்
நேரெழுத் தங்கே இல்லை!

பள்ளியில் மணியின் ஓசை
பரபரத்திடவே செய்யும்;
மெள்ளவே நடை நடந்த
மென்சிறுர் எட்டி ஓடி
துள்ளியே விரைந்து போவார்
துடிப்புடன் அடிகள் வாங்க;
உள்ளமே உருகும், பின்னர்
ஒப்பாரி ஓலம் கேட்கும்!

ஆலய மணியைக் கேட்டு
அமைதியே சற்றுக் கொண்டால்
காலையில் அடிக்கும் 'அலாரம்'
காதையே துளைக்கும்; நீண்ட
சாலையில் செல்லும் சைக்கிள்
சப்தமே 'பொறுமைக் கொல்லை;
மாலையில் பீ. பி. ஸீயில்
மணிக்கூண்டின் பெரிய நாதம்.

மேசையில் 'கால்பெல்' ஓசை,
மோதினி எங்கும் ஓசை;
பூசையில் மணியின் ஓசை;
புவியெங்கும் 'டெலிபோன்' ஓசை,
ஆசையாய் தியேட்டர் சென்ருல்,
அங்குமே இந்த ஓசை,
நேசமாய்ச் சொல்வீர் ஐயா,
நிம்மதி எங்கே உண்டு?



பணக்காரன் முதல்


பாட்டாளி வரை

எல்லோரும் புகைப்பது
**கமலா பீடி**
ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
**கமலா ஸ்டோர்ஸ்,**
தந்தி தாமரை
நிர். 15, செட்டியார் தெரு. கொழும்பு-11.
தொலைபேசி 3597—6522




தாமரைக் குளத்தில் முகத்
தாமரை தவழ விழித்
தாமரை மலர நீந்தும் வல்லியே!—அந்தப்
பூமரப் பொதும்பர் விட்டு
மாமரத் தெழுந்த குயில்
காமுறத் தமிழ் பகலவில்லையா?—இந்தப்
பாமரன் விடுத்த தூது தொல்லையா?

வெண்ணிலா முகத் திரண்டு
கண்ணெனும் கரிய வண்டு
மின்னிடத் துயில் புனையும் கன்னியே!—உன்
வண்ண முத்து வெண்ண கையில்
என்னுளத்தை மோதவைத்துக்
கன்னமிட் டுயிர்கவர்ந்த தில்லையா?—அந்த
எண்ணமாய்த் துடித்தல் காதல் எல்லையா?

குங்குமத் திலகம் வைத்து
மங்களநற் கோல மிட்டுத்
தங்க விளக் கேற்றுகின்ற நங்கையே!—உன்
அங்க மெங்கும் பொங்கு கின்ற
துங்க எழிற் சோதி எனைச்
சிங்கமா யுணரவைத்த தேனடி?—ஒளி
சிந்திட முறுவல் செய்வ தேனடி?

வெட்ட வெளித் தோற்ற மிந்தக்
கட்டிளமை யென்று எத்தைத்
தட்டி விட நீசிரிக்க வில்லையா?—உள்ளே
கொட்டி விட்ட காதல் வெள்ளம்
செத்திடா தொளிரு மென்று
குத்துவிளக் கேற்றி வைக்க வில்லையா?—முதல்
முத்தமொன்றை நீ நினைக்க வில்லையா?

ஆவியைக் குடிக்கு மெழில்
ஓவியக் கொடிச்சி! கண்ணில்
காவியம் படைத்து வைத்த தேனடி?—புதுத்
தாவணி சரிந்து விழக்
காதணி குழைந் ததிரப்
பாகினைத் துழாவு கின்ற தேனடி?—பொங்கற்
பானையோ உனது உள்ளந் தானடி!










-சத்தியசீலன்-

இருள்கி ழிந்தது! துயிலெழுந்தவண்
இரைய நின்றது பறவைதங்குலம்!
அருள் எழுந்ததொர் படியெ ழுந்தது
அவனி எங்கணும் பரிதியின் கதிர்!

பனி மறைந்தது! ஒலி நிறைந்தது!
படியி லுள்ளவர் துயில் பறந்தது!
மனை சிறந்தது! செயல் மலர்ந்தது!
மகிழ்வில் மங்கல மொழி எழுந்தது!

இளைய மங்கையர் வளைகு லுங்குது!
எழிலை அங்கவர் காம்வ ழங்குது!
பழைய—மங்கையர் பணி, துலங்குது!
பளப ளென்றவர் அணி இலங்குது!

உழவர் நெஞ்சிடை உவகை பொங்குது!
உயரு தோளிடை கதிர்கு லுங்குது!
விழவி தென்றவள் விழி குலாவுது!
விடலை நெஞ்சிலவ் விழி புலாவுது!

கழையும், இஞ்சியும், கதலி, மஞ்சளும்
கழனி தந்ததொர் விளைவில் வந்தவும்
இழைய முன்றிலில் எழில் குழைந்தது!
இனிய பாலொடு கலம் நிறைந்தது!

குழலை வென்றவர் குநி சுழன்றது!
குமுகு,மென்றவண் அகில் மணந்தது!
தழல் எழுந்தது! தரளம் வெந்தது!
தமிழர் பொங்கலின் தகையுயர்ந்தது!

(வேறு)

வெடிபார் இடியா மெனவே
விழியாய் அடிநீ தமிழே!
முடியா துயில்முழ் கியதென் முதுநாள்
முதல்வி! புதுநாள் இதுகாண் எழுநீ!

படிமீ தினிலுன் புதல்வன்
பழிநா ணினையோ பகராய்.
எடிநீ எழு!நா ணமென; இதுநாள்
இளையுந் தமிழன் வினையுய்ந் திடுநாள்!

வழுவாய் உடையாய் பழையான்;
வருவான் இளையான்; பிழையான்.
கழுவாய் அறிவான்; கதிர்வே லுடனே
களமுற் றிடுவான்; களியுற் றெழுநீ!

பரிதிக் கதிர்முன் பனிபோல்
படரற் றிடுமே உடனே!
கருதிக் கருதிக் கவலைப் படலென்
கவிதைப் பொருளே அருளுற் றெழுவாய்!

புதிதா கியவிம் மமுதே
புசியாய்! புகழா டையுடு!
அதுபார்! அடியுன் கொடியேறுவதை
அழகுத் தமிழே துயில்விட் டெழுநீ!



# தமிழுரிமைப் போருக்கு பாதகம் விளைவிக்கும் செயலில் ஈடுபடாதீர்

# சாகித்திய மண்டலத் தமிழ் உறுப்பினருக்கு வேண்டுகோள்

இலங்கை இலக்கிய மன்றத்திலே (சிறீ லங்கா சாகித்ய மண்டலயவில்) புதிய உறுப்பினராகச் சேர்ந்த கலாநிதி அ. சதாசிவம் அவர்கள் அம்மன்றஞ் செய்யக் கருதும் தமிழ்ப் பணிகளைப் பத்திரிகைகளில் விளம்பரப் படுத்தியுளர். தமிழ் இலக்கியவளம், தமிழ் மொழி வளர்ச்சி என்பன பற்றி அவர் வெளியிட்ட கருத்துக்களிலுள்ள முரண்பாடுகள், பிறழ்ச்சிகள் முதலியவற்றை எடுத்துக்காட்டி நேரத்தையும் ஆற்றலையும் அவமாக்க நான் விரும்பவில்லை. தமிழ் மொழிக்குப் பெருங்கேடு சூழ்ந்திருக்கும் இந்நேரத்தில் இத்தகைய கருத்துப் போர்களும் மோதல்களும் தேவையற்றன; தீமையையும் விளைப்பன.

## பேதை செயல்

கண்களை விற்றுச் சித்திரம் வாங்கும் அறிவிலார் செயல் போலவும், வீடெரியும் போது வீணை வாசிக்கும் பேதை செயல்போலவும், பகைவர் செயலால், குற்றுயிராய்க் கிடக்கும் வீரன் ஒருவனைக் கொன்று விடுதற்குப் பகைவரின் கைப் பொம்மையாகி அவர்கள் கொடுக்கும் சர்க்கரை பூசிய நஞ்சை மருந்தென அவ்வீரனுக்கு ஊட்டும் துரோகியின் செயல் போலவும் திரு. சதாசிவம் அவர்கள் குறிப்பிடும் சாகித்திய மண்டலப் பணிகள் காட்சி அளிக்கின்றன.

இந்த உண்மையை எடுத்துக் காட்டித் தமிழினம் நடத்தும் பணிகளில் மறந்தும் ஈடுபடவேண்டாம் என அவரையும் அவருடன் சேர்ந்தோரையும் கேட்டுக் கொள்வதும், தமிழ்ப் பெருமக்களை இத்தகைய நயவஞ்சக நச்சுப் பணிகளுக்கு எவ்வித ஆதரவும் அளிக்த

**தமிழன்**

வேண்டாம் என வேண்டிக் கொள்வதுமே இப்பொழுது செய்யப்பட வேண்டியன. இதுதான், இந்நாட்டிலே தமிழ் மொழி உரிமையை மீண்டும் பெறவேண்டும் என்று எண்ணுகிற மானம் உள்ள—மனிதப் பண்புள்ள—ஒவ்வொரு தமிழனும் செய்ய வேண்டிய சிறந்த பணியாகும்.

மொழி வாழ்ந்தாலன்றோ அதனை வளப்படுத்தலாம்! மொழியின் வாழ்வு அழிக்கப் படும்போது அதனைக் காத்தற்குப் போரிடாமல் அதனை அழிப்போரின் கைப் பொம்மைகளாகி, அவர்கள் கொடுக்கும் பணத்திற்காக அதன் வாழ்வு அழிந்து கொண்டிருக்கும்போது அதனை வளப்படுத்தப்போகிறோம் எனக் குரலெழுப்புவோர் "பழியெனின் உலகுடன் பெறினுங்கொள்ளாத்" தமிழரின் வீரமரபுக்குத் துரோகஞ் செய்பவராவர்.

## எதிர்ப்புக்காட்ட வேண்டும்

இன்று இந்நாட்டில் தமிழின் நல்வாழ்வு கருதுபவர்கள் முதலிற் செய்ய வேண்டிய பெரும்பணி தமிழுரிமையைப் பெறுதற்குப் போராடுதலாகும். இப்போராட்டம் அரசியற் கட்சிகளுக்கு மட்டுமே உரியது என்று எண்ணுதல் கூடாது. மொழியுரிமை போன்ற அடிப்படை உரிமைகளை ஓர் அரசாங்கம் பறிக்கும்போது அவற்றாலே பாதிக்கப்படுவோர் யாவருமே கிளர்ந்து எழுந்து தம் உரிமையைப் பெறப் போராட வேண்டும்; உரிமையைப் பறிக்கும் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க மறுக்கவேண்டும். வாய்ப்பு உண்டாகும் போது அந்த அரசாங்கத்தை எதிர்க்க வேண்டும்; அது விரிக்கும் சூழ்ச்சி வலைகளிற் சிக்கி அழியாமல் விழிப்பாயிருக்க வேண்டும். கூலிப்படைகள் பெருகாமலும் பார்த்துக் கொள்ளவேண்டும்.

## அரசாங்கம் செய்யும் கொடுமைகள்

எனவே, எமது மொழியுரிமையை அழித்து, சட்ட உரிமையில்லாத மொழியாக அதனை ஆக்கி, மொழி உரிமைக்குப் போராடுபவர்களைப் படைபலத்தால் அடக்கி வருத்தி, "தமிழ் மொழியை நியாயமாக வழங்க உரிமை தருகிறோம்; தருகிறோம்" என்று இடையிடையே கூறி எதனையுஞ் செய்யாமல் ஏமாற்றி, பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய அரைகுறை தமிழ்ச் சட்டத்தையும் நடைமுறைக்குக் கொண்டுவராமல் மடுத்து, அரசகரும மொழித் திணைக்களத்திலுள்ள தமிழ்ப் பகுதியைச் செயற்படாமற் சிதைத்து எம் மினத்தை அடக்கி ஆளுதலையே நோக்கமாகக் கொண்ட சிங்கள அரசாங்கத்தின் சாகித்திய மண்டலம் செலவுக்குக்கொடுக்கும் "ஆயிரத்துச் சொச்ச" ரூபாவைப் பெறுவதற்காகச் சாகித்திய மண்டலத்துக்கு— அதனை நிறுவிய அரசாங்கத்துக்கு விளம்பரம் தேட வேண்டாம் எனவும், "இலங்[illegible] ரசாங்கம் தமிழ் இலக்கியத்தை வளர்க்கிறது; தமிழ்ப் பகுதிகளில் தமிழுக்கு விழா எடுக்கிறது" என்று பிறநாடுகளிலும் அரசாங்கம் பிரசாரஞ் செய்தற்கு உதவி செய்ய வேண்டாம் எனவும், தமிழுரிமைப் போராட்டத்தில் பங்கு கொண்டு தமிழ்த் தொண்டு புரியும் மாண்பும் மதுகையுமின்றேல் அதற்குப் பாதகம் விளைவிக்கும் போலி விழாக்களிலாகுதல் ஈடுபட வேண்

(5-ம் பக்கம் பார்க்க)

# மீண்டும் பொலீசாரின் அட்டகாசம்

## பெண்கள் மீதும் மிருகத்தனமான தாக்குதல்

**யாழ் பிரதேசம் நோக்கிப் பவனி வந்த வர்த்தக, உணவு, கப்பல், போக்குவரத்து அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்னவுக்கு தமிழ் பேசும் மக்கள் ஒன்று கூடித் தமிழரசுக் கட்சியின் தலைமையில் கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்புத் தெரிவித்தனர். அப்பொழுது பொலீசார் மக்கள் பிரதிநிதிகளையும், பெண்களையும், தொண்டர்களையும் மூர்க்கத்தனமாகத் தாக்கினர். இதன் விளைவாக நல்லூரைச் சேர்ந்த திரு. பழனியப்பன் என்னும் வாலிபர் ஒருவரும், ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. வீ. ஏ. கந்தையாவும் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்கள்.**

கடந்த வாரம் பிற்பகுதியில் கல்வி மந்திரி அல்ஹாஜ் பதியுதின் மாமூத் அவர்களும், வர்த்தக, உணவு, கப்பல், போக்குவரத்து மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன அவர்களும் யாழ் நகருக்கு விஜயம் செய்திருந்தார்கள்.

முன்னவரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டாமென்று முஸ்லிம் மக்கள் வேண்டிக்கொண்டதற்கு இணங்க அன்னாருக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதில்லையென்று முடிவு செய்யப்பட்டது.

பின்னவரின் வருகையோ அனுவசியமானது. ஒரு சில தமிழ்த் துரோகிகளின் அழைப்பின் மீது தமிழ் மக்களின் எழுச்சியைப் பரீட்சிப்பதற்காகவே வருவதாக அவரது விஜயம் அமைந்ததாலும், மேலும் இந்நாட்டில் சிறுபான்மை மக்களாகிய தமிழ் பேசும் மக்களுடைய உரிமைகளைப் பறித்து, நம்மை அடிமை மனப்பான்மையுடன் இந்த ஆட்சி பீடம் நடாத்துவதாலும் அமைச்சர் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது என்று முடிவு செய்திருந்தார்கள், இலங்கைத் தமிழரசுக் கட்சியினர்.

### அமைதியான ஆர்ப்பாட்டம்

தீர்மானத்திற்கு அமையக் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்திலும், பருத்தித்துறையிலும் வர்த்தக, உணவு, கப்பல், போக்குவரத்து மந்திரி கலந்து கொண்ட நிகழ்ச்சிகளில் அமைதியான முறையில் தங்கள் எதிர்ப்பைக் காட்டும் முகமாக மக்கள் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினர்கள்.

இந்த அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது இந்நாட்டின் பொலிசார் மிகவும் மோசமான முறையில் நடந்து, மக்கள் பிரதிநிதிகளையும், பொது மக்களையும், குறிப்பாகப் பெண்களையும் தாக்கியுள்ளார்கள்.

### விடுதலை வீரன் பழனியப்பன்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொலிசாரின் தடியடிப் பிரயோகத்தில் நல்லூரைச் சேர்ந்தவரான பழனியப்பன் என்னும் இளைஞர் மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த சத்தியாக்கிரகத்தின் போது பல இன்னல்களுக்கு ஆளாகியுள்ளார். கடந்த சத்தியாக்கிரகத்தில் முதல் நாள் அரசாங்க அதிபரின் மோட்டார் வண்டியின் முன் படுத்து, தனது கழுத்தைச் சக்கரத்தினுள் செலுத்த முற்பட்ட முதல் தொண்டர் சத்தியாக்கிரகத்தின் கடைசி நாள் இரவு இராணுவத்தினரின் கைவரிசைக்கு இலக்காகி உயிருக்கே ஆபத்தான நிலையில் இருந்தவர். தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவத்தின் அடக்கு முறை தாண்டவமாடிய நாட்களிலும் கூட தனது மோட்டார் வண்டியில் தமிழ் சிறி பொறித்துத் திரிந்த தன்மானத் தமிழ் வீரர் இவர். அன்று முதல் இராணுவத்தினரதும், பொலீசாரினதும் கைவரிசைக்குக் குறியாகி விட்டார்.

ஜனவரி 5-ம் திகதி மந்திரியின் வருகைக்கு மற்றத் தொண்டர்களுள் ஒருவராக நின்று கறுப்புக் கொடி காட்டினார் திரு. பழனியப்பன். மந்திரியின் மோட்டார் வண்டி தொண்டர்களைக் கடந்து சென்றதும், அமைதியாக நின்ற தொண்டர்கள் மீது குறுந்தடிப் பிரயோகம் நடத்தும் வண்ணம் உத்தரவிட்டனர் உயர்தர பொலீஸ் அதிகாரிகள். காத்து நின்ற பொலீசார் உத்தரவு கிடைத்ததும் தொண்டர்கள் மீது தமது தாக்குதலை ஆரம்பித்தனர். ஆண்—பெண் என்ற வேறுபாடு இன்றி உயர்தர பொலீஸ் அதிகாரிகளும், அவர்கள் சேவகர்களும் தமது கைவரிசையைக் காட்டத் தவறவில்லை. திரு. பழனியப்பனைக் கண்ட பொலீசாரும், பொலீஸ் அதிகாரிகளும் தங்கள் மூர்க்கத்தனமான தாக்குதலை நடாத்த முனைந்தனர்.

அவர் கையில் இருந்த கறுப்புக் கொடியைப் பிடுங்கி எடுத்துவிட ஐந்து பொலீஸார் ஒரே நேரத்தில் முனைந்தார்கள் முடியவில்லை. 'திருப்பூர் குமரன் பரம்பரையில் வந்தவன் நான்' என்பதை நிரூபித்து விட்டார் திரு. பழனியப்பன். திரு. பழனியப்பனின் செயல் பொலீஸாருக்கு மிகுந்த ஆத்திரத்தை ஏற்படுத்தியதும், அவரை நையப்புடைப்பதில் முனைந்தார்கள். அடித்தார்கள், உதைத்தார்கள் எதற்குமே அவ் வீரன் அசைந்ததாகத் தெரியவில்லை. எனவே பலர் ஒன்று கூடி அவனை யாழ் நகரின் வீதியிலே வீழ்த்தி, உதைத்து, மிதித்து உயிரற்ற பிணமாக்க முனைந்தார்கள். சதி நிறைந்த வீதியிலே பிறந்த மேனியுடன் மிதிபட்ட பழனியப்பன் அப்பொழுதும் தனது கையில் இருந்த கறுப்புக்கொடியைக் கைவிட்டான் இல்லை. இத்தனைக்கும் அந்த விடுதலை வீரன் செய்த ஒரேயொரு தவறு தமிழர் உரிமையைப் பறித்த, சர்வாதிகார மனப்பான்மை கொண்ட சிங்கள ஏகாதிபத்திய ஆட்சிபீடத்தின் அங்கமாகிய மந்திரிமாருக்குக் கறுப்புக் கொடி காட்டியதே.

இந்த அளவில் பொலீசாரின் அட்டகாசம் நிற்கவில்லை.



திரு. வீ. ஏ. கந்தையா

### மக்கள் பிரதிநிதிகள் கொலைக் குற்றவாளிகளா?

மக்களின் மதிப்புக்குரிய பிரதிநிதிகள் மீதும் பொலீசார் தங்கள் கைவரிசையைக் காட்டத் தவறவில்லை. ஊர்காவற்துறை தந்த உண்மை வீரன், சமயப் பற்று மிக்கவர், அகிம்சையில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட திரு. வீ. ஏ. கந்தையா மீதும் அநாகரீகமான முறையில் பொலீசார் தாக்குதல் நடாத்தியுள்ளனர். ஒரு பொலீஸ் உயர்தர அதிகாரி ஒருவர் அவரது கன்னத்தில், குற்றவாளிகளுக்கு அடிப்பதுபோல ஓங்கியறைந்தார். அப்பொழுது அவரது மூக்குக் கண்ணாடி எங்கோ மறைந்துவிட்டது. மற்றுமொரு பொலீஸ் அதிகாரி அவரது அடிவயிற்றில் பலமாகக் குத்தி அவரை நிலை தடுமாறச் செய்தார். வேறு ஒரு பொலிஸ் அதிகாரி அவரது முகத்தில் தனது கைகளால் இடித்த பொழுது, பல்லில் அடிபட்டு உதடு கிழிந்து, உதிரம் கொட்டியது. ஒரு பொலீஸ் அதிகாரி தனது பெயரைக் கூறிக் கொண்டு, "ஏதாவது உங்களால் செய்துவிட முடியுமா?" என்று சவால் விடுத்துக் கொண்டே தாக்கியிருக்கிறார். இவர்தான் சப்-இன்ஸ்பெக்டர் எஸ். ஐ. ஜேகார்.

இத்துடன் நிற்கவில்லை பொலிசாரின் தர்பார். வட்டுக்கோட்டை தந்த வீரத் தளபதி மீது ஒரே நேரத்தில் பல பொலிசார் தாக்குதல் நடாத்தி தங்கள் முஷ்டிகளாலும், முழங்கைகளாலும் பலம் கொண்டமட்டும் தாக்கினர். யாழ்ப்பாண உயர்தர பொலீஸ் அதிகாரியே முதலில் திரு. அமிர்தலிங்கத்தைத் தாக்கினர். தனது மோட்டார் வண்டிக்கு அண்மையில் செல்லும் பொழுது,



திரு. அ. அமிர்தலிங்கம்

அந்த உயர்தர அதிகாரி திரு. அமிர்தலிங்கத்தைப் பின் புறத்தில் தாக்கினர். அடுத்து, அடலேறு போன்ற சாவகச்சேரிப் பிரதிநிதி மீதும் உடுவில் பிரதிநிதி செயல்வீரர் திரு. வீ. தருமலிங்கத்தின் மீதும் தங்கள் கைவரிசையைப் பொலிசாரும் பொலிஸ் அதிகாரிகளும் தாராளமாகக் காட்டியுள்ளனர்.



திரு. வ. ந. நவரத்தினம்

அத்துடன் நிற்கவில்லை பொலீசாரின் செயல். பெண்கள் மீது திரும்பியது அவர்களின் பார்வை. உயர்தர பொலிஸ் அதிகாரிகள் உட்படப் பலரும் பெண்களைத் துன்புறுத்த முயன்றனர். சில பொலிசார் பெண்கள் மீது தடியடிப் பிரயோகமும் செய்தனர். பெண்கள் மீது

(9-ம் பக்கம் பார்க்க)

---

## தமிழுரிமை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டாம் என்றும் திரு. சதாசிவம் அவர்களையும் அவர்களைப் போன்ற தமிழறிஞர்களையும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

### தமிழ்த் துரோகிகள்

தமிழுக்குத் துரோகஞ் செய்வோர் பட்டியல் நீளாமற் பார்த்துக் கொள்ள வேண்டியது திரு சதாசிவம் போன்ற தமிழறிஞரின் கடனுமாகும்.

சாகித்திய மண்டலம் முன் போல; நூல்களுக்குப் பரிசிலளித்தல், சஞ்சிகை வெளியிடல் எனும் இருபணிகளையுங் கொழும்பிலிருந்து தன் பாட்டிற் செய்தாற் போதும். அதனைக் காவிச் சென்று தமிழ் மக்களின் தாயகத்தில் இறக்கி வேடிக்கையும் வினையும் விளைவிக்க வேண்டாம். கட்டுண்டோம்; கட்டை அறுக்க முயல்வோம்.

### அருவருப்பான செயல்

சுயநலத்தால் மதிகெட்டு, நிலையற்ற பதவியை நாடித் தமிழினத்தை அடக்கி ஒடுக்கும் அரசாங்கத்துப் "பாத பூசை" செய்யும் மானங்கெட்ட தமிழ் உத்தியோகத்தர் சிலரின் துணையால் இந்நாட்டில் தமிழையும் தமிழிசையையும் சைவத்தையும் வளர்க்கலாம் என்று கருதிச் சிலர் இவ்வுத்தியோகத்தர்களுக்குப் பந்தம் பிடிப்பது மடமையினும் மடமையாகும். இதைப்போன்ற அருவருப்பான செயல் வேறில்லை.

"குலம் சுடும் கொள்கை
பிழைப்பின்; நலம் சுடும்
நாண் இன்மை நின்றக்
கடை"

—தமிழ்மறை.

---

## பொங்கல் தந்த போதை!

—காசி. ஆனந்தன்—

தங்க நாளெனும் பொங்கல் நாள் வெறி
தந்ததால் உளம் வெந்து வார்த்தைகள்
பொங்கி வந்தன......வந்த போதையில்
பூட்டு தூள்படும் பாட்டு வந்தது!
எங்கடா தமிழ் இளைஞனே!......அட!
ஈடிலாதவர் நாடு வீழ்வதோ?
'வெங்களத்திடை சிங்களப் பகை
வீழும்' என்றொரு வேட்டு வையடா!

என்னடா தமிழ் இளைஞனே! உனை
ஈழ நாட்டிலோர் ஈன மானிடன்
சின்னவன் எனச் செப்பி வாழ்வதும்
சிங்களச் சிறை செய்து வைப்பதும்
என்னடா...அட! இன்னும் உன்னிடம்
ஏடு திட்டுமோர் எண்ண மில்லையோ?
அன்னை என்பவள் அன்று தந்த பால்
ஆண்டு தந்ததோ? மாடு தந்ததோ?

கூனி விட்டதோ வீரர் மார்புகள்?
குன்றி விட்டதோ மான வார்த்தைகள்?
நாணி விட்டதோ நாட்டு மேன்மைகள்?
நாறி விட்டதோ தமிழ வல்லமை?
தானை என்பது சாய்ந்து விட்டதோ?
தாவு போர்க்களம் ஒய்ந்து விட்டதோ?
பூனைபோல் உயிர் வாழ்வ தென்னடா?
பொங்கடா...துயர் பொடிகள் ஆகவே!

இந்த நாள்வரை வந்த தீமைகள்
இன்னுமா? அட...ஏது செய்தனை?
விந்தைதான்...ஒரு வீர மாமகன்
வீழ்ந்து பட்டதை என்ன சொல்லுவேன்?
பந்துபோல உதை பட்டு வாழவோ
பாண்டியன் உனைப் பெற்று விட்டனன்?
சிந்தையால் ஒரு வார்த்தை சொல்லடா...
சிறு போர்க்கவி நூறு செப்புவேன்!

செப்புவேன் ஒரு பாடல்...'வல்லமை
சேர்க!' என்றுரை செப்பு வேனடா!
ஒப்பிலாத போர் உறுதி நெஞ்சிடை
ஊற வார்த்தைகள் கூறுவேனடா!
முப்படைகளை மோத வெங்கனல்
மூட்டுவேன்! வெறி கூட்டு வேனடா!
செப்புவேனொரு பாடல்..... வீறுடு
செந்தமிழ்ப் படை சிந்து பாடவே!

# பேரில என்ன கிடக்கு?



தேவன் - யாழ்ப்பாணம்

"கந்தா! முருகா!! சண்முகா!!!

யாரோ உச்சரித்த இந்தப் பெயர்கள் அவனைத் திரும்பிப் பார்க்கச் செய்தன.

அவனுக்கு வீட்டிலே ஒரு மனைவி இருந்தாள். இரு அழகிய குழந்தைகளும் இருந்தன. ஒரு காலத்தில் போதிய வருவாயும் இருந்தது. எப்படியோ காலந்தள்ள முடிந்தது. அவன் செய்யும் தொழிலில் கேவலம் என்ன வந்தது!

மனிதர் கள்ளைக் குடிக்கிறார்கள். அவன் கள் இறக்கி வியாபாரம் செய்கின்றான். மது விலக்கு என்ற பேச்சு எப்போதாவது அங்கே அடிபடுவது உண்டு. யார் கவனிக்கிறார்கள்? மது விலக்குப் பிரசாரகர் ஒருவர் கூட்டத்துக்குப் போகும் வழியில் அவனுடைய 'கொட்டில்' ஒரு 'டோஸ்' அடித்து விட்டுப் போனதும் உண்டு. அவன் கடவுள் சந்நிதானத்தில் எல்லோரும் சமம் என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறான். ஆனால் அவனுடைய 'கொட்டில்' கடவுள் சந்நிதானத்துக்கும் ஒரு படி மேலே. பிரத்தியட்ச சமத்துவம் நிலவும் பூலோக சுவர்க்கம் அது.

அதிகம் படித்தவனல்ல. பள்ளிக்கூடத்துக்கு போவது உண்டு. அதனாலென்ன? அவன் செய்யும் தொழிலுக்கு பி. ஏ. படிப்பு தேவைப்படவில்லை. அத்தொழில் ஈனமானது என்று யாரும் சொன்னதுமில்லை, அப்படி அவன் நினைத்துப் பார்த்ததுமில்லை. நிம்மதியாய் வாழ்க்கைப் படகை ஓட்டிக் கொண்டு வந்தான்.

அவனுக்கு ஏனோ ஒரு ஆசை. தன்னுடைய பிள்ளைகளில் ஒன்று மேல் படிப்பு படிக்க வேண்டும் என்பது தான். கொஞ்சம் பணம், காசு சேர்த்து நல்ல வீடு கட்டியிருக்கிறான். அவன் குடிப்பதில்லை. இன்னும் கொஞ்சம் சேர்த்தால் மகனுடைய மேல் படிப்பு விஷயத்தைப் பார்த்துக் கொள்ளலாம். இன்னும் பிள்ளைகள் பிறந்தால்...? பிறக்காமல் எங்கே விடப் போகின்றேன்? அவனுக்கு இப்போது முப்பத்தெட்டு வயது தானாகிறது. அவளுக்கோ ஆக முப்பத்திரண்டுதான். பாதாளம் மட்டும் பாயும் பணம் அவனுக்குத் தேவைதான். யாருக்கு தான் தேவையில்லை?

அவள் சொல்வதில் நியாயம் இருக்கிறது. தலைவர் சமயம் மாறவில்லை. முந்திக் கண்டித்தவர்களிடம் பணம் வாங்கிக் கொண்டு புதிதாய் பெற்ற சிநேகிதத்தின் மூலம் அந்த 'சமூகத் துரோகி'களுக்கு அரசாங்க சலுகைகள் பெற்றுக் கொடுத்திருக்கிறார். அந்தத் தலைவர் கல் வீடு கட்டினது கூட போன மாதம் தான். ஒரு தொழிலும் செய்யாமல் எப்படி வீடு கட்டி முடித்தார்?

இப்படியிருக்கையில் தான் ஆலயப் பிரவேசம் என்ற கூச்சல் பிறந்தது. அடிக்கடி தங்களை ஆடு மாடுகள்போல உயர்ந்த சாதிக்காரர் நடத்துவதாக கேள்விப்பட்டான். அவனுடைய அனுபவம் அதுவல்ல. அவனுக்கு தன் 'கொட்டிலுக்கு' வருபவர்களில் பலர் ஆடு மாடுகள் போல் தோன்றுவதுண்டு. ஆனால் சமூக அமைப்பில் கீழ் தட்டு மேல் தட்டு என்பதைப் பற்றி அவன் சிந்தித்ததில்லை. அப்படி நினைத்துப் பார்த்தாலும் தன்னிலும் பார்க்க கீழ்த்தட்டிலிருப்பவர்களை அவனுக்குத் தெரியும். சோத்துக்கு வழியில்லாமல் இருப்பவன் பிராமணனாய் தானிருக்கட்டுமே, தனக்கும் பார்க்க கீழே என்பது அவன் பகுத்தறிவு வாதம். அவனுக்கு பகுத்தறிவு உண்டோ? அது இல்லாத பாமரன் என்று அவனுடைய தலைவர்கள் சொல்கிறார்களே!

அவனுடைய ஊரில் இருந்த ஒரு விநாயகர் ஆலயத்தை திறந்துவைக்க பல பெரியோர் திட்டம் தீட்டினர். அவனுக்கு ஒரு பெரிய வேடிக்கையாயிருந்தது. அந்த ஆலயத்தை திறந்தாலும் சரிதான், மூடினாலும் சரிதான். ஒரு பத்துப் பேர் உள்ளே போனால் கோவில் நிரம்பி விடும். அதை திறப்பதாமே!

கடவுள் என்று ஒருவர் இருக்கிறார் என்பது அவன் பிரச்சினையல்ல. அதைப் பற்றி அவன் ஆழமாய்ச் சிந்தித்ததும் இல்லை. அவனுடைய மனைவியின் முதல் பிரசவம் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் நடந்தது. அன்று மருதடிப் பிள்ளையாருக்கு அவன் தேங்காய் உடைத்தது மட்டும் மெய். இளமையிலிருந்தே தெய்வம் என்ற மேலான நியதி ஒன்றுக்கு பயந்து வாழ பழக்கப்பட்ட மனது.

"நீங்களெல்லாம் இம்மாதிரி விஷயங்களில் முன்னுக்கு நின்று உழைக்க வேண்டும்" என்று சொல்லிக்கொண்டு ஒரு சிறு கூட்டம் அவனை ஒரு நாள் அணுகியபோது அவனுக்கு பெருமையாய்இருந்தது. ...ழைப்பதெப்படி என்பது அவனுக்குத் தெரியாது அப்புறம் அவர்கள் சொல்லிக் கொடுத்த பிறகு புரிந்தது. அவர்கள் கொண்டுவந்த ஒரு 'லிஸ்டில்' தன் பெயரை எழுதி ஐம்பது ரூபா எனத் தொகையைக் குறிப்பிட்ட பிறகு தனக்கென வாழாப் பிறர் மனையாளன் என்ற உணர்ச்சி பிறந்தது. "நீங்கள் கட்டாயம் ஆலயப் பிரவேசத்திலன்று வந்து கலந்து கொள்ள வேண்டும்" என்று புத்திகள் பல தெரியக் கூறி விட்டு வந்தவர்கள் போய் விட்டார்கள். அன்றிரவு "சும்மா இளிச்சவாயன் மாதிரி சுளையா ஐம்பது ரூபாயை தூக்கி குடுத்துப் போட்..." என்று அவன் மனைவி கண்டித்ததிலும் நியாயமிருப்பதைக் கண்டான்.

அப்புறம் அவனும்குளித்து வெள்ளை வேட்டியணிந்து மனைவி பிள்ளைகள் சகிதமாக அந்தப் புனித தினத்தில் விநாயகரடி தொழுதான். ஒலிபெருக்கி, சொல்மாரி, நன்கொடையாளர் பட்டியலில் அவன் பெயர்-எல்லாம் அவனைத் தலைகிறங்கச் செய்தன. ஆனால் அன்றைய வியாபாரம்...? அந்த எண்ணமும் மனதில் ஒரு மூலையிலிருந்து கிளம்பிக் கொண்டேயிருந்தது. தன் பிள்ளை குட்டிகளுக்காகவாவது இதையெல்லாம் பொருட்படுத்தக் கூடாது என்று நினைத்துக் கொண்டான்.

பிறகு......அவன் பெரிய மனிதனானான். அடிக்கடி தலைவர்கள் அவனுடைய வீட்டுக்கு வரத் தொடங்கினார்கள். ஒரு அரை மந்திரி கூட அவனுடைய வீட்டுக்கு வந்து போனார். தேநீர் விருந்து அது இதென்று கையால் கரையவும் தொடங்கியது. மனைவி சில சமயம் "ஒரு சதத்துக்கு பிரயோசனமில்லாத வேலையாள்..." என்று முணுமுணுக்கிறபோது தன் மனைவி சொல்வது சரியா, தலைவர்கள் சொல்வது சரியா என்று சந்தேகப்பட்டிருக்கிறான். ஆலயப் பிரவேச விஷயமும் போகப் போக கேலிக் கூத்தாக அவனுக்குத் தோன்றலாயிற்று. அவன் காலையில் எழுந்து குளிக்கவோ, கோயிலுக்குப் போகவோ முயற்சிக்கவில்லை, வேறு யாரும் அந்த சுற்று வட்டாரத்தில் செய்ததாகவும் தெரியவில்லை.

தேர்தல் வந்தது, நல்ல வேளை! அவனைத் தேர்தலுக்கு நிற்கும்படி யாரும் கேட்கவில்லை. ஆனால் ஒரு குறிப்பிட்ட அபேட்சகருக்காக கச்சேரிக்குப் போனான். கட்டுக்காசு ஏதோ குறைகிறதென்று உதவி செய்தான். அவன் வீட்டிலிருந்தே கொடிகள் ஒட்டவும் திட்டங்கள் தீட்டவும் தொடங்கினார்கள். 'பெரிய மனிதத் தன்மையை'க் காப்பாற்ற தேர்தல் முடிவதற்கிடையில் இரண்டாயிரம் ரூபா வரை கையை விட்டு நழுவி விட்டது.

கொஞ்சம் சோர்ந்து போயிருந்த வேளை—மகனுடைய மேல் படிப்புப் பற்றிய எண்ணத்தைக் கைவிட வேண்டுமோ என்ற கவலை—கூடிக்கெடுத்த கூட்டம் மீண்டும் அணுகியது. 'புத்தமதத்திற்குஅரசாங்கம்சலுகைகள் பல வழங்குகிறது. அதைத் தழுவினோமானால் நமக்கு விமோசனம் பிறக்கும்' என்று அவர்கள் சொல்லும் போது தன் மகனுடைய மடியில் அரசாங்க உத்தியோகம் வந்து விழுந்து விட்டதாய்க் கனவு கண்டான். ஊர்வலம், மேளதாளம், பேச்சு, ஒலிபெருக்கி, புத்த விகாரை ஒன்றுக்கு அஸ்திவாரக்கல்-எல்லாவற்றுக்கும் அவன் கையால் இன்னொரு ஐந்நூறு ரூபா—ரொக்கமாகவா இருந்தது? மனைவிக்கு செய்து போட்டு அழகு பார்த்த நகைகள் அடைமானமாயின. குடும்பம் முழுவதையுமே அழைத்துச் சென்று, பேசப்பட்டதைப் புரியாமல் கைதட்டி, 'சாது சாது' என்று கூக்குரலிட்டு... வீட்டுக்கு வந்தால் 'தட்டு முட்டு' சாமான் எல்லாம் 'அரோகரா'. அங்கே யார் வந்திருக்க முடியும்? தலைவரோ "அவங்கள் ஆரோ கையாட்களை வைத்துச்செய்திருக்கிறாங்கள்" என்கிறார். மனைவியோ "கையாளெண்டா ஆர்? எல்லாம் எங்கடை ஆக்கள்தானே" என்கிறாள். எவ்வளவு நாளாய் பொறுத்திருந்து பார்த்தான்!

பொங்கல் வந்தது. புத்த கோயில் கட்டி முடியவில்லை. ஒரு கோயிலுக்கும் அவன் போனதில்லை. மனைவி "பொங்கலுக்குச் சாமான் வேண்டியாருங்கோவன்" என்று நச்சரிக்கிறாள். 'புத்த சமயி பொங்கல் கொண்டாடலாமா? தலைவர் ஒன்றும் சொல்லவில்லையே' என்று தயங்குகிறான்? "அவங்கள் எங்கடை வாலை உருவி விட்டதெல்லே. உங்களிட்டை பசையும் இப்ப இல்லை, இனி ஏன் வாறாங்கள்? அவங்கள் அண்டைக்கு சமயம் மாறினவங்களே?......இருந்தா, ஊரோடை ஒத்துப்போகவேணும். பிள்ளையளுக்காகவாவது பொங்கத்தான் வேணும். நீங்க பெரிய கடைக்குப் போட்டு வாருங்கோ" என்று தொல்லை கொடுக்கிறாள். அவள் சொல்வதில் நியாயம் இருக்கிறது. தலைவர் சமயம் மாறவில்லை. முந்தி கண்டித்தவர்களிடம் பணம் வாங்கிக்கொண்டு புதிதாகப் பெற்ற சிநேகிதத்தின் மூலம் அந்த 'சமூகத் துரோகி'களுக்கு அரசாங்கம் சலுகைகள் பெற்றுக் கொடுத்திருக்கிறார். அந்தத் தலைவர் கல் வீடு கட்டினது கூடப்போன மாதம்தான். ஒரு தொழிலும் செய்யாமல் எப்படி வீடு கட்டி முடித்தார்?

"அவன் கிடந்தானே......" என்று பஸ்ஸில் புறப்பட்டு பெரிய கடைக்குப் போய் மஞ்சளிலை, இஞ்சியிலை, சீனவெடியீறாக வாங்கி மூட்டை கட்டி வைத்துக் கொண்டு திரும்பும் போது நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வாசலில் அந்தப் பெயர்களை யாரோ உச்சரித்தார்கள்.

தன்னுடைய பிள்ளைகளுக்கு எந்தப் பெயர்களைச் சூட்டமாட்டாரோ, அந்தப் பெயர்களை தங்கள் பிள்ளைகளுக்குச் சூட்டி மகிழ்ந்த சமூகம் உள்ளே அனுமதிக்கப்பட்டு விட்டதால் வெளியே நின்று புலம்புகிறார். அவன்—கந்தனயிருந்து கந்தசாமியாகி விட்டவன்—அந்தக் கோயிலுக்குப் போனதில்லை. எந்த தேநீர்க் கடையில் பிரவேச உரிமை பெற்றானோ அங்கே தேநீர் குடிக்க அவன் கையில் பணமில்லை. ஒருவரிடம் போதியதிருந்தது. அவர் தான் அவனை ஒட்டாண்டியாக்கிய தலைவர்; இப்போது அரசாங்கத்துக்கு நந்திகேசுவரர். உரிமை—வெறும் அர்த்தமற்ற சொல்—மேடையலங்கார வார்த்தை—விமோசனம், கனவு—முன்பு அவனிருந்த நிலை எவ்வளவோ தேவலை என்று அவனுக்குப் பட்டது.

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி—அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்,

பாடப் புத்தகங்கள், மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகள் யாவும் கச்சிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதே அதற்கு உரிய இடம்:

**சுதந்திரன் அச்சகம்,**

தபால் பெட்டி 1183.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த,


கொழும்பு-12.

தந்தி : சுதந்திரன் போன் : 3411

**கலப்பற்ற உயர்தர அலுமினியம்**

**மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு**

இவற்றிற்கு




**டொலர்**

**அலுமினியப் பாத்திரங்கள்**

**டொலர் கோப்பரேசன்,**

14, டாம் வீதி, கொழும்பு-12.

# மலையகத்தில் தமிழரசுத் தொழிற் சங்கம்

## மக்களின் அவலநிலை உணர்ந்து தான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

"போற்றுபவர் போற்றட்டும்;
புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்;
தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து)
உள்ளம் என்றால
எடுத்துரைப்பேன்; எவர்வரினும்
நில்லேன்; அஞ்சேன்!"

என்ற தாரக மந்திரத்தைக் கைக்கொண்டுள்ள தமிழரசுக் கட்சி மலைநாட்டில் தொழிற் சங்கம் அமைக்கப் போவதற்கு ஒரு சிலர் கண்டனம் தெரிவித்த போதும் தன் கொள்கையை விட்டுக் கொடுக்காமல் அப் பகுதியில் தொழிற் சங்கம் அமைத்திருப்பது வரவேற்கக் கூடியதொன்றாகும்.

தொழிற் சங்க இயக்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றிய தமிழரசுத் தந்தை திரு.எஸ். ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் தமிழரசுக்கட்சி இப்படியானதொரு தொழிற் சங்கத்தை அமைக்கவேண்டிய தற்கான காரணத்தை வலியுறுத்தினார்.

ஒன்று: தற்போதைய அரசாங்கத்தின் இலங்கையர் மயக் கொள்கை.

இரண்டு: தோட்டக் குழந்தைகளின் கல்வி.

இவ்விரு காரணங்களை முன்னிட்டே நாங்கள் தொழிற் சங்கம் அமைக்க விரும்புகிறோம் என்று தமிழரசுக் கட்சி கூறியதிலிருந்தே அவ்விரு பிரச்சினைகளின் முக்கியத்துவம் விளங்குகிறது. இந்த உண்மையையறிய வேண்டுமாயின் நாம் கடந்த கால நிகழ்ச்சிகளை ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

### கட்டாயக் கல்வி

"மனித வர்க்கம் பாலர்களின் கால்கள் மூலம் முன்னேறிச் செல்கிறது" என்று ஒரு முதுமொழியுண்டு. அதாவது ஒரு நாட்டு மக்கள் முன்னேற வேண்டுமானாலுஞ் சரி, ஒரு இன மக்கள் முன்னேற வேண்டுமானாலும் சரி முதலில் பாலர்களை முன்னேற்ற வேண்டும்.

பாலனை முன்னேற்ற வேண்டுமானால் பாலனின் இயற்கை நாட்டங்களைப் பூர்த்தி செய்து அவனைத் தனக்கும் தான்வதியும் சமூகத்திற்கு பலனுள்ளவனாக ஆக்கவேண்டும். அவ்வாறு ஆக்குவதற்கு பாலனுக்குக் கல்வி புகட்ட வேண்டும். இதையே மனித உரிமைப் பிரகடனமும் வலியுறுத்து முகமாக "கல்வி உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. ஆரம்ப அஸ்திவாரக்கட்டங்களிலேனும் கல்வி இலவசமாயிருக்க வேண்டும். ஆரம்பக்கல்வி கட்டாயமாயிருக்க வேண்டும்" என்று கூறுகிறது.

### 'அறிவொளி'
### மட்டக்களப்பு

இதனாலேயே, ஒரு நாடு அந்நியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தபோதும், சுயாதீனமாக இருந்தபோதும் அங்கு வதியும் பாலர்களுக்குக் கல்வி அளிப்பதில் முன்னிற்கிறது என்பதை நாமறிந்து கொள்ளலாம். இந்த உண்மையையறிந்து கொண்டு தோட்டக் குழந்தைகளின் கல்விப் பிரச்சினையை அணுகுவோம்.

### பாடசாலைகள் தேசிய மயம்

அந்நியர் ஆட்சிக் காலத்திலிருந்த கல்வியை அகற்ற விரும்பிய ஆட்சியாளர் ஒரு தேசிய கல்வித் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வர முற்பட்டனர். தேசிய கல்வித் திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கையாக அரசாங்கம் தவிர்ந்த ஏனைய ஸ்தாபனங்களால் நடாத்தப்படும் பாடசாலைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டனர். பாடசாலைகளைப் பொறுப்பேற்பதற்கு அரசாங்கம் தீர்மானித்ததையறிந்த கற்றோரும், மற்றோரும் பெரிதும் கவலையடைந்தனர்; கண்டனம் தெரிவித்தனர். இருந்தும் பயன் என்ன? பாடசாலைகள் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டன.

பொறுப்பேற்கும்போது ஓரிரு முதலாம் இரண்டாம் தரப்பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளும் மூன்றாந்தரப் பாடசாலைகள் முழுமையும் அரசாங்கத்தாற் பொறுப்பேற்கப்பட்டன.

அத்துடன் தனிப்பட்ட ஸ்தாபனமோ அல்லது நபரோ இனிமேல் புதிய பாடசாலைகளைக் கட்டி நடத்த முடியாது என்றும் அறிவித்தனர். ஏனெனில் பாலர்கள் தேசிய கல்வித் திட்டத்திற்கமைவான கல்வியைப் பெறவேண்டும்.

தேசிய கல்வித் திட்டத்தின் படி ஆரம்பக் கல்வி அரசாங்கத்தாலேயே அளிக்கப்பட வேண்டுமென்று கூறப்படுவதாலேயேயாகும்.

அப்படியாயின் தோட்டக் குழந்தைகளின் பாடசாலைகள் ஏன் பொறுப்பேற்கப் படவில்லை? அப்பாடசாலைகள் மூன்றாந்தரப் பாடசாலைகளாகவும், அதற்குக் குறைந்த தரத்தையுடையதாகவுமே இருக்கின்றன. அங்கு பயில்பவர்கள் ஆரம்பக் கல்வியையே பெறுகின்றனர்.

### கமிஷன் சிபார்சு

இச் செய்கையானது தோட்டக் குழந்தைகள் தேசிய கல்வித் திட்டத்தில் சேர்க்கப்பட மாட்டா என்ற ஐயத்தை விளைவித்தது. இதைப்பற்றித் தலைவர்கள் பிரஸ்தாபித்தபோது படிப்படியாகத் தோட்டப் பாடசாலைகளும் தேசிய கல்வித் திட்டத்தில் சேர்க்கப்படும் என்று அரசாங்கம் உறுதி வழங்கியது.

ஆனால் இந்த உறுதி நிலைக்குமா என்ற நிலைக்கு எம்மை உந்துவது போன்று தேசிய கல்விக் கமிஷனின் சிபார்சு அமைந்திருக்கிறது.

தேசிய கல்வித் திட்டத்தின் படி ஒரு குழந்தை தன் தாய் மொழியிலேயே கல்வி கற்க வேண்டும். வேறு மொழியில் கல்வி பயின்றால் அது தேசிய கல்வித் திட்டத்தின் அடிப்படையையே தகர்ப்பதாக இருக்கும் என்று தாய் மொழிக் கல்வி பற்றிகூறப்படுகிறது. ஆனால் தேசிய கல்விக் கமிஷன் சிபார்சு செய்திருக்கும் தோட்டக் குழந்தைகளின் கல்வியானது இதற்கு முற்றிலும் மாறுபட்டதாகவேயிருக்கிறது.




### சிங்களத்தில் கல்வி போதனை

தேசிய கல்விக் கமிஷனின் சிபார்சு: தோட்டக் குழந்தைகள் அரசாங்க பாஷையாகிய சிங்களத்திலேயே கல்வி கற்க வேண்டும். அல்லாத பட்சத்தில் தோட்ட முதலாளிமார் அவர்கட்கு தமிழில் கற்பிக்க வசதி கொடுக்க வேண்டும் என்று கூறுகிறது.

இச் சிபார்சின்படி தோட்டக் குழந்தைகள் ஒரு அந்நிய மொழியில் கல்வி பயில வேண்டும். அல்லது அவர்களது ஆரம்பக் கல்வி முதல் உயர்தரக் கல்வி வரை தோட்ட முதலாளிமார் கற்பிக்க வசதி செய்து கொடுக்க வேண்டும்.

தேசிய கல்வித் திட்டத்தின்படி இது நடைபெற முடியாது. தேசிய கல்வித் திட்டத்தின்படி ஒரு குழந்தை தன் தாய் மொழியிலேயே கல்விகற்கவேண்டும். ஒரு குழந்தையின் ஆரம்பக் கல்வி அரசாங்கத்தாலேயே அளிக்கப்பட வேண்டும். அப்படியாயின் தோட்டக் குழந்தைகள் தேசிய கல்வித் திட்டத்தில் சேர்க்கப்படமாட்டார்களா என்ற ஐயம் மீண்டும் எழுகிறதல்லவா?

இந்த ஐயத்தைப் போக்கி தோட்டப்பாடசாலையையும் தேசிய கல்வித் திட்டத்தில் சேர்க்க நடவடிக்கை எடுக்குமாறு வற்புறுத்த வேண்டும். இந்நாட்டின் பொருளாதாரத்தில் 60% வருமானத்தைத் தேடித் தரும் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி அளிக்க வேண்டியது அரசாங்கத்தின் கட்டாய கடமையாகும்.

தற்போதைய தோட்டப் பாடசாலைப் பாடத் திட்டமும் ஆசிரியரின் தராதரமும் சிறந்த கல்வியை அளிக்க முடியாது. எனவே இந்நிலையை நீடிக்காமல் செய்வதற்கு அரசாங்கத்தை வற்புறுத்தவேண்டும்.

இந்த உண்மையை உணர்ந்து கொண்டவர்கள் அனைவரும் தமிழரசு தொழிற் சங்கம் அமைத்ததை மனமுவந்து வரவேற்பார்கள்.

---

## பொங்குமா இங்கு?

—ஈழக்குமார்—

பொங்கி வடிந்திடும் பாலினைக் கண்டுளம்
பூரித்து பாட்டாளி நிறைவினைக் கொளும்தை
திங்கள் முதல்தினம்; உலகெலாம் இன்றுயர்
திருவிழா கண்டிடும் பெருந்தினம்; ஆனாலும்
மங்கி மடிந்திடும் நிலையினில் மலையகம்
மாறாத் துயரினில் வாடியே துடிக்கையில்
பொங்கி வடிந்திடு மாயால்? உள்ளமும்
பூரித்து மகிழ்வினைக் கண்டிடுமா, இன்று?

மறந்தும் தன்சுகம் பாராது உழைத்திந்த
மண்ணதில் பொன்தனை விளைத்து வளர்த்தவர்
பிறந்த மண்ணதில் வாழ்ந்து முடித்திட,
பிறர்போல் இன்பங்கள் கண்டு மகிழ்ந்திட,
அறிவைப் பெருக்கிடும் கல்வி பயின்றிட,
அன்னையின் இன்ப மொழியை வளர்த்திட,
அறவே உரிமைகள் அற்றுத் தவிக்கையில்
அல்லலின் றிபால் பொங்கிடு மாஇங்கு?

கொட்டிய முத்துக்கள் போலவே கட்சிகள்,
கொள்கைகள் என்றுமே பிளவுண்டு சிதறியே
வெட்டுக்கள் குத்துக்கள் வளர்த்தங்கு தன்னின
வாழ்வில் உயர்வுக்கு வழிதனைத் தேடாது;
முட்டியும் மோதியும் ஒற்றுமை அழித்திட்டு
மூண்டிடும் நெருப்பென பகைவராய் வாழ்கையில்
மட்டிலா மகிழ்வுடன் உழைப்பவர் கூடியே
மாண்புடன் வைத்திடும் பொங்கலும் பொங்குமா?

நினைவுகள் சிதைந்திட்டு நிறைவதனை இழந்து
நெஞ்சமும் துயர்மிஞ்ச வெந்தணலில் பட்டபுழு
தனையொத்து தினந்தோறும் கண்ணீரில் மூழ்கி,
சற்றேனும் நிம்மதிதான் காணாது தவித்து,
மனம்போல பிறர்கூறும் இழிசொற்கள் கேட்டு
வாழ்வெல்லாம் இருள்சூழ வாடும்மலை நாட்டில்
மனைவிளங்க மகிழ்வோடு சேர்ந்துமே வைக்கும்
மாண்புடை தைப்பொங்கல் பொங்கிடுமா இங்கு?

வாழ்வுரிமை, நாட்டுரிமை, மொழியுரிமை யோடு
வளமூட்டும் கல்விநல உரிமைகளும் சேர்ந்து
சூழ்ந்திட்ட கட்சிமத பூசலுடன் கள்ளு
சுகமென்று குடித்துதினம் வெறித்திடலும் ஒய்ந்து
பாழ்பட்ட மடமைகளும் பழமைகளு மொழிந்து
பண்புநலம் பகுத்தறிவு ஒளிக்கதிர்கள் பொழிந்து
வாழ்வதனின் நிறைகண்டு மலையகத்தார் கூடி
மகிழ்வடையும் திருநாளே நற்பொங்கற் திருநாள்!

---


## "அரஸ்கோ"

குளிர்பான பவுடர்களையே வாங்கிப் பாவியுங்கள்



உங்கள் கைவசம் எப்பொழுதும் சில "அரஸ்கோ" குளிர்பானப் பவுடர் பைகளை வாங்கி வைத்திருந்தீர்களானால் விருந்தினர் வீட்டிற்கு வந்தவுடன் குளிர்பானம் வாங்கக் கடைக்கு ஓடவேண்டிய அவசியம் ஏற்படாது. மிகவும் சிக்கனமாகும்.

இன்றே வாங்கிப் பரீட்சித்துப் பாருங்கள்.

- ஒரேஞ் பார்லி
- லெமன் பார்லி
- ஸ்ரோபெறி
- ருஸ்ப் பெறி
- ஜிஞ்ஜர் பியர்
- கிறேப்
- அன்னாசி
- செறி
- பிளாக் கறனர்

**ஒரு பாக்கட் பவுடரின் விலை 10 சதம்**

தயாரிப்பாளர்

**அரஸ்கோ இண்டஸ்றீஸ்,**

பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

# வீரகேசரியின் விஷமப் பிரசாரம்: தமிழ் பேசும் மக்களின் கொதிப்பு

## எட்டப்பனின் சூழ்ச்சிக்கு பத்திரிகை பலி

## நாடெங்கும் பகிஷ்கரிக்க தீவிர ஏற்பாடு?

வர்த்தக நோக்கம் ஒரு புறமிருக்க, இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினரின் நலவுரிமைகளுக்காகவும், பொதுவாக இந்நாட்டிலுள்ள தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காகவும் போராடும் உன்னத நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே திரு. சுப்பிரமணியம் செட்டியார் வீரகேசரிப் பத்திரிகையை 33 ஆண்டுகளுக்கு முன் நிறுவினார்.

### எழுத்தில் உரிமை காத்தவர்கள்

சிறந்த பிரசங்கியும் நாவலாசிரியருமான திரு எச். நெல்லையா வீரகேசரியின் தலைமை ஆசிரியர் பீடத்திலமர்ந்து அதே உன்னத இலட்சியத்தை வலியுறுத்தி பத்திரிகையைக் கட்டி வளர்த்தார்.

தமிழ் மக்களின் உரிமைகளை வற்புறுத்தி அவர் எழுதிய ஆணித்தரமான தலையங்கங்களும், சிங்கள வகுப்புவாதிகளுக்குச் சுளீர் சுளீர் எனச் சாட்டையடி கொடுத்த 'ஊர்க்குருவி' பத்தியும், அவர் அடிக்கடி உபயோகிக்கும் 'சர்வ சிங்கள மந்திரி சபை' என்னும் பதமும் இன்னும் எம் காதுகளில் ஒலிக்கின்றன.

வீரகேசரி நிலை நிறுத்திய அந்த மரபைப் பிற்காலத்திலும் கட்டிக் காத்த பெருமை திரு கே. பி. ஹரனைச் சார்ந்ததாகும்.

இந்தப் பத்திரிகை ஜாம்பவான்களால் ஓர் இலட்சியப் பாதையில் வளர்த்துவிடப்பட்ட 'வீரகேசரி' இன்று எங்கே செல்கிறது? அந்த இலட்சியம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு இன்று அது ஒரு காக்கா பிடிக்கும் தாளாக மாறிவிட்டதே!

இன்றைய நிலைகண்டு வீரகேசரி அபிமானிகள் உள்ளம் வேதனை அடைகிறது. இன்று அது எடுப்பார் கைப்பிள்ளை. நிர்வாகத்திலும்சரி, ஆசிரியர் குழுவிலும் சரி தடியெடுத்தவனெல்லாம் தண்டக்காரனாகி விட்டான்.

ஒரு பத்திரிகையில் பொறுப்பான பதவிகளிலுள்ளவர்கள் தத்தம் சுய நல நோக்கங்களுக்காகப் பத்திரிகையைப் பயன்படுத்த என்று ஆரம்பித்தார்களோ அன்றே அப்பத்திரிகையின் அஸ்தமனமும் ஆரம்பமாகி விடும்.

### எமகாதக எட்டப்பர்

வீரகேசரியில் அடிக்கடி திடீர் திடீரென ஏற்பட்ட நிர்வாக மாறுதல்கள் பத்திரிகையின் வளர்ச்சியைப் படுகுழியில் தள்ளியது. சுயநலமிகள் வீரகேசரியைச் சுரண்டல் சுரங்கமாக்கிவிட்டார்கள். சுரண்டச் சுரண்ட பத்திரிகை தேய்ந்துகொண்டு போகிறது.

இதன் விளைவு, பத்திரிகை விரைவாக க்ஷீணித்துவந்தது தான். அந்த க்ஷீணிப்பைப் பூர்த்தி செய்ய தற்போது ஓர் எமகாதக எட்டப்பரும் பத்திரிகையினுள் நுழைந்துள்ளார்.

எந்தக் குறுக்கு வழியைக் கையாண்டாவது உடனடியாக பணத்தைத் திரட்டி விட வேண்டுமென்று சதா கனவு கண்டு கொண்டிருக்கும் இந்த சுய நலப் புலி வீரகேசரிக்கும் இன்று குழி தோண்டிக் கொண்டிருக்கிறது.

இவரது தந்திரோபாயங்களின் காரணமாகப் பத்திரிகை துரிதமாக வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறதாம். ஆங்கிலத்திலோ, தமிழிலோ எட்டாம் படிவத்தைக்கூட தாண்டாத இந்த ஆசாமி சூழ்ச்சியிலும், தந்திரத்திலும், சதி வேலைகளிலும் கைதேர்ந்தவராவார்.

### வீழ்ச்சியடைகிறது

செய்திகளைத் திரித்து, பொய்யும் புனைசுருட்டும் கலந்த விஷமத்தனமான செய்திகளையும், தலைப்புகளையும் வெளியிடுவதால் வாசகர்களின் அபிமானத்தைப் பத்திரிகை பெருமளவு இழந்துவிட்டதென்றும், விற்பனை மளமளவெனச் சரிந்துகொண்டிருக்கிறதென்றும், வெளியூர்களிலிருந்து எமக்குக் கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

"சிறப்பிலும், மதிப்பிலும் வாசகர் தொகையிலும் முன்னணியில் நிற்கிற" தென்று பறைசாற்றிக் கொள்ள வேண்டிய பரிதாபகரமான நிலைக்கு வீரகேசரி வந்துவிட்டது.

இதெல்லாம் பத்திரிகையின் வளர்ச்சியைக் குட்டிச் சுவராக்க அந்த எட்டப்பன கையாளும் நாசகரமான உபாயமாகும்.

### எங்கே உங்கள் விற்பனை அத்தாட்சி?

பத்திரிகை விற்பனை வீழ்ச்சியடைந்துவிட்டதென்பதை "அதிலும் இதிலும் எதிலும் முன்னணி" என்ற பதங்களே எடுத்துக் காட்டுகின்றன. இல்லையேல் முன்பு செய்ததைப்போல பத்திரிகை விற்பனையின் ,ஏ. பி. ஸி. அத்தாட்சிப் பத்திரத்தை ஏன் பகிரங்கமாக வெளியிடக் கூடாது?

"தினகரன்" பத்திரிகை, அத்தாட்சிப் பத்திரத்தைப் பகிரங்கமாக வெளியிட்டு, விற்பனையாகும் பிரதிகள் தொகையை பொதுமக்களுக்கு நிரூபித்து, "இலங்கையில் அதிகம் விற்பனையாகும் அத்தாட்சி பெற்ற ஒரே தமிழ் தினசரி "தினகரனே" என்று முதல் பக்கத்தில் பிரகாசமாகப் பிரசுரித்து, வீரகேசரிக்குச் சவால் விட்டிருக்கிறதே!

அச்சவாலை ஏற்று வீரகேசரியும் விற்பனையாகும் பிரதிகள் தொகையை (வாசகர்கள் தொகையை அல்ல) அத்தாட்சிப் பத்திரத்துடன் வெளியிடுமா?

முடியாது—ஏன்? அதற்குக் காரணம் விற்பனை வீழ்ச்சியடைந்ததைத் தவிர வேறு என்ன இருக்க முடியும்?

### சபதம் நிறைவேற்ற வீரகேசரியா?

"எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம்" என்பதைப் போல எமகாதக எட்டப்பன் பத்திரிகையின் வீழ்ச்சியைப் பயன்படுத்தி, அதனைத் தனக்காக உபயோகித்துக்கொள்ளுகிறார். ஆறே மாதத்தில் தமிழரசுக் கட்சியை ஒழித்துக்கட்டுவேன் என்ற தனது சபதத்தை நிறைவேற்ற வீரகேசரியைக் கருவியாக உபயோகிக்கிறார்.

சிங்கள மக்களிடையே செல்வாக்கிழந்து செல்லாக் காசாகிவரும் மந்திரிகளை தமிழ் பேசும் மக்கள் ஏகோபித்து ஆதரிக்கிறார்கள் என்ற இமாலயப் பொய்யைப் பிரசாரம் செய்ய இந்த எமகாதகர் வீரகேசரியைப் பயன்படுத்துகிறார்.

தமிழ் பேசும் மக்களின் பேராதரவைப் பெற்று ஈடு இணையற்று விளங்கும் தமிழரசுக் கட்சி பொது மக்களுக்கு விரோதமான கட்சி என்று பிரசாரம் செய்யவும் அந்த நபர் வீரகேசரியைக் கருவியாக்கிக் கொண்டுள்ளார்.

### பகிஷ்காரம், சொக்கப்பனை

இந்த விஷமத்தனமான பொய்ப் பிரச்சாரத்தைக் கண்டு தமிழ் பேசும் மக்கள் பெரிதும் கொதிப்படைந்துள்ளனர் என்ற தகவல் தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து கிடைத்துள்ளது.

தமிழ் பேசும் மக்களையும், பத்திரிகையின் வாசகர்களையும் மதியீனர்கள் என்று நினைத்து இம்மாதிரியான செய்திகளை வெளியிடுவதால் பத்திரிகை படுபாதாளத்தில் விழுந்து விடுமென்பதில், ஐயமில்லை.

மக்கள் எவ்வளவு தூரம் கொதிப்படைந்திருக்கிறார்களென்றால், வீரகேசரியைக் கட்டுக்கட்டாகத் தெருவிலே போட்டு சொக்கப்பனை கொழுத்தவும், அதனை பகிஷ்கரிக்கவும் ஏற்பாடுகள் வெளியூர்களில் செய்கிறார்களாம்.

பொய்ச் செய்திகளைப் பரப்பி தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டங்களைப்பலவீனப்படுத்தும்வீரகேசரியை தமிழ் பேசும் மக்கள் முற்றாகப் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற கருத்து தமிழரசுத் தொண்டர்களிடையே வலுவடைந்து வருகிறதாகவும் அறியப்படுகிறது. பகிஷ்கார முயற்சியில் பெரும் பங்கு கொள்ள விருப்பவர்கள் மலையக தமிழ் மக்கள் தானும். தோட்ட மக்கள் வீரகேசரியின் போக்கில் பெரிதும் அதிருப்தி கொண்டுள்ளனர் என்று மலையகச் செய்திகள் கூறுகின்றன.

### வர்த்தகர்கள் அதிருப்தி

கொழும்பிலுள்ள தமிழ் வர்த்தகர்கள்,குறிப்பாகஇந்திய வர்த்தகர்கள் வீரகேசரியின் போக்கு இலங்கைவாழ் இந்தியர்களின் நலன்களுக்கு மாறானதெனக் கருதுகிறார்கள்.

மந்திரிமார்களுக்கும் இதர சிங்கள வகுப்புவாதிகளுக்கும் காக்காய் பிடித்து, அவர்களைத் திருப்திப்படுத்தி, தனக்குச் சலுகைகளைப் பெறுவதற்காக எமகாதக எட்டப்பன் வீரகேசரியைத் தாராளமாகப் பயன் படுத்துகிறார். அதனை வீரகேசரியின் தற்போதைய நிர்வாகமும் அனுமதித்திருக்கிறது என்று தெரிகிறது. அத்தகைய நிர்வாகத்தின் வீரகேசரியின் முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியாது தான்.

இதன் விளைவாக விரைவில் பத்திரிகைக்கு மூடு விழா நடத்த வேண்டிய தேற்படும் என்பதை நிர்வாகிகளும், வீரகேசரியின் வாழ்விலோ தாழ்விலோ அக்கறை காட்டாது ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கும் பத்திரிகை அதிபர் திரு. சுப்பிரமணியம் செட்டியாரும் எவ்வளவு விரைவில் உணர்கிறார்களோ அவ்வளவு விரைவில் வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்தலாம்.

வீரகேசரியின் வளர்ச்சிக்காக இரவு பகல் பாராது பல்லாண்டுகளாக உழைத்து உழைத்து ஓடாகிய சிப்பந்திகளுக்கு இழைத்த மனிதாபிமானமற்ற அநீதிகளும், அவர்கள் இன்று தெருவிலே நின்று சிந்தும் இரத்தக் கண்ணீரும் வீண்போகாதல்லவா? அந்தப் பாவம் தான் இன்று வீரகேசரியைச் சூழ்ந்து கொண்டுள்ளது.

---

"வீரகேசரி" என்னும் தமிழ்த் தினசரி மீண்டும் விஷமப் பிரசாரம் செய்யத் தொடங்கியுள்ளது. வர்த்தக மந்திரியும், கல்வி மந்திரியும் இம்மாதம் 5ந் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ததை ஆட்சேபித்து நடத்தப்பட்ட கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டச் செய்தியையும், பொலீஸ் தடியடியையும் விஷமத்தனமாகத் திரித்து பொய்யையும், புளுகையும் சேர்த்து கற்பனைக் கதை புனைந்து வெளியிட்டுள்ளது.

"ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொதுமக்கள் ஆவேசம்—மோதல்" என்று பெரிய தலைப்பிட்டு முன் பக்கத்தில் (6.1.63) புளுகு மூட்டையை அவிழ்த்து விட்டிருக்கிறது. ஆர்ப்பாட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்கள் கொதித்தெழுந்தனரென்றும், அதன் விளைவாகவே குழப்பம் ஏற்பட்டதென்றும், குழப்பநிலையிலேயே பொலிசார் குண்டாந்தடிப் பிரயோகம் செய்தனரென்றும் இப் பத்திரிகை புளுகுகிறது. மந்திரிகளுக்குத் தமிழ் மக்கள் எல்லோரும் ஏகோபித்து ஆதரவளிக்கின்றனர் என்று பொருள் படும்படியாகக் கயிறு திரிக்கும் வீரகேசரி, அரசாங்கத்துக்கும் அமைச்சர்களுக்கும் மிகவும் கீழ்த்தரமான, கேவலமான முறையில் பந்தம் பிடிக்கிறது. வீரகேசரியின் இந்தப் பல்டிக்குக் காரணம் சமீபத்தில் அந்தப் பத்திரிகையின் பொறுப்பான ஒரு பதவியிலமர்ந்த, பந்தம் பிடிக்கும் கலையில் நிகரற்ற, ஓர் எட்டப்பன் தான் என்று கூறப்படுகிறது.

---

## பீகிங்கில் பிரதமரின் விருந்துபசாரம்

### இங்கிருந்து 20,000 ரூபாய் பறந்தது!

பீக்கிங்கில் இலங்கைப்பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா விஜயம்செய்தபோது, பிரதமரின் விருந்துபசாரத்துக்கென ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து ரூபாய் 20,000 உடனே அனுப்பும்படி இலங்கைக்கு தந்தி கொடுத்திருந்தார். பீக்கிங்கிலுள்ள சீன உத்தியோகத்தர்களுக்கும், இலங்கையருக்கும் அளிக்கப்பட்ட விருந்து வைபவமொன்றுக்கே பிரதமர் இத் தொகையை உபயோகித்துள்ளார்.

நாட்டு மக்களை வயிற்றைக்கட்டி வாயைக்கட்டி வாழவேண்டுமெனக் கேட்டுவிட்டு, அதுவும் முக்கியமாக வெளிநாடுகளிலிருந்துவரும் பொருட்கள் சம்பந்தமாக- பிறகு, இலங்கையிலிருந்து பிரதமர் பணம் கேட்டிருப்பது அவ்வளவு விவேகமான காரியமல்லவென்று அரசாங்க எம். பிகள் கருதுகிறார்களாம்.

அப்படி அவசரம் பணம் தேவைப்பட்டிருந்தால், பீக்கிங்கிலுள்ள இலங்கை தூதுவரின் விருந்துபசாரப்பணத்திலிருந்தே உபயோகப் படுத்தியிருக்கலாமென்பதே அரசாங்க எம். பிகளின் கருத்தாகும்.

---

## மூதூர் முதல் எம். பீ. யின்

### அவசர வேண்டுகோள்

வட—கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து பெய்து வரும் பெருமழை காரணமாகப் பல பாகங்களில் மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

மூதூர் பகுதியில் பல கிராமங்களில் மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்த மூதூர் முதல் எம்.பி. ஜனாப் முகமதலி அப்பகுதி மக்களுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்கும் வண்ணம் அப்பகுதிக் காரியாதிகாரி, அரசாங்க அதிபர் மற்றும் உத்தியோகஸ்தர்களுக்கு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

---

## வீரகேசரிப் பகிஷ்கரிப்பு

சென்ற 5-ம் திகதி காலை பருத்தித்துறையில் நடந்த கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் பற்றி கேசரியின் யாழ் நிருபர் அனுப்பிய செய்திகளுக்கு மாறாக வீரகேசரி பத்திரிகையாளர் செய்தியைத் திரித்தும் புனைந்துரை பல கலந்தும் பிரசுரித்துள்ளனர்.

இது மக்களை ஏமாற்ற முற்பட்ட முதல் நிகழ்ச்சி அல்ல. பலமுறை பொறுத்துப் பார்த்தனர் பொறுமைக்கு அணிகலனான தமிழ் பேசும் பெரு மக்கள். ஆனால் அறவழி வழுவினோர் திருந்துவதாக இல்லை. எனவே இப் பத்திரிகையைப் பகிஷ்கரிப்பதென்ற முடிவான முடிவிற்கு வந்துள்ளனர் பல தமிழ் பேசும் மக்கள்.

குறிப்பு:- இந்த முடிவிற்கு சுதந்திரன் முழு ஆதரவும் கொடுப்பதுடன் கேசரி பற்றி மறைந்துகிடக்கும் அந்தரங்கங்களைப் பொது மக்களுக்குத் தொடர்ச்சியாக வெளிப்படுத்துவது என்ற முடிவிற்கும் வந்துள்ளது. உண்மை நிலைக்க வேண்டுமென்று எண்ணுவோர் அனைவரும் இவ்வியக்கத்திற்கு தங்கள் ஒத்துழைப்பை நல்குவார்களென எதிர்பார்க்கிறோம்.

—ஆர்.


# மந்திரிக்கு ஆலவட்டம் பிடித்தவர் யார்?

—0—

## தமிழ் விரோதிகளின் தன்மானமற்ற செயல்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிசார் அநாகரிகமான முறையில் தாக்குதல் மேற்கொள்வது நம் நாட்டைத் தவிர வேறு நாடுகளில் இற்றைவரை நடைபெற்றதேயில்லை. இந்த அளவிற்கு தமது நாட்டுப் பொலீஸ் அமைதியையும் ஒழுங்கையும்



திரு. க. துரைரத்தினம்

நிலைநாட்டுவதிலும், நாகரிகமான முறையில் பொதுமக்களுடன் நடந்து கொள்வதிலும் வளர்ந்துள்ளார்கள்.

பருத்தித்துறையிலும் மந்திரி இலங்கரத்தினவுக்குக் கறுப்புக் கொடி காட்டப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள்: க. துரைரத்தினம், வி. ஏ. கந்தையா, அ. ந. நவரத்தினம், வி. தர்மலிங்கம், அ. அமிர்தலிங்கம் மற்றும் திருவாளர்கள்: க. ஜெயக்கொடி, இ. க. இராசசேகரம், எஸ். நடராசா, எஸ். சிவானந்தசுந்தரம், கே. செல்லையா உட்பட ஆயிரக்கணக்கில் ஆண்களும் பெண்களும் திரண்டு வந்து தங்கள் எதிர்ப்பைக் காட்டும் முகமாக அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மந்திரியை அழைத்திருந்த பட்டின சபைத் தலைவருக்கும் அவரது திருக்கூட்டத்தினருக்கும் இச் செயல் ஆத்திரத்தை ஊட்டியது மட்டுமல்ல, நிதானத்தையும் இழக்கச் செய்துவிட்டது. நிதானத்தை இழந்த இவர்கள் தொண்டர்களுடன் பொருதவும் முற்பட்டனர், பொலிசாரின் உதவியுடன்.

பருத்தித்துறைப் பட்டின சபை அங்கத்தவர் திரு. சின்னத்துரை, தமிழரசுக் கட்சி நிர்வாகச் செயலாளர் திரு. சிவானந்தசுந்தரத்தை இரு தடவை மிருகத்தனமான முறையில் தாக்கியுள்ளார். இவையனைத்தையும் பொலிசார் பார்த்தும் பாராமுகமாக இருந்துவிட்டனர்.

மக்களை ஒழுங்கு படுத்துவது என்ற முறையில் பொலிசார் மக்களுடன் மிகவும் கேவலமான முறையில் நடந்துள்ளனர். அநேக பொலிசார் குண்டாந்தடியுடன் கடமையினைப் புரியுமாறு மேலதிகாரிகளால் கட்டளையிடப்பட்டனர். வீதியின் இரு மருங்கிலும் கறுப்புக் கொடி சகிதம் நின்ற மக்களை, வீதியின் தெற்கு பக்கம் நிற்க வேண்டாம் என்று மிருகத்தனமான முறையில் அப்புறப்படுத்தினர் பொலிசார். மேலும் வீதியின் மறுபுறம் நின்ற மக்களையும் பின் நோக்கிச் செல்லுமாறும் பொலிசார் பலவந்தப்படுத்தினர். இந்நிலையில் பொலிஸ் அதிகாரியொருவர் திரு. ஜெயக்கொடியுடன் பலாத்காரமான முறையில் நடக்க முற்பட்டார்.

இத்தனை ஏற்பாடுகளின் பின்னரே மந்திரி, வாத்தியகாரர் உட்படப் பதினைந்துக்கும் குறைந்தவர்கள் புடைசூழ, அழைத்து வரப்பட்டார். இத்தனைக்கும் மந்திரிக்கு அணிவிக்கப்பட்ட சில மாலைகளும் பட்டின சபைத் தலைவரினால் முன்னேற்பாடாகக் கொடுத்து வி[illegible]கப்பட்டவையே.

ஊர்வலம் மக்களை நெருங்கி வருகையில், மக்கள் கறுப்புக் கொடியை



திரு. எஸ். சிவானந்தசுந்தரம்

உயர்த்தி, அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்தனர். இச்சமயம் திரு. அமிர்தலிங்கத்தின் கையிலிருந்த கறுப்புச் கொடியைப் பலவந்தமாகப் பறித்தார் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர். ஆனல் கொடியைத் திருப்பிப் பெறும் வரையில், அவ்விடத்தை விட்டு நகர முடியாது என்று திரு. அமிர்தலிங்கம் பிடிவாதம் பிடிக்கவே, கொடி திருப்பிக் கொடுக்கப்பட்டது.

இந்நிலையிலேயே பட்டின சபைத் தலைவரின் கையாட்கள்—அவருடைய படமாளிகையில் கடமையாற்றுபவர்களும், வேறு சில வேலையற்றவர்களும்—மக்கள் மத்தியில் புகுந்து தொண்டர்களைத் தாக்கினர். இவை அனைத்திற்கும் தலைமைதாங்கியவர் பட்டின சபை அங்கத்தவரேதான். தொண்டர்களுக்குச் சிறு காயம் ஏற்பட்டபோதும், அவர்கள் தங்கள் கடமையில் தவறவில்லை.

இத்தனை ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியிலேயே இவர்களால் விழா எடுக்கவும், வரவேற்பளிக்கவும் முடிந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில், இவ்வரவேற்பை மந்திரிமாருக்கு விழுந்து விழுந்து அளிக்க முன்வந்த பேர்வழிகள் யாரென்பதையும், அவர்கள் எத்தகையவர்கள் என்பதையும் தமிழ் பேசும் மக்கள் அறிந்துகொள்ளவேண்டியது அவசியமாகின்றது.

வரவேற்பு விருந்துபசாரத்தில், முன்னின்று தலைமை தாங்கிய பட்டின சபைத் தலைவர், வருமான வரி இலாகாவுக்கு வழி சொல்லத் தெரியாது, பெருந் தொகை பணத்தை விழுங்கியவராம்! ஆகவே வருமான வரி இலாகாவுக்கு 'டிமிக்கி' கொடுக்கவும், தனது குற்றத்தை மூடி மறைக்கவும், மந்திரிமாரை 'வால் பிடிப்பதை'விடச் சிறந்த வழி இருக்க முடியுமா? ஆகவே, மந்திரிமார் பருத்தித்துறைக்குத் திக்விஜயம் செய்தபோது, இந்தத் தலைவர் அவர்களின் வாலே கதியென்று, அதில் பிடித்துக் கொண்டு, வால் ஆட்டிய இடமெல்லாம் தானும் இழுபட்டார்.

இவருக்கு உறுதுணையாக விளங்கிய மற்ற வரவேற்பாளர்கள் யார்? அவர்களும் தமது தலைவருக்குக் குறைந்தவர்களல்ல—புரட்டுக் கைங்கரியத்தில். தலைவரையும் மிஞ்சிய சிஷ்யர் என்றுதான் அவர்களை நாம் அழைக்க வேண்டும்.

கடல் கடந்து வாணியம் செய்த தமிழர் மரபுக்கு இழுக்குத் தேடித்தரும் வகையில், கடல் கடந்து 'கள்ளக் கடத்தல்' செய்யும் பிரமுகர்கள் தாம், இத்தலைவரின் சகாக்களாவர். அவர்களுக்கும் மந்திரிமாரின் அனுசரணையும், ஆதரவும் தேவைதானே?

தமிழ் மக்களே! மந்திரிமாருக்கு வரவேற்பு அளித்த (ஒரு தினசரியின் கூற்றின் படி) 'பொது மக்கள்'யாரென்பது இப்பொழுது உங்களுக்குப் புரிந்துவிட்டதல்லவா?

---

## அடுத்த இதழில்

**தமிழ் மக்களின் முதலாம் எதிரி வீரகேசரியின் இதுவரை மறைக்கப்பட்டு வந்த அந்தரங்கங்கள் வெளியாகும்.**

**உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்**

---

### குழந்தைகளுக்கான கலைக் களஞ்சியம்

தமிழ் வளர்ச்சிக் கழகம் 1947-ம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து பணியாற்றியதன் மூலம் ஒன்பது பாகங்கள் கொண்ட தமிழ்க் கலைக் களஞ்சியத்தை வெளியிட்டுள்ளது.

இப்பொழுது குழந்தைகளுக்கான கலைக் களஞ்சியம் ஒன்றை வெளியிடும் முயற்சியில் முனைந்துள்ளார்கள்.




# தமிழர்கள் இந்நாட்டுக் குடிகளல்லர் என்கிறது ஆட்சி பீடம்

## நாளை முஸ்லிம்களையும் அப்படியே சொல்லாது என்பது என்ன நிச்சயம்?

—அல்ஹாஜ் வி. எம். ஷம்சுத்தீன்—

தமிழர்கள் இந்நாட்டின் குடிகளல்லர் என்று கூறும் ஆட்சியாளர், நாளை தமிழ் பேசும் இனத்தின் ஒருஅங்கமான முஸ்லிம்களும் அப்படியே என்று கூறத் தயங்கமாட்டார்கள். எனவே தமிழ் பேசும் மக்கள் தங்கள் விடுதலைக்கு ஒரே கட்சியின் கீழ் நின்று செயல்பட வேண்டும். அதுவும் தமிழரசுக் கட்சியின் தலைமையிலேயே, என்று வற்புறுத்திக் கூறியுள்ளார் முஸ்லிம் மக்களின் மதிப்புக்குப் பாத்திரமான இக்கட்டுரையாசிரியர்.

"தேமதுரத்தமிழோசை உலக
மெல்லாம்
பரவும் வகை செய்தல்
வேண்டும்"
பாரதியார்.

ஆதிகாலத்து மனிதன் உலகத்தைப் பற்றியும், அதன் தோற்ற எடுக்கத்தைப் பற்றியும் சிந்தித்தான்; இயற்கையின் நிகழ்ச்சிகளை அதிசயத்தோடு நோக்கினன். சூரியனின் உதயம், நிலவின் உதயம், மழையின் வீழ்ச்சி, இடி முழக்கம், மின்னல். தூமகேது, முதலியவற்றைப் பார்த்து, அதிசயத்தோடு நோக்கினன். அவைகளைக் கொண்டு, கற்பனை செய்தான். இவைகளில் பல சமயச் சார்புடையனவாய் மாறின. இதிலிருந்து பலமூட நம்பிக்கைகளும் வளர்ந்தன. ஆனல் தைப்பொங்கல் மூட நம்பிக்கை கொண்ட தமிழரின் திரு நாளல்ல. இது தமிழருக்கே பெருமை கொடுக்கும் திருநாள்.

தமிழ் மக்கள் தை மாதம் முதற் தேதி வழிபடும் கடவுளைக் கும்பிட்டு பொங்கல் நிவேதனஞ் செய்வர். உழவர்கள் இந்நாளில், நிலச் சொந்தக்காரனுக்கு கரும்பு, வாழைப்பழம்,பனைக்கிழங்கு ஆகிய பொருட்களைக் கொடுத்து அவனை வணங்குவர். பாட்டாளி மக்களின் இரத்தத்தைக் குடிக்கும், அந்நிலச்சுவான்தார் உழவன் கொடுக்கும் பண்டங்களின் கிரையத்தை விடக் குறைந்த சன்மானத்தைக் கொடுத்தாலும் அவ் உழவர்கள் நன்றியுடன் ஏற்றுக் கொள்வர். இது தமிழர் மரபு.

பொங்கல் என்பது உழவன் திருநாள். உழவர்கள் எருதுகளை ஏரில்பூட்டி, நெல் விளைவித்தபடியால் மக்கள் வாழ்கின்றனர். மருத நிலத்தில் காணப்படும், வயல்களில், உழவரும், உழத்தியரும் நாற்று முடிகளை நடுவதும் களை பிடுங்கி எறிவதும் மாட்டுப் பொங்கல் இட்டு மகிழ்வதும், பொங்கல் விழாக் கற்பிக்கும் பாடம்.

"தனி மனிதனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்றார் பாரதி. உழவன் உழும் வயலைஅவனுக்கே கொடுத்து விடும்படி, மகாகவி இக்பால் கூறுகிறார். அவர் எழுதிய இறவாத கவியில் பின்வருமாறு கூறியுள்ளார்:—

"உழவனது உணவுக்கு உதவாத
கழனி
எங்கிருந்தாலும், அதில்
ஒரு தானிய மணி
கூட எஞ்சிருக்காத வண்ணம்
நெருப்பிட்டுக் கொளுத்
துங்கள்"

### இலங்கையின் மூத்த குடிகள்

முதல் கள்ளத் தோணியாகிய,விஜயன் பாரத நாட்டிலிருந்து இலங்கைக்கு வரப் பன்னெடுங் காலத்துக்கு முன்னரே, இலங்கைத் தமிழர்கள் பண்புடன் வாழ்ந்தார்கள். ஆனல் இன்று அவர்கள் தேனை மறந்திருக்கும் வண்டைப் போல் வாழ்கின்றனர். தமிழர்கள் சங்க நூல்கள் மூலம், பௌத்த தர்மத்தை நிலைநாட்டினர்.

மூடநம்பிக்கைகளை ஒழித்துக்கட்ட மலைநாட்டில் இயங்கிவரும், திராவிடக் கழகத்தை சட்ட விரோதமெனக் கூற வேண்டுமெனச் சிங்களவர்கள் ஓலமிடுகின்றனர். இலங்கையில் மலைகளைக் குடைந்து, வெய்யிலென்றும் பனி என்றும் பாராது, சலியாதுழைத்த மலைநாட்டுத் தமிழர்கள் இலங்கையில் வாக்குரிமை இழந்து வாடுகின்றனர். அவர்கள் தொழிலுக்கும் சமீபத்தில் ஆபத்து வரவிருக்கிறது இவைகளைப் புரிந்து கொண்ட இவர்கள், மலைநாடெங்கிலும், தமிழரசுக் கட்சிக் கிளைகள் நிறுவி, மொழி உரிமைக்கும்,தொழிலுரிமைக்கும், வாக்குரிமைக்கும் பாடுபட எண்ணிக் குமுறல் சங்காகக் குமுறி நிற்கின்றனர்! மறக் குல மக்களான இவர்கள், வாட்போருக்கும் பயப்படாதவர்கள்- அரசாங்கத்துக்குப் பயந்து-- தங்கள் உரிமைகளை விட்டு விடுவார்கள்-என்று எண்ணுவது, தவறாகும்.

### இலங்கைத் தமிழர்கள் செய்ய வேண்டியது என்ன?

வருங்காலம் இலங்கைத் தமிழர்களின் பொற்காலம் எனச் சொல்ல முடியாது. பொற்காலமாக இருக்க வேண்டுமாயின் படித்தவன், பாமரன் என்ற பாகுபாடுகளை ஒழித்து எல்லோரும் ஒன்று கூடி வளம் நிறைந்த வட கிழக்கு மாகாணங்களிலுள்ள இடங்களைக் கைப் பற்றி அங்கெல்லாம் உழவுத் தொழிலைக் கைக் கொண்டு, பொருளாதாரத்தை நிலைப் படுத்திக் கொண்டு, இலங்கையில் தமிழருக்காகவும் தமிழ் மொழி இனங்களுக்காகவும், ஒரு கட்சிதான் இயங்கவேண்டும். இதுதான் தமிழரசுக் கட்சி. இந்த ஒரு கட்சி மூலம் தான் தமிழ் மொழி பேசும் இனங்களுக்கு எல்லா உரிமைகளும் கிடைக்கும். தமிழர்கள் இந்நாட்டுக் குடிகளல்லர், எனச் சொல்லப்படுவதைப் போல் வருங் காலத்தில் முஸ்லிம்களும் சொல்லப்படலாம். இப்படி ஏற்படலாமெனச் சேர் ராசிக் பரீது அவர்களும், மக்கள் பிரதிநிதிகள் சபையில் ஐயம் தெரிவித்தார். தமிழகத்தைப் பிரிக்க இடங்கொடுக்க மாட்டோமெனத் திரு. நேரு அவர்கள் சொல்வதைப் போல், இலங்கையைப் பிரிக்க இடங் கொடுக்க மாட்டோம்,எனச் சிங்களத் தலைவர்கள் கூறுகின்றனர். ஆனல் சமஷ்டி என்பது பிரிவினையல்ல என்பதை இவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.

தமிழரசுக் கட்சியின் செல்வாக்கைக் குறைக்க தமிழ் காங்கிரஸ் மறைமுகமாக முயலுகின்றது. இது நடக்கப் போகும் காரியமல்லவென்பதை, இக்காங்கிரஸ் அறியும் நாள் வெகு தொலைவிலல்ல. மலைநாட்டுத் தமிழர்களின் புனர் வாழ்வு தமிழரசுக் கட்சியில் தான் தங்கியிருக்கிறது.

## தமிழர் சேர் பொங்கல்

—வீ. சி. க.—

காலை வானம் புலர்ந்தது காண்
கங்குல் கழிந்தே கதிர்வரலால்
மேலும் கீழும் ஒளி பரந்து
விண்ணும் மண்ணும் ஒன்ருகும்
கோலம் காண வாராய் நீ
குளிருற் றொடுங்கி நில்லாதே
சிலம் அறிவாய் தமிழ் மனமே
செயல்நீ மறந்து தூங்குவையோ!

பொங்கல் அமுதம் விளைந்தது காண்
புதியமலரில் தேன் வண்டும்
தங்கியிருந்து மதுவி ளெடு
தமிழ்சேர் பொங்கல் நுகர்நாளில்
கங்குல் மடியும் மலர்போல் எம்
கவலை மடிந்து துயர் நீங்க
எங்கும் பொங்கல் மணம் கண்டாய்
இனிதே நமது தமிழ் வாழ்வு!

சங்கம் வளர்ந்த தமிழ் குழையும்
தன்னேரில்லாத் திருநாட்டில்
பொங்கி வளர்ந்தே அறம் வீரம்
புலமை கவிதை அன்போடு
எங்கும் பரந்த கொடை நலமும்
எல்லாம் விளைந்து தமிழ்ச் செல்வம்
பொங்கி நிறைக புது வாழ்வு
பொன்னு டெமக்கு இணையாமோ!

நாடு விளைய மழை பொழிந்து
நன்செய் புன்செய் நிலமெல்லாம்
கூடும் பயிர்கள் கதிர் விளைந்து
கொம்பர் நிறை தேமா விளைந்து
தேடும் பலவின் சுளை விளைந்து
செந்தேன் கரும்பு பால் விளைந்து
பாடும் தமிழின் சுவை அமுதம்
பரந்து பொங்கல் பொங்குகவே!

புலமை எங்கும் பொங்குது காண்
பொன்னும் மணியும் அலைமீது
நிலவும் சங்கு தரளமொடு
நெடிய வரையிற் சந்தனமும்
குலவி விளைந்தே பொங்குறவான்
குன்றிற் புகழார் தமிழினமே
நிலையில் உன்னை யார் நிகர்வார்
நினைந்து மகிழ்வாற் பொங்குகவே!

## அறபு ஆசிரியர் இடமாற்றம்

மட்/ஓட்டமாவடி அரசினர், முஸ்லிம் பெண்பாடசாலையில் அறபு ஆசிரியராக கடமையாற்றிய மௌலவி எம். வை. எம். முஸ்தபா மட்/நடுவோடை ஆர். சி. ரி. எம். பாடசாலைக்கு 1-1-63 தொடக்கம் மாற்றப்பட்டுள்ளார்.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

ANANDA MEDICAL HALL TRADE MARK 174, SEA STREET, COLOMBO

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு

தயாரிப்பாளர்:
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.



தொலைபேசி 693. HIRATA தந்தி "சேகரன்"

உறுதியான
நைலோன், தறுலோன்
நூல்களும்,
வலைகளும்



கிடைக்குமிடம்:
சேகரம் & சன்ஸ்
74, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

# கன்னித் தமிழ்ப் பணி புரியும் கலைச்செல்வி

## தடைகள் பல தாண்டி வளர்ந்த வரலாறு

ஈழத்திருநாட்டின் மணிமுடி போல் அமைந்துள்ள யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற நான்கு ஆண்டுகளாக மாதந்தோறும் வெளிவந்துகொண்டிருக்கும் கலை, இலக்கிய இதழான "கலைச்செல்வி" இன்று தனது ஐந்தாவது வயதை எட்டிப் பார்க்கின்றுள். இந்தப் பொன்னுன சந்தர்ப்பத்தில் "கலைச்செல்வி"யின் கதையை "சுதந்திரன்" வாசகர்கட்குத் தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்ருேம்.

இந்தியத் தமிழ் நாட்டிலிருந்து வாரந்தோறும், மாதந்தோறும் அழகிய பல பத்திரிகைகள் வெளியாகி ஆயிரக்கணக்கிலும், இலட்சக் கணக்கிலும் விற்பனையாகின்றன. ஆனந்தவிகடன், குமுதம், கல்கி, கலைமகள், கலைக்கதிர், முத்தாரம் முதலியவை இன்று ஈழத்தில் அதிக அளவில் விற்பனையாகும் இந்தியப் பத்திரிகைகள். இப்பத்திரிகைகள் மூலம் இந்திய மக்களின் பண்பு, கலை, கலாச்சாரம், பழக்க வழக்கங்கள், இலட்சியம்—முதலிய எல்லாவற்றையும் நாம் அறிகின்ருேம். இந்திய மண்ணில் காலடி எடுத்து வைத்திராத எத்தனையோ இலங்கையர், இந்தியாவைப் பற்றி எவ்வளவோ விஷயங்களைத் தெரிந்து வைத்திருக்கின்ருர்கள் என்ருல், அதற்குப் பெருமளவில் உதவியாக இருப்பவை இந்த இந்தியப் பத்திரிகைகளே. இவற்றைப் போன்ற ஒரு பத்திரிகையை இலங்கையிலும் அச்சிட்டு வெளியிட வேண்டும் என்ற எண்ணம் பலரிடம் பலமாக இருந்த போதிலும், அதைச் செயல் படுத்தும் சக்தி இல்லாதிருந்தனர். ஒரு சிலருடைய முயற்சிகள் இடையில் தோல்வியடைந்தன. பிரமிக்கத்தக்க துணிச்சலுடன் இத் துறையில் இறங்கி, சென்ற நான்கு ஆண்டுகளாக "கலைசசெல்வியை" வெளியிட்டு வரும் பெருமை "கலைச்செல்வி" நிர்வாகிகளுக்குரியது. ஒரு சில நூறு பிரதிகளுடன் ஆரம்பித்த "கலைச்செல்வி" இன்று பல ஆயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டு, இலங்கை, இந்தியா, மலாயா முதலிய இடங்களில் வாழும் தமிழ் பேசும் பேசும் மக்களை மகிழ்வித்து வருவதையெண்ணி, ஈழத் தமிழர்களாகிய நாம் நிச்சயம் பெருமைப்பட வேண்டும்.

"கலைச்செல்வி"யில் ஈழத்து எழுத்தாளர்கட்கு முதலிடம் கொடுக்கப்பட்டு வருகின்றது. தலைசிறந்த எழுத்தாளர்களின் மிகச் சிறந்த கதைகள், கட்டுரைகள், கவிதைகள் "கலைச்செல்வி"யிலேயே வெளியாகின்றன. ஈழத் தமிழரின் கலை, இலட்சியம், பண்பு, பழக்க வழக்கம் முதலியவற்றை இவை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. இந்தியப் பத்திரிகைகளில் எழுதினுல்தான் தங்கள் புகழும் கௌரவமும் அதிகரிக்கும் என்ற மயக்கத்தில் இருந்தார்கள் ஈழத்து எழுத்தாளர்கள். அவர்களுடைய மனமயக்கத்தைப் போக்கிவிட்டது "கலைச்செல்வி". இன்று ஈழத்து எழுத்தாளருட் பலர், தாம் எழுதும் சிறந்த கதை, கட்டுரை, கவிதைகளை "கலைச்செல்வி"க்கே அனுப்புகின்றனர்.

புதிய பல எழுத்தாளர்களை "கலைச்செல்வி" உருவாக்கிவருவது குறிப்பிடத்தக்கது. இளைஞரிடம், குறிப்பாக, கல்லூரி மாணவ, மாணவிகளிடம் எழுத வேண்டும் என்ற ஆர்வம் நிறைய இருக்கின்றது. உண்மையான திறமைசாலிகளை இனம் கண்டு அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து தக்க முறையில் வாசகர்கட்கு அறிமுகம் செய்து வருகின்றது "கலைச்செல்வி". ஈழத்துப் பத்திரிகைகளில் இன்று அடிக்கடி எழுதிவரும் இளைஞர்களிற் பலர் "கலைச்செல்வி" மூலம் அறிமுகமானவர்களே.

"கலைச்செல்வி"யின் முதலாவது இதழிலேயே தங்கத் தாத்தா சோமசுந்தரப் புலவரின் நினைவாக ஒரு கவிதைப் போட்டி பற்றிய அறிவித்தல் வெளியானது. இந்தியாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் கவிஞர்கள் பலர் பங்கு பற்றினுர்கள். வெற்றி பெற்ற ஈழத்துக் கவிஞர் "மயிலன்" அவர்கட்கு, பிரபல எழுத்தாளர் வரதர் அவர்கள் தங்கப் பதக்கம் சூட்டினுர்கள். பாரதி தினப் பேச்சுப் போட்டி, நாவலர் கட்டுரைப் போட்டி, அட்டைப் படக் கவிதைப் போட்டி, நகைச்சுவைக் கட்டுரைப் போட்டி, கலைவிழா சிறுகதைப் போட்டி முதலியவற்றை நடாத்தி, பரிசுகளாக, பணமும், புத்தகங்களும் தங்க, வெள்ளிப் பதக்கங்களும் வழங்கியது. எல்லாவற்றிற்கும் மேலாக, "கலைச்செல்வி"யின் ஆயிரம் ரூபா நாவல் போட்டியைப் பற்றிக் குறிப்பிடவேண்டும். ஈழத்திலே எவருமே நடாத்தத் துணியாத மாபெரும் போட்டி இது. இலங்கை எழுத்தாளர்கள் பலர் பங்கு பற்றியுள்ளார்கள்.

"கலைச்செல்வி"யின் சேவை தனியே, இலக்கியத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை. நடன, நாடக, சங்கீதக் கலைகளின் வளர்ச்சிக்குத் தன்னுலான சேவைகளைச் செய்து வருகின்றது. பொது மக்களிடையே கலைஞர்கட்கு ஆதரவு தேடுவதற்காக, ஆண்டு தோறும் கலைவிழா நடாத்தத் தீர்மானித்து, முதலாவது கலைவிழாவை வவுனியாவில் மிகவும் கோலாகலமாகச் சென்ற ஆவணி மாதத்தில் நடாத்தினர். இரண்டாவது கலைவிழா வேருெரு முக்கிய நகரத்தில் இவ்வாண்டு மிக மிகச் சிறப்பாக நடைபெறும்.

பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்களாலும், வெவ்வேறு கண்ணேட்டமுடையவர்களாலும், ஒரே முகமாக "தரமான இலக்கியப் பத்திரிகை" என்று பாராட்டப்படுவது சாமான்ய விஷயமா? இத்தகைய பாராட்டைப் பெற்ற பெருமை "கலைச்செல்வி"க்குண்டு. பண்டிதமணி கணபதிப்பிள்ளை, மாமேதை ராஜாஜி, கலைமகள் கி. வா. ஜ., பேராசிரியர் மு. வரதராசன், அறிஞர் அண்ணு, சிலம்புச் செல்வர் ம. பொ. சி., குன்றக்குடி அடிகளார், நடிகர் திலகம் சிவாஜி, புரட்சி நடிகர் எம். ஜி. ஆர், கலையரசி பத்மினி, அகிலன், மணிவண்ணன், வல்லிக் கண்ணன்—முதலிய பலரின் உளம் நிறைந்த பாராட்டுக்களைப் பெற்றுள்ளது "கலைச்செல்வி". செக்கோசிலவாக்கியத் தமிழறிஞரான டாக்டர் கமில் ஸ்வெலபில், "கலைச்செல்வி"யை ஒழுங்காகப் படித்துப் பாராட்டி வருபவர்.

இப்படித் தரம் நிறைந்த ஓர் இலக்கியப் பத்திரிகையை இலங்கையிலிருந்து வெளியிடுவது மகா கஷ்டமான ஒரு வேலைதான். "பணபலம் நிறைந்த ஒருவர் தொடங்கியிருக்க வேண்டிய ஒரு பணியை, பணவசதியற்ற நாம் துணிந்து மேற்கொண்டுவிட்டோம். கஷ்டங்களும் நஷ்டங்களும் எதிர்கொண்டாலும், அவற்றைக் கடந்து இலக்கிய உலகில் "கலைச்செல்வியை" நிரந்தரமாக நிலை நிறுத்த வேண்டும் என்பதுதான் எங்கள் அவா. வாசகர்களிடமிருந்து சந்தா வகையாலும், வியாபாரிகளிடமிருந்து விளம்பர

(15-ம் பக்கம் பார்க்க)


## வெற்றிகரமான ஐந்தாவது ஆண்டு

# கலைச்செல்வி

### இணையாசிரியர்கள் : சிற்பி; தமிழ்ச்செல்வன்

**ஈழத்திலிருந்து வெளியாகும் இனிய கலை, இலக்கிய மாத இதழ்**

சுவை நிறைந்த சிறுகதைகள், இனிமை கொஞ்சும் கவிதைகள், இலக்கிய, விஞ்ஞான, சமயக் கட்டுரைகள், விறுவிறுப்பான தொடர்கதை, சுவையான 'பட்பட்' கேள்வி பதில்கள், பரபரப்பான சிறுவர் தொடர்கதை, மாணவர்களுக்கு இலவச அறிவுப் போட்டி, புதிய சினிமாச் செய்திகள்—இத்தனையும் அடங்கிய ஈடிணை அற்ற குடும்பப் பத்திரிகை.

**தனிப் பிரதி : 30 சதம்** — **ஆண்டுச் சந்தா : 4 ரூபா**

**வெளியூர்களில் நமது பிரதான விற்பனையாளர்கள்:**

கலாநிதி புத்தகசாலை, 20, பெருந்தெரு, மட்டக்களப்பு.
மணமகள் புத்தகசாலை, பெருந்தெரு, மட்டக்களப்பு.
முஸ்லிம் ஹோட்டல், தலதா வீதி, கண்டி.
கலைச்சோலை நூலகம், 80, வித்தியாலய வீதி, திருகோணமலை.
நவா புத்தகசாலை, 180, பெருந்தெரு, றக்குவானை.
ராஜேஸ்வரி பவான், நொரிஸ் வீதி, கொழும்பு.
மலர்விழி ஸ்டோர்ஸ், செட்டித் தெரு, கொழும்பு.
ஆனந்த பவான், நொரிஸ் வீதி, கொழும்பு.

**மற்றைய இடங்களில் பிணைப்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் தேவை**
**விபரங்களுக்கு எழுதுக:**

தலைமை நிலையம்
**கலைச்செல்வி**
பாலன் வெளியீடு,
செட்டிகுளம்.

கிளை நிலையம்
**கலைச்செல்வி**
கந்தரோடை,
சுன்னுகம்.

**கலைச்செல்வி பொங்கல் மலர் பொங்கலன்று சிறப்பாக வெளியாகும்.** **மலரின் விலை : 50 சதம்**

# சுதந்திரன்
SUTANTIRAN

1963 ஜனவரி மாதம் 13-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## அமைதியைக் குலைக்க பொலிஸ் தடியடி

தமிழ் பேசும் மக்களை அடித்து நொறுக்கி அடக்கிவிடலாம், தடி கொண்டு தாக்கினுல் உரிமைக் கிளர்ச்சி ஒடுங்கி விடும்—என்பது அரசாங்கத்தின் எண்ணம் போலும்.

அன்று சத்தியாக்கிரகத்தில் இராணுவத்தினர் மக்களை அடித்துத் துன்புறுத்தி அட்டூழியம் புரிந்தனர். இன்று கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தின் போதும் அதே முறையைக் கையாண்டனர் பொலிசார். மக்களை மட்டுமின்றி மக்கள் பிரதிநிதிகளையும் தடியால் அடித்து நொறுக்கினர்.

குறுந்தடிப் பிரயோகம் இன்று ஆட்சியாளர்களின் அடக்குமுறை ஆயுதம். உரிமை கேட்டால் தடியடி தான் கிடைக்கும் என்ற நிலைமையை ஏற்படுத்தி விட்டால் சிறுபான்மையோர் பயந்து நடுங்கி அடிபணிந்து விடுவார்களாம். இது வெறும் பகற் கனவு.

தடியடியால் மக்களின் உணர்ச்சியை அடக்கிவிடலாமென்றுல், விடுதலைப் போராட்டங்களை நசுக்கிவிடலாமென்றுல், சிறுபான்மையோரின் உரிமைப் போரை ஒடுக்கி விடலாமென்றுல் உலக சுதந்திரப் போராட்டங்களின் வரலாறுகளே வேறு விதமாக மாறியிருக்கும்.

கடந்த வாரம் இரு மந்திரிகள் வட இலங்கைக்கு திக் விஜயம் சென்றுர்கள். சில மாதங்களுக்கு முன்பு மந்திரி மகாநாம சமரவீராவும் சென்று வந்தார். பலத்த எதிர்ப்புகளினூடே மந்திரிகள் யாழ்ப்பாணம் செல்வதில் இரு நோக்கங்கள் உண்டு.

ஒன்று, தமிழரசுக் கட்சியை எதிர்த்துப் பிரசாரம் செய்வது. கட்சிக்கு தமிழ் பேசும் மக்களிடையே செல்வாக்குக் கிடையாது, மக்களின் ஆதரவெல்லாம் அரசாங்கத்துக்கே என்பதை வெளி உலகத்துக்கு எடுத்துக் காட்டுவது.

மற்ருென்று, தமிழ் பேசும் மக்கள் தன்மானமற்றவர்கள், உதைக்கும் காலை முத்தமிடுபவர்கள், உரிமைகளைப் பறித்தவர்களை எசமானர்களாக மதித்து வணங்குபவர்கள், உணர்ச்சியற்ற கோழைகள், என்பதை நிரூபித்துக் காட்டுவது.

மந்திரிகளின் யாழ்ப்பாண விஜயம அவர்கள் இதர பகுதிகளுக்குச் செல்வதைப் போன்று சாதாரணமானதன்று. அதற்காக எத்தனையோ முன்னேற்பாடு, பொலிஸ் கெடுபிடி, கைக்கூலி குண்டர்களின் அட்டகாசம், எட்டப்பர் கூட்டத்தின் வரவேற்பு இத்தனையும் நடைபெறும்.

சொந்த இனத்தையே காட்டிக் கொடுக்கும் கயவர்கள் கும்பலொன்று வட இலங்கையில் உண்டு. எச்சில் இலைப் பருக்கைக்காகக் கடித்துக்கொள்ளும் நாய்களைப் போன்ற கேவலமான சோதாக்கள்தான் அவர்கள். சிறுபான்மையோரை அடக்கி ஒடுக்கி ஆட்சி புரியும் சிங்கள வகுப்புவாதிகளிடம் சரணடைந்து சலுகைகள் பெற சதி செய்யும் ஒரு சதிகாரக் கும்பல் இது.

வகுப்புவாத மந்திரிகள் வடபகுதிக்கு வரும்போதெல்லாம் இக்காக்கை வன்னியர் கூட்டம்தான் ஆரத்தி எடுத்து ஆலவட்டம் வீசி தங்களின் விசுவாசத்தைக் காட்டிக் கொள்ளும்.

இம்முறையும் இந்த அடிமைக் கூட்டத்தின் மாலைமரியாதை வரவேற்புடன் தான் வர்த்தக மந்திரியும், கல்வி மந்திரியும் வடபகுதியில் பவனி வந்தார்கள். இக்கும்பலின் வரவேற்பையே பொது மக்களின் வரவேற்பென அடிக்கடி வெளி உலகத்துக்கு எடுத்துக் காட்டுவது மந்திரிகளின் வழக்கம்.

இந்த இரு மந்திரிகளும் தனிப்பட்ட மனிதர்களாக வட இலங்கைக்கு வரவில்லை. தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை அபகரித்த சிங்கள வகுப்புவாத அரசாங்கத்தின் பிரதிநிதிகளாகவே வந்தார்கள். அடிமைகளைப் பார்க்க வரும் அடிமை எசமானர்களைப் போலவே வந்தார்கள்.

ஆகையால்தான் அவர்கள் சென்ற இடமெல்லாம் மக்கள் எதிர்ப்புக் காட்டினர். கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தி, "திரும்பிப் போ" எனக் கோஷித்தனர்.

குடித்துவிட்டு வெறியாட்டமாடிய குண்டர்கள் சிலரை மக்கள் மீது ஏவி விட்டு, அதனை நொண்டிச் சாக்காக வைத்து பொலிசார் பாய்ந்து தடியடிப் பிரயோகம் செய்தனர். மக்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் காட்டு மிராண்டித்தனமாகத் தாக்கினர்.

மக்களும், அவர்களின் பிரதிநிதிகளும் எதிர்க்கும் போது, அவர்களை அடித்து நொறுக்கித் தள்ளி விட்டு, அந்தப் பகுதிக்கு மந்திரிகள் விஜயம் செய்வதா? இது கோழைத்தனமான—கேவலமான செய்கையல்லவா?

தடியடிக் கொடுமையை எதிர்த்து மக்கள் கொதித்தெழுந்திருந்தால், ஆத்திரமடைந்திருந்தால் குண்டர்களின், பொலிசாரின் நிலைமை என்னவாகியிருக்கும்?

கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் சட்டபூர்வமானது. ஜனநாயக ரீதியானது. எந்த ஜனநாயக நாட்டிலும் அனுமதிக்கப்படுவது. மக்கள் தம் எதிர்ப்பைக் காட்டும் ஒரு சாத்விக வழிதான் அது.

அத்தகைய சாத்விக எதிர்ப்பாளர்களைத் தடிகொண்டு தாக்குவதென்றுல், பாராளுமன்ற உறுப்பினர்களையே அடிக்குமளவுக்கு வந்து விட்டார்களென்றுல் இங்கே நிலவுவது பொலிஸ் ஆட்சியென்றே கூறவேண்டும்.

இவ்விரு மந்திரிகளும் வடபகுதிக்கு வந்து சாதித்தது என்ன? வர்த்தக மந்திரி தமிழரசுக் கட்சியைக் கன்னு பின்னுவென்று நாக்கில் நரம்பின்றித் திட்டிக் கொண்டு திரிந்தார். கல்வி மந்திரியோ, "யார் எதிர்த்தாலும் யாழ்ப்பாணத்தில் இரு ஆசிரிய கலாசாலைகளை மூடியே தீருவேன்" என்று மார்தட்டினுர். அவர்களின் வடஇலங்கைச் சாதனைகள் இவைதான்.

மந்திரிகள் மகாராஜாக்களைப் போல வந்து போவது மக்களுக்கு ஆத்திரமூட்டுகிறது. ஆயினும் அவர்கள் சாத்வீகப் பாதையினின்று விலகவில்லை, கட்டுப்பாட்டைக் கைவிட வில்லையென்றுல் அதற்குத் தமிழரசு கட்சியின் சிறந்த தலைமையே காரணம்.

விடுதலை உணர்ச்சி கொண்ட மக்கள் தடியடி என்ன, துப்பாக்கிக் குண்டுக்கே அஞ்சாதவர்கள். எனவே எட்டப்பர்களையும், குண்டாந்தடியையும் உதவியாகக்கொண்டு தமிழ்ப் பிரதேசங்களில் "வெற்றி வீரர்களாக" பவனி வரும் முயற்சியை மந்திரிகள் இனிமேலாவது கைவிட்டு விட வேண்டும்.

"நல்ல மாட்டுக்கு ஒரு சூடு போதும்" என்பார்கள். அம் மாதிரி 5ந் தேதி கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் மந்திரிகளுக்கு மறக்க முடியாத ஒரு படிப்பினையாக இருக்கட்டும்.

## கொஞ்ச நிலத்தில் அதிக விளைச்சல்: பொங்கல் விழாவின் சங்கற்பம்

தைப் பொங்கல் தமிழர் திருநாள்—விவசாயிகளின் விழா. புது நெல் கொண்டு பொங்கி, பகலவனுக்குப் படைத்து வணங்கும் புதுநாள். உழவர்களுக்குதவிய கால்நடைகளுக்கு நன்றி தெரிவிக்கும் நன்னுள். சாதி, சமய பாகுபாடுகளைக் கடந்து நிற்கும் பொதுநாள்.

தமிழ் பேசும் விவசாய மக்கள் கடும் உழைப்பாளிகள். ஆனுல் உழைப்புக்குத் தகுந்த பயன்தானில்லை. இரத்த வியர்வை சிந்திப் பாடுபட்டு கமத்தொழில் செய்கின்றனர். அதனுல் கிடைக்கும் வருமானமோ வாழ்க்கையை வளம்படுத்தப் போதுமானதாயில்லை. நகரத் தொழிலாளரின் நிலைமையைவிட மோசமாகிவிட்டது விவசாயிகளின் நிலைமை.

### போதுமான காணியில்லை

தமிழ் பேசும் விவசாயிகளுக்குள்ள நிலம் கமத்தொழிலுக்குப் போதுமானதாயில்லை. விவசாயம் செய்யப்படாத நிலம் தமிழ்ப்பிரதேசத்திலே ஏராளமாக உண்டு. ஆயினும் அவற்றைத் தமிழ் பேசும் மக்களுக்குப் பகிர்ந்தளிக்க அரசாங்கம் தயாராயில்லை. நாட்டுக்கு உணவளிக்கும் கைகளை வலுப்படுத்தும் எண்ணம் ஆட்சியாளருக்குக் கிடையாது. அதற்கான திட்டமும் அவர்களிடமில்லை. காரணம்—குறுகிய வகுப்புவாதக் கண்ணேட்டமே.

இன்று காணி விநியோகத்தின் அடிப்படை, வகுப்புவாதமும் இன ஒழிப்புமேயன்றி உற்பத்திப் பெருக்கன்று. தமிழ்ப் பிரதேசத்திலே சிங்களவர்களைக் குடியேற்றுகின்றனர். இது தமிழ் நிலத்தை அபகரிக்கும் செயல்-விவசாயத்தைப் பெருக்கும் பெருநோக்கமல்ல. இதன் விளைவுதான் இன்று ஏற்பட்டுள்ள உணவுப் பஞ்சமும், பொருளாதார நெருக்கடியும்.

## விவசாயத்தைக் குற்றுயிராக்கிய வகுப்புவாதத்தை விரட்டுவோம்!

### விவசாயத்தை குற்றுயிராக்கியது

உணவு உற்பத்திக்குள்ள பெருந்தடை குறுகியதேசியவாதமும்,வகுப்புவாதமுமே. இதனுல் கோபம், வெறுப்பு, அதிருப்தி விவசாய மக்களிடையே கொந்தளிக்கின்றன. சிங்கள வகுப்வு வாதிகளின் குறுகிய போக்கு விவசாயத்தையே குற்றுயிராக்கிவிட்டது.

தமிழ் பேசும் விவசாயிகளுக்குள்ள நிலமோ மிகவும் கொஞ்சம். அதில் உற்பத்தியைப்பெருக்கினுலன்றி உயர்வு பெற முடியாது. அதற்குத் தேவை அதிக உழைப்பு உழைப்புப் பெருகினுலன்றி மாகுல் பெருகாது.

"கொஞ்ச நிலத்தில் அதிக விளைச்சல்" என்பதே இப்பொங்கல் தினத்தின் சங்கற்பமாக இருத்தல் வேண்டும்.

இதனை எப்படிச் செய்வது? நவீன முறைகளைக் கமத்தொழிலில் கையாள வேண்டும். உரம், உழுபடைகள் தாராளமாகக் கிடைக்க வேண்டும். நீர்ப்பாசன வசதி உட்பட இதர தேவையான உதவிகள் அனைத்தும் அளிக்கப்படவேண்டும். அறுவடைக்கு முன்பு விவசாயிகளுக்குத் தாராளமாகக் கடனுதவி வழங்க வேண்டும். அதற்கான கூட்டுறவு ஸ்தாபனங்களை பெருமளவில் நிறுவ வேண்டும்.

இத்தகைய உதவிகள் இன்று விவசாயிகளுக்குக் கிடையா. இதன் நேரடி விளைவு அவர்களின் சில தரகர்களிடம் சிக்கிக்கொள்வது தான். கடும் உழைப்பால் கிடைக்கும் மாசூலைக் கொள்ளைகொண்டு போகின்றனர் இடைத்தரட்டுக்காரர்கள். உத்தரவாத நெல் விலை இன்று விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. குறைந்த விலைக்கு நெல்வாங்கும் தரகர்கள் உத்தரவாத விலைக்கு அதனை விற்று லாபமடைகின்றனர். அவர்களைக் கொழுக்க வைக்கவே உத்தரவாத விலைத் திட்டம் உதவுகிறது. இந்தக் கொடுமைக்கு முடிவுகட்ட வேண்டும்.

### படித்த வாலிபர்களும் விவசாயிகளும்

படித்த வாலிபர்கள் விவசாயத்தில் துணிவுடன் இறங்க வேண்டும், அதற்கான ஓர் இயக்கமே தொடங்க வேண்டும். ஆங்காங்கு வாலிப விவசாயிகள் கழகங்கள் தோன்றி அவர்களுக்கு உற்சாகமும் ஊக்கமும் அளிக்க வேண்டியது அவசியமாகும்.

உத்தியோக வேட்டை இனிப் பலிக்காது என்பதை படித்த வாலிபர்களுக்கு உணர்த்த வேண்டும். அதற்கு இரு நடவடிக்கைகள் தேவை.

அவர்கள் விவசாயத்தில் ஈடுபடுவதற்குச் சாதகமான சிறந்த சூழ்நிலையை சிருஷ்டிக்கவேண்டும். மற்ருென்று ஒரு சில ரூபாய்க்காகக் கையேந்தி நிற்கும் அடிமை உத்தியோகத்தைவிட விவசாயம் சிறப்பானது. என்ற ஒரு பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்க வேண்டும்.

அடிமைத் தொழில் செய்பவனைவிட விவசாயி சிறந்தவன், உயர்ந்தவன், மதிக்கத் தகுந்தவன் என்ற எண்ணத்தைப் பரவலாக ஏற்படுத்த வேண்டும். விவசாயத்தையும் விவசாயியையும் மக்கள் ஏற்றிப் போற்றி கௌரவிக்கத் தொடங்கி விட்டால், படித்தவாலிபன் விவசாயத்தில் இறங்கத் தயங்க மாட்டான்; வெட்கப்பட மாட்டான்.

### சுய தேவை நிறைவு

வட, கிழ்ப் பிரதேசங்கள் விவசாயத்தில் சுயதேவை நிறைவு பெறவேண்டும். அதற்கு வட கிழ் பிரதேசங்களிலுள்ள காணிகள் அனைத்தும் விவசாயத்துக்குக் கொண்டுவர வேண்டும். அவசியமான இடங்களிலெல்லாம் விவசாயக் கூட்டுப் பண்ணைகளை நிறுவி விவசாயத்தைப் பெருக்க வேண்டும்.

இதனைத் திட்டமிட்டுச் செய்தால் ஒரு சில வருடங்களில் தமிழ்ப் பகுதியைத் தானியக் களஞ்சியமாக்கி விடலாம்.

உணவுப் பொருட்களுக்காகத் தமிழ் பேசும் மக்கள் பிறர் கையை எதிர்பார்த்து நிற்கும் அவலநிலை நீங்க வேண்டும். இதனுல் எந்தச் சமயத்திலும் பட்டினி கிடக்க வேண்டிய நிலை ஏற்படும்.

தமிழ் பேசும் மக்கள் இழந்த உரிமைகளை மீட்பதற்காகப் போராடிக்கொண்டிருப்பவர்கள். அவர்களின் உரிமைப் போரைப் பட்டினி ஆயுதத்தைக் கொண்டு முறியடிக்க சிங்கள வகுப்புவாதிகள் முற்படலாம். பசி பட்டினி தமிழ் பேசும் மக்களின் தன்மானத்தைப் பறித்து விடுமென்பது அவர்களது எண்ணம். கடந்த சத்தியாக்கிரகத்தின் போதும் இது நடந்ததல்லவா?

இரு மாதங்களாக வட பகுதிக்கு பங்கீடு அரிசி வழங்க ஆட்சியாளர் மறுத்து விட்டனர். இன்றுதமிழ் பேசும் மக்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்க முயலும் உணவு மந்திரி அந்த இரு மாத பங்கீடு அரிசியை இன்னும் வழங்க மறுக்கிருர்.

இந்நிலை ஏற்படக் காரணம் தமிழ் பேசும் மக்கள் தங்களின் பசியைத் தீர்த்துக்கொள்ள பிறர் கையை எதிர்பார்த்து நிற்பதே.

## உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற உழைப்போம்!

ஆகவே தமிழ்ப் பிரதேசங்கள் உணவுப் பொருள் உற்பத்தியில் தன்னிறைவு பெறுதல் அத்தியாவசியமாகும்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். அதற்கேற்ப தமிழ் பேசும் மக்களுக்கும் மேற்கண்ட பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வழிபிறக்குமென்பதில் ஐயமில்லை.

## விட்டாரா?

அயர்லாந்து நாட்டின் விடுதலைக்காகப் போராடியவர், டிவலேரா! ஒரு முறை அவர் மேடையில் பேசிக்கொண்டிருந்தபோது பேச்சின் நடுவில் கைதுசெய்யப்பட்டார். அவருக்கு ஒரு வருட ஜெயில் தண்டனை விதிக்கப்பட்டது!

தண்டனை காலம் முடிந்து வெளி வந்ததும் அவர் நேராக அதே மேடைக்குச் சென்றுர்! "நான் கைது ஆகும்போது சொன்னேன்.." என்று ஆரம்பித்து பேச்சைத் தொடர்ந்தார்!

# பொருட் செல்வமில்லா வாழ்வு வாழ்வாகாது

## வெற்றிகரமான வாழ்க்கைக்கு சிக்கனமும் சேமிப்பும் அவசியம்

வாழ்க்கைக்கு அருட் செல்வமும், பொருட் செல்வமும் இன்றியமையாதவை என்ற உண்மையை விளக்கிச்சென்றார் வள்ளுவர்.

'பொருள்தனைப் போற்றி வாழ்' என்று கூறிப் போந்தார் மூதாட்டி ஔவையார்.

திட்டமில்லாத குடித்தனமும், குறிக்கோளில்லாத வாழ்க்கையும் ஒருபோதும் சீரடையாது என்று கூறி, தனி மனிதனுக்கும், நாட்டுக்கும் சீரான வாழ்வைத் தரவல்ல சிக்கன வாழ்க்கை முறையை இக் கட்டுரையில் அழகாக எடுத்துரைக்கிறார் தமிழ் அறிஞர், முத்தமிழ்க்காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்.

செல்வம் பலவகை. அவை கல்வி, கேள்வி, அறிவு, அருள், பொருள் முதலியன. அவற்றிலுள்ள பொருளும் பலவகை. அவை பொன், மணி, முத்து, பவளம், பணம் முதலியன. அவற்றிலுள்ள பணமும் பலவகை. அவை செம்பு, ஈயம், வெள்ளி, பவுன், நோட் முதலியன. இவையே பொருட் செல்வம் எனப்பெறும்.

வாழ்வுக்கு பொருள் தேவை. பொருளற்ற வாழ்வு வாழ்வாகாது. "அருள் இல்லாதவர்க்கு அவ்வுலகமும், பொருளில்லாதவர்க்கு இவ்வுலகமும் இல்லை." என்பது வள்ளுவர் வாக்கு. எவராலும் பொருட்படுத்த முடியாத ஒருவர், எல்லோராலும் பொருட்படுத்தப் பெற வேண்டுமானால், அவர் பொருளைப்பெற்றிருக்கவேண்டும் என்பதும் அவரது கருத்து.



பொருளைத் தேடுவதும் தனக்காக என்றில்லாமல், பிறருக்காகவும் என்று தேட வேண்டும். அதையும் நல்ல வழியில் தேடி, நல்ல வழியில் செலவிட்டு, நல்லமுறையில் வாழ்ந்தாக வேண்டும். பிறர்க்குப் பயன்படும் மக்கள் உள்ளூரிற் பழுத்த கனி மரத்தை ஒப்பாவார். அல்லாதவர் பழுத்தும் பயன்படா எட்டி மரமேயாவார். ஆம், எட்டி பழுத்தென்ன? ஈயாதார் வாழ்ந்தென்ன?

"பொருளற்ற மக்கள் பொருள் பெற்ற மக்களிடம் சென்று இரப்பது இழிவு. இல்லை என்று வருகிற அவர்களிடம் "இல்லை" என்று கூறுவது அதைவிட இழிவு" என்பது தமிழகத்தின் பண்பு. ஒரு இடுகாட்டில் ஒரே நேரத்தில் இரு பிணங்கள் எரிந்து கொண்டிருந்தன. அதைக் கண்ட ஒரு பெரியவர் "இவர் ஈத்துவக்கும் இன்பம் இன்னது என அறிந்து சுவைத்த செல்வர். இவர் அவ்வின்பம் எப்படி இருக்கும்! என்பதையே அறியாது வைத்து இறந்த வறுமையாளர்" என்றார். பாவம்! பணம் இழந்த பிணம்!

### செல்வம் பெற சிக்கனம் வேண்டும்

தமிழ்ச் சொற்கள் அனைத்தும் பொருளமைதியுடையன. "சுறுசுறுப்பு" என்பதும் "படபடப்பு" என்பதும் ஒன்றல்ல. அருட் செயல்களைப் பொழுதை வீணுக்காமல் அமைதியாகச் செய்து முடிப்பவனே சுறுசுறுப்பாளன். அதிகமாகத் துடித்து எதையும் செய்ய இயலாமல் துன்பப்படுகிறவன படபடப்புக்காரன். "சிக்கனம்" என்பதும் "கருமித்தனம்" என்பதும் இதுபோன்றதே. தேவைக்குமேல் செலவு செய்வது "வீண் செலவு"- தேவையின் அளவு செலவு செய்வது "சிக்கனம்". தேவைக்கும் செலவு செய்யாதது "கருமித்தனம்." இவற்றில் பொருட் செல்வம் பெறத் தேவையானது "சிக்கனம்" ஒன்றே.

மாதம் 100 ரூபா வருமானம் உள்ளவர்கள் வீட்டு வாடகை ரூபா 10 அரிசி ரூபா 15 பலசரக்கு ரூபா 15 காய்கறி ரூபா 8 பால் ரூபா 8 பலகாரம் ரூபா 8 எண்ணெய் ரூபா 5 விறகு 5 வரட்டி 2 விளக்கு 2 துணி துவைக்க ரூபா 3 சவரம் 2 துணிக்காக 5 இதர செலவுகளுக்காக ரூபா 7 மீதம் ரூபா 5 எனத் திட்டமிட்டுச் செலவு செய்ய வேண்டும்.

**கி. ஆ. பெ. விசுவநாதம்**

திட்டமில்லாத குடித்தனமும் குறிக்கோளில்லாத வாழ்க்கையும் ஒருபோதும் சீரடையாது. சிலர் இத்திட்டத்தையே தங்கள் இருப்பிடத்துக்கு ஏற்றவாறும், குடும்பத்திற்கு ஏற்றவாறும் மாற்றியமைத்துக் கொள்ளலாம். திட்டமிட்டு வாழ்க்கை நடத்துகிறவர்கள் மீதப்படுத்த முடியாமற் போனாலும் கடன்காரர்களாக வாழ மாட்டார்கள் என்பது உறுதியாகும்.

### பொருள் சேர்ப்பது ஒரு கலை

ஒருவனுக்குப் பொருள் வந்து சேருவது திடீரென வந்துவிடாது. சிறுகச் சிறுக வந்து பின் பெருஞ் செல்வமாகக் காட்சியளிக்கும். போகும்போது சிறுகச்சிறுக போகாது. ஒரேயடியாய்த் திடீரெனத் தொலைந்து போய்விடும். ஒரு நாடகக் கொட்டகைக்கு மக்கள் ஒவ்வொருவராக வந்து, பெருங்கூட்டமாகக் காட்சியளித்துப் பின் ஒரேயடியாய்க் கலைந்து ஒழிந்து போய்விடுவதைப்போல. ஆகவே, பொருட் செல்வம் பெற விரும்புகிறவர்களுக்கு "சிக்கனமும்" "சேமிப்பும்" மட்டும் போதாது. அவர்கள் சேமித்த செல்வத்தைப் பாதுகாத்தும் ஆகவேண்டும். சேமிப்பு ஒரு கலை. சிக்கனம் அதன் துணைக்கலை. பாதுகாப்பதோ பெருங் கலை.

### பாதுகாப்பு முறை

பல ஆண்டுகள் சேர்த்த செல்வத்தைப் பாதுகாக்கத் தெரியாமல் இழந்துவிட்டவர் பலர். இவர்களிற் பெரும்பான்மையோர் நீண்டகாலம் உழைத்து ஓய்வு பெற்று உதவி நிதி பெற்றோர், உலகம் இன்னது என அறியாமல் உத்தியோகத்திலேயே உழன்று வாழ்ந்து வந்தவர்கள், உலகம் இன்னது என நன்கறிந்த வஞ்சக மக்களின் சொற்களில் ஏமாறுவிடுவது இயல்பேயாகும். உதவி நிதி பெற்றோர் தாம் வாங்கிய தொகை அனைத்தையும் அன்றே ஒரு பெரிய வங்கியிற் போட்டு வைத்துப் பின் அத்தொகையைப் பங்குகளாகப் பிரித்து 2 பங்கிற்கு வீடும் ஒரு பங்குக்கு நிலமும், 1 பங்குக்கு ஆலைப் பங்குகளும் நல்லவைகளாகப் பார்த்து வாங்கி வைப்பதுடன், மீதியுள்ள ஒரு பங்குப் பணத்தில் அரைப் பங்கு ரொக்கமாகவும், அரைப்பங்கு தங்கமாகவும் வைத்திருந்து பாதுகாப்பதே சிறந்த கலையாகும். வாங்கிய தொகை 25 ஆயிரமாக இருந்தால் இது 10, 5, 5, 2அரை, 2அரை, எனப் பிரியும்.

வியாபாரியாகவோ, தொழில் துறையினராகவோ இருந்தால் அவர் தம்மிடம் உள்ள தொகையை 10 பங்குகளாகப் பிரித்து 5 பங்கை தொழிலிலும், இரண்டு பங்கை வீடுகளிலும், ஒரு பங்கை நிலத்திலும், ஒரு பங்கை பங்குகளிலும், அரைப்பங்கை தங்கத்திலும் போட்டு, அரைப் பங்கை ரொக்கமாகவும் வைத்திருக்க வேண்டும். அவருடைய மூலதனம் 100 ஆயிரமாக இருந்தால் அது 50, 20, 10, 10, 5, 5 எனப் பிரியும். கம்பெனியின் பங்குகளை எல்லாவற்றையும் ஒரு துறையிலேயே வாங்கிவிடாமல் பாங்க், நூல், சர்க்கரை, துணி, தோட்டம், இயந்திரம் ஆகியபல துறைப் பங்குகளாகவும் பார்த்து வாங்கி வைப்பது நலமாகும். இம்முறையானது வஞ்சக மக்களிடமிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள மட்டுமல்லாமல், ஒரு திடமான கொள்கையில்லாத மக்களால் ஆட்சி செய்யப் பெறுகிற அரசாங்கத்தின் போக்குகளிலிருந்தும் பாதுகாத்துக்கொள்ள உதவும். ஒரு துறை தாழ்த்திவிட்டாலும், மற்றொரு துறை உயர்த்திவிடும். எந்த முறையிற் பார்த்தாலும் இதைவிடச் சிறந்த பாதுகாப்புக் கலை இப்போது இல்லை.

### வரவுக்குமிஞ்சிய செலவு அழிவைத் தரும்

திடீரென வருமானம் குறைந்துவிட்டால் அல்லது தடைப்பட்டுவிட்டால் எவரும் வருத்தப்படவேண்டியதில்லை. வருந்தியும் பயன் இல்லை. அவர்கள் உடனே செய்யவேண்டியது செலவினத்தைக் குறைத்துக்கொள்வதுதான். ஒரு குளத்திற்கு தண்ணீர் வரும் வழி அடைபட்டுப்போனால், அக்குளத்தின் வடிகாலை உடனே மூட வேண்டியதுதான் சிறந்த வழி. வரவே சிறுத்து செலவே பெருத்தால் அதுவே அழிக்கும் அவனை.

ஒருவன் தனக்கு வருகிற வருமானத்திலும், செலவிலும், சேமிப்பிலும், பாதுகாப்பிலும் செலுத்துகிற கருத்தைவிட தாம் சார்ந்திருக்கிற ஒருபொது அமைப்பிற்கு வருகிற வருமானத்திலும், செலவிலும், சேமிப்பிலும், பாதுகாப்பிலும் அதிகமாகக் கருத்தைச் செலவிட்டாக வேண்டும். இன்றேல் பழி தாங்க முடியா அளவிற்கு வந்துவிடும். அத்தகைய மக்கள் பொது வாழ்வில் தோன்றுவதைவிட தோன்றுதிருப்பதே நல்லது.

ஒரு தனி மனிதன் தவறான வழியில் பொருள் சேர்க்க எண்ணிவிடக் கூடாது. ஏனெனில், அழ அழக்கொண்ட அது அழ அழப்போய்விடும். அவ்வாறே ஒரு அமைப்பு பொது மக்களைத் துன்புறுத்தி பொருள் சேர்க்க எண்ணிவிடக் கூடாது; ஏனெனில் ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளாக மாறிவிடும். பின் அது எவ்வளவு பெரிய அமைப்பாக இருந்தாலும் அழிந்தொழிந்து போய்விடும்.

### பொது வாழ்வு புனிதமானது

பொதுவாழ்வில் ஈடுபடுகிறவர்களுக்கு உயர்ந்த மனப்பான்மையும், உறுதியான கொள்கையும்தேவை. சொந்த உழைப்பினால்வரும் வருமானத்தில் உண்டு வாழும் மக்களே பொது வாழ்விற்குத்தேவை. பொது வாழ்விலேயே வயிறு கழுவி வாழும் மக்களைக் கொண்ட நாடு ஒருபொழுதும்வாழாது ஆகவே ஒருவனுக்கு தன் வாழ்விற்காகவும், பொது வாழ்விற்காகவும் பொருட் செல்வம் கட்டாயம்தேவை. தனிப்பட்டவர்க்கு தேவைப் படுவது போலவே ஒரு நாட்டிற்கும் பொருளாதாரம் தேவை.

பொருளாதாரக் கொள்கைகளைப் பித்தலாட்டக் கொள்கைகள் எனச் சிலர் கூறுவதுண்டு. அது தவறு. அவ்வாறு குறை கூறப்படுவதற்குரிய காரணங்கள் இரண்டு. ஒன்று பொது மக்களுக்கு இன்னதென்றே விளங்காதது. மற்றொன்று, பொருளாதாரப் பேரறிஞர்களிடமிருந்தே மாறுபட்ட கருத்துக்கள் வந்துகொண்டிருப்பது.

### பொருளியல் நிலை

பழங்காலத்து மக்களுக்குப் பணம் தேவையில்லாதிருந்தது. அவர்கள் தம்மிடம் உள்ள பொருள்களைக் கொடுத்து தேவைப்படும் பொருள்களை வாங்கிவந்தனர். இதற்கு பண்டமாற்று முறை எனப் பெயர். காலப் போக்கில் தம்மிடம் உள்ள பொருள்களைத் தேவைப்படாத பொருள்களுக்கும் விற்கவேண்டி வந்ததால் பொருள்களின் அளவு கருவியாக எல்லோருக்கும் தேவைப்படும் ஒரு பொருள் நிற்க வேண்டிவந்தது. முதலில் நின்றது நெல் அடுத்து நின்றவை ஆடு, மாடுகள். பின் இரும்பு, செம்பு முதலியவை. இறுதியாக பொருட் செல்வத்தின் அளவு கருவியாக நின்றவை பொன்னும், வெள்ளியும். இப்போது அதுவும் மாறிக் கலப்பட உலோகமும், காகிதமுமே அளவு கருவியாக நிற்கின்றது.

ஈயப்பணமும், காகிதப்பணமும் வெளி மதிப்பு உள்ளவையே. அவற்றின் உள் மதிப்பு மிகக்குறைவு. அவை தன் மதிப்பினால் செல்லுபடியாவதில்லை. அரசாங்க முத்திரையினால் செல்லுபடியாகிக்கொண்டிருக்கின்றன. இப்போது தன் மதிப்பினால்

(17-ம் பக்கம் பார்க்க)

## ஈழத்து வாழ் தமிழ் மக்களுக்கு தமிழகத்தில் நாலுகோடியினர் துணை

### எப்போதும் உண்டு என்கிறார் தமிழகத் தலைவர் ஆதித்தனார்



தமிழகத்திலுள்ள நாம்—தமிழர் கட்சித் தலைவரும், தமிழ் நாட்டு அரசியற் தலைவர்களில் மதிப்புக்குரிய ஒருவருமான திரு. சி. பா. ஆதித்தனார், 'சுதந்திரன் பொங்கல் மலர்' மூலம், ஈழத்து தமிழ் பேசும் மக்களுக்குப் பின் வரும் வாழ்த்துச் செய்தியை அனுப்புகிறார்:

"தமிழகத்தில் வாழ்கின்ற தமிழர்களும், ஈழத்தில் வாழ்கின்ற தமிழர்களும் மொழியால், பண்பாட்டால், வரலாற்றால் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களே. தமிழகத்தில் இந்தி ஆதிக்கத்தின் கீழும், இலங்கையில் சிங்கள ஆதிக்கத்தின் கீழும் தமிழ் பேசும் இனம் அனுபவித்து வரும் துயரங்களை காலத்தின் கொடுமை என்று சொல்லுவதைத் தவிர வேறு வழியில்லை.

உலகெல்லாம் ஒரு காலத்தில் ஆண்ட தமிழ் இனம் இன்று உருக்குலைந்து சிதறிக்கிடப்பதைப்பார்க்கிறோம்.

இந்த நிலையில் ஒவ்வொரு தமிழனும் குன்றாத விடுதலை உணர்ச்சியோடும் கூர்மையான விழிப்புணர்ச்சியோடும் இருக்க வேண்டியது அவசியமாகும். ஈழத்தில் உள்ள தமிழர்கள் தாங்கள் சிறுபான்மையினர் என்ற தாழ்ந்த எண்ணத்தை விடுத்து தமிழகத்தில் எப்போதும் அவர்களுக்குத் துணையாக நாலு கோடி தமிழர்கள் இருக்கின்றார்கள் என்று கருத வேண்டும்.

நீங்கள் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறீர்கள். உங்களைப் போலவே விடுதலைப்போரில் பங்கு கொண்டிருக்கும் தமிழகம் உங்களுக்கு மிகவும் அருகில் இருக்கிறது என்பதை மறந்துவிடாதீர்கள்.

உங்கள் கொள்கை உங்கள் காலத்திலேயே வெற்றி பெறுவதாக என்று தமிழர் நாளாகிய இப் பொங்கல் புதுநாளில் "சுதந்திரன்" மூலமாக ஈழத்தில் வாழும் தமிழ் பெருமக்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்".

சிறுகதை

# பட்டுச் சட்டை

— சிற்பி —

பணத்தின் வாரிசுக்கும் ஏழையின் வழித் தோன்றலுக்குமிடையே நடைபெற்றுக் கொண்டிருந்தது போராட்டம். கார்த்திகேசருடைய குழந்தையின் பட்டுச் சட்டையை இழுத்துக் கிழித்து விட்டிருந்தான் வேலன். வேலனின் கையைக் கடித்துச் சுவைத்தது பணக்காரக் குழந்தை. தொடர்ந்து ஏற்பட்ட மல்யுத்தத்தில் யாருக்கு வெற்றி, யாருக்குத் தோல்வி என்பதைத் தீர்மானிப்பதற்கிடையில்............

"அப்பூ, எங்கையப்பு என்ரை பட்டுச் சட்டை? இண்டைக்குக் கட்டாயம் வாங்கி யாறதெண்டெல்லே சொன்னனீ. எங்கை அந்தப் பட்டுச் சட்டை?" இந்த ஒரே ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டு, பதில் வராததால் அழுவதற்கு மட்டும் வேலனுக்குத் தெரிந்தது.

"பேய்! கழுதை...!"

"............"

"மூதேசி!...... முட்டாள்! வேலையைச் செய்யாமல் என்னடா தூங்கிறாய்.........?"—கார்த்திகேசர் 'பட்டமளிப்பு'ச்சொற்பொழிவைத் தன் கர்ண கடூரமான குரலில் செய்து கொண்டிருந்தார். அந்தக் கௌரவப் பட்டங்களை ஏற்க முடியாதவனாய், தன் எசமான் அருகிலேயே நிற்கிறார் என்பதை அறியாதவனாய், ஏதோ ஒரு நினைவு மயக்கத்தில் நின்றான் முருகன்.

கார்த்திகேசரின் இடிமுழக்கக்குரல் மீண்டும் கேட்டது; "பேய் வாடா இஞ்சாலை......!" கட்டளையிட்டபடி, கையிலிருந்த தடியால் அவன் முதுகில் குத்தினார்.

நினைவுலகிலிருந்து இழுத்து விழுத்தப்பட்ட முருகன் துடித்துப் பதைத்துக் கொண்டு வந்து எசமானைக் கும்பிட்டான்.

"என்னடா, வேலை ஒண்டையும் செய்யாமை மரமாய் நிக்கிறியேடா! உனக்குச் சாப்பாடு போடுறதுக்கு என்ரை வீடென்ன, சத்திரமே!"—இதமாகப் பேசி அறியாத கார்த்திகேசர் தன் சொற்களினால் உதைத்தார் முருகனை.

"இல்லை நயிந்தை...... என்னத்தையோ யோசிச்சுக்கொண்டு நிண்டிட்டன்......" முருகனின் குரலில் பணிவு; உடலில் குனிவு.

"சரி, போடா...... போ.... போய் வேலையளைச் செய்.... சும்மா சோத்து மாடு மாதிரி நிற்காதை......"

'பெட் காப்பி' குடித்துவிட்டு வந்த கார்த்திகேசருக்கு இதற்குள் பசிக்கத் தொடங்கிவிட்டது; வீட்டுக்குள் போனார். வெறு வயிற்றோடு வந்த முருகன் 'விறு விறு' என்று சென்றான், வேலைகளைச் செய்வதற்கு.

★

கார்த்திகேசர் பரம்பரைப் பணக்காரருமல்ல, திடீர் பணக்காரருமல்ல, இரண்டிற்கும் இடைப்பட்டவர். எச்சில் கையால் எதையுமே ஓட்டாது, ஒவ்வொரு சோறாக, ஒவ்வொரு சதமாகச் சேமித்துச் சேமித்துப் பணக்காரரானவர். ஆரம்பத்திலே ஒரு சிறிய வட்டிக் கடை வைத்திருந்தவர்க்கு இரண்டாம் உலகப் போர், சற்று அதிகமாகவே அள்ளிக் கொடுத்துவிட்டது. அவர் பெரிய மனிதரானார்; பிரமுகரானார்; பிரபுவானார்.

அறுதி எழுதி வாங்கிய வீடுகள், காணிகளைத் தவிர தாமாகவே சில கேந்திர ஸ்தானங்களில் நிலம் வாங்கினார்; வீடுகள் கட்டி வாடகைக்கு விட்டார்; கடைகள் கட்டி சரிக்குச் சரி 'சந்தோஷ'மும்; வாடகையும் வாங்கினார்.

ஆரம்பத்தில் அவர் குடியிருந்த சின்னஞ்சிறு வீடு, இப்போது பென்னம்பெரிய பங்களாவாகப் புதுப்பிறவி எடுத்தது. வாயில் காவலுக்கு, கூப்பிட்ட குரலுக்கு 'ஏன்' என்று கேட்பதற்கு, எடுபிடி வேலைகட்கு, மாடு கன்றுகளைப் பார்ப்பதற்கு, வயல்களைக் கவனிப்பதற்கு- இதற்கெல்லாம் பல வேலைக்காரர்கள் அங்கிருந்தார்கள்.

ஒருவர் இன்ன வேலைதான் செய்ய வேண்டுமென்ற வரையறை இல்லை. இருக்கின்ற வேலைகளையும், இடுகின்ற வேலைகளையும் தனித்தும் பகிர்ந்தும் எல்லாருமே செய்ய வேண்டும். வேலையாளர்களின் பகல் பொழுது முழுவதும் கார்த்திகேசரின் வீட்டிலும், வயலிலுமே கழிந்தது. தத்தம் சொந்த வீடுகளிலிருந்து சூரியனைப் பார்த்தறியாதவர்கள் அவர்கள்.

இத்தனை செய்தும் அவர்களுக்குக் கிடைத்தவை...?

பத்து மணிக்குக் காலைச் சாப்பாடு; இரண்டு மணிக்கு மத்தியானச் சாப்பாடு கிடைத்தது; இரவு ஏழு, எட்டு மணிக்கு, அன்றைய வேலைகள் பற்றிய கணக்கெடுப்பிற்குப் பின், எசமானின் ஏச்சும், பேச்சும் கிடைத்தன. சம்பளம்......? அதைப்பற்றி யாருமே வாய் திறக்கக்கூடாது. எப்போதாவது எசமானுக்குப் 'புளுகம்' வந்துவிட்டால், ஏதாவது ஒன்றைப் பாதியைக்கொடுப்பார்.

எப்போதாவது அடிக்கும் இந்த அதிர்ஷ்டம்; கார்த்திகேசர் வீட்டு வேலைக்காரர் என்பதனால் ஊரவர் காட்டும் பயம் கலந்த ஒருவித மரியாதை; அவரைப் பார்த்துக் கொண்டு வெளியே போனால் வேறு எங்கேயுமே வேலை செய்ய முடியாத ஒரு நிலைமை—இவைதான் அவர்களைத் தொடர்ந்து அங்கே நிலைக்க வைத்தன. கார்த்திகேசரின் பணமும், கௌரவமும் உடம்பும் அநாவசியமாக வளர, இந்தத் தொழிலாளர்களின் உடம்பு, மனமும் நிம்மதியும் அநாயாசமாகத் தேய்ந்தன.

இந்தத்திருக்கூட்டத்தைச் சேர்ந்தவன்தான் முருகன்.

★

முருகனால் அன்று முழு மனத்துடன் வேலை செய்ய முடியவில்லை. முதனாள் மாலை நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி அவன் மனத்தை அரித்து, அறுத்து, அணு அணுவாய் வறுத்தெடுத்தது.

★

கார்த்திகேசரின் கடைசிக் குழந்தையை, அழகான சிறிய கை வண்டி ஒன்றில் வீதியோரமாகத் தள்ளிக் கொண்டு சென்றான் வேடிக்கைக் காட்டுவதற்காக. அழகான குழந்தை அது. பணக்காரர்களுக்கே உரித்தான ஒருவித 'வெதும்பல்' சிவப்பு நிறம்; தாமரை இதழ்ச் சொக்கு; பூப்பாதங்கள்; உடம்பின் நிறத்துக்குப் பொருத்தமாக, சந்தனக் கலரில் விலையுயர்ந்த பட்டுச் சட்டை; கண் ஊறு படாமல் இருப்பதற்காக நெற்றியை மூடி ஒரு கறுத்த 'அம்புளிமான்' பொட்டு. வழ வழப்பான மேனி. குளு குளுப்பான தோற்றம்; மொழு மொழு என்று வளர்ந்திருந்தது குழந்தை. வீதியோரத்திலுள்ள வேடிக்கைக் காட்சிகள் குழந்தையை மகிழ வைத்தன. அடிக்கடி தன் பிஞ்சுக் கைகளை ஆட்டி, நெஞ்சு நிறையச் சிரித்து விளையாடிக் கொண்டிருந்தது குழந்தை.

முருகனால் அந்த வேலையில் தன் செல்லக் குழந்தையைப் பற்றி நினைக்காமல் இருக்க முடியவில்லை. அவனுடைய குழந்தை வேலனுக்கும் ஐந்து வயதிருக்கும். வாடிய தோற்றம்; வயதிற்கு மீறிய மெலிவு. அவன்தான் முருகனுடைய கண்ணின் மணி; எண்ணத்தின் ஒளி. மனைவி கொடுக்கும் இன்பத்திலும்பார்க்க மகன் கொடுக்கும் மழலை இன்பம்பெரியது; மிகப்பெரியது. நாள் முழுவதும் வேலை செய்துவிட்டு நலிந்து போய் வருவான் முருகன். ஆனால் வேலனைக் கையில் தூக்கியதும் அந்தக் களைப்பெல்லாம் பறந்து விடும்; விரக்தி எல்லாம் மறந்து விடும்.

என் அருமைச் செல்வத்தை ஒரு நாளாவது இப்படி வண்டியில் வைத்து உலாத்தினால்......?

சொல்லி வைத்தாற்போல் அவனுடைய மனைவி அந்த வழியால் வந்தாள். அவளுடைய சேலைத்தலைப்புள் ஒட்டியபடி வந்தான் வேலன்.

ஒரே புளுகமாயிருந்தது முருகனுக்கு. ஓடிச் சென்று வேலனைத் தூக்கினான்; ஆசைதீர முத்தமிட்டான்; தோளில் வைத்து துள்ளிக் குதித்தான். ஆனால் புதிய குழந்தையையும் அழகான வண்டியையும் கண்ட வேலன் தந்தையின் பிடியிலிருந்து நழுவி அங்கே ஓடினான்.

முருகனின் கவனம் மனைவி மேல் சென்றது. யாரோ ஒருவருடைய வீட்டில் சில சில்லறை வேலைகளைச்செய்து விட்டுத் திரும்பியவள் அவள். உழைப்பினால் சற்று வாடியிருந்த போதிலும், உடம்பின் இறுக்கம் சற்றும் குறையவில்லை. மாலைச் சூரியனின் மஞ்சள் ஒளியில் அவள் மெழுகுத் தேகம் மினுமினுத்து, முருகனின் மனதில் ஒருவித இன்பக் குதுகுதுப்பை ஏற்படுத்தியது. அவள் கையிலிருந்த வாடிய வெற்றிலையைத் தன் வாயினாலேயே பெற்றுக் கொண்ட அவன், தனக்குத் தெரிந்த இனிய சொற்களினால் அவளுடைய அழகை வர்ணித்துக் கொண்டே போனான். அவளுக்குப் பெருமை ஒரு புறம்; வீதி என்றும் பாராது, இப்படி நடந்து கொள்கின்றாரே என்ற வெட்கம் ஒரு புறம். என்றாலும் காசு கொடுக்காமல் கிடைக்கும் அந்த இன்பத்தில், கணவனின் உருவத்தைத் தன் கண்களால் விழுங்கியபடி நின்றாள். தொழிலாளியின் மனைவியான அந்தத் தொழிலாளி.

குழந்தைகளின் அலறல் அவர்களை இந்த உலகிற்குக் கொண்டு வந்தது. திரும்பிப் பார்த்தவர்கள் பதறிக் கொண்டு ஓடினார்கள்.

பணத்தின் வாரிசுக்கும் ஏழ்மையின் வழிதோன்றலுக்குமிடையே நடைபெற்றுக் கொண்டிருந்தது போராட்டம். கார்த்திகேசனுடைய குழந்தையின் பட்டுச் சட்டையை இழுத்துக் கிழித்து விட்டிருந்தான் வேலன். வேலனின் கையைக் கடித்துச் சுவைத்தது பணக்காரக்குழந்தை. தொடர்ந்து ஏற்பட்ட மல்யுத்தத்தில் யாருக்கு வெற்றி, யாருக்குத் தோல்வி என்பதைத் தீர்மானிப்பதற்கிடையில்—

இரண்டு குழந்தைகளும் ஒரே குரலில் இராகமிழுத்தனர்.

பெற்ற பாசம் கண்களை மறைக்க, முரட்டுத் தனமாகப்பணக்காரக்குழந்தையை விடுவித்து, வேலனை எடுத்தணைத்தார் முருகனும் மனைவியும். பணம் பரிதாபமாக ஓலமிட்டது!

அந்தப் பரிதாப ஓலம், கார்த்திகேசரை நினைவூட்ட அந்த நினைவு முருகனின் நெஞ்சை நடுங்க வைத்தது.

நடந்ததை எசமான் அறிந்தால்...? என்னை வேலையை விட்டே போகச் சொல்லி விடுவாரோ! அடித்து நொறுக்கிப் போடுவாரோ! அப்படி என்றால் என்ரை பெண்சாதியின் நிலை? வேலனின் கதி!

முருகனின் மனத்தில் குமிழியிட்ட இந்தப் பயங்கர எண்ணங்கள், அவனுடைய ஆத்திரத்தைச் சிறிது சிறிதாகத் தூண்டி, உடம்பை முறுக்கேற்றின.

குழந்தையின் அலறல் நிற்பதாயில்லை. வந்த ஆத்திரத்தைத் தீர்ப்பதற்கு வாய்ப்பாக இருந்தவன் வேலன்தான்.

"உன்னாலை தானேடா இதெல்லாம்......சனியன்..." திட்டிக் கொண்டே வேலனின் முதுகில் 'பளார்' என இரண்டு வைத்தான்.

அடியைத்தாங்க முடியாத வேலன் வீரிட்டழுதான். நிலைமை மோசமாவதற்கிடையில் முருகனையும் மகனையும் பிரித்து வைத்த அவன் மனைவி, வேலனைத் தூக்கி அணைத்துக் கொண்டாள். "உங்களுக்கென்ன விசர் பிடிச்சிட்டுதே? ஏன் இப்படி இவனைப் போட்டு அடிக்கிறீங்க........"

கைவண்டியை வீட்டுக்குத் திருப்பிக் கொண்டுபோய், குழந்தையின் அழுகையை ஒருவிதமாக நிறுத்திவிட்டு, சட்டை கிழிந்ததற்குப் பொருத்தமான சாட்டைச் சொல்லி, திருமதி கார்த்திகேசுவிடம் குழந்தையை ஒப்படைத்துவிட்டு, முருகன் குடிசைக்குத் திரும்பிய போது, அங்கிருந்த சூழ்நிலை பயங்கரமாக இருந்தது. மங்கிய தகர விளக்கின் ஒளியிலே தன் மனைவியின் மடியிலே வேலன்கிடந்து அனுங்குவது அவனுக்குத் தெரிந்தது. காய்ச்சலின் வேகத்தினால், இடையிடையே அவன் பிதற்றிக்கொண்டிருந்தான். "அடியாதை......அப்பூ...... அப்பூ......அடியாதை".

தன் நெஞ்சை யாரோ கசக்கிப் பிழிகின்றார்கள் என்ற பிரமையில், அதை இறுகப் பிடித்துக் கொண்டான் முருகன். கண்கள் ஒழுகின. பாடுபட்டுப் பெற்றெடுத்துப் பக்குவமாய் வளர்த்து வந்த அந்தப் பச்சைப் பாலகனை அவன் தானே அன்று மாலையில் அடித்திருந்தான்!

"இனிமேல் அடிக்கமாட்டன்...அடிக்கவே மாட்டன் ......ஒருக்காலும் அடிக்க மாட்டன்......நீ பேசாமை நித்திரையைக் கொள்"—வேலனின் முகத்துடன் தன் முகத்தையும் பதித்து மன்றாடினான்; விம்மி விம்மி அழுதான்.


அன்றைய இரவு மூவருக்கும் சிவராத்திரியாகவே கழிந்தது. அடிக்கடி அனுங்கினான் வேலன். அவனை அணைத்தபடி தம் விழிநீரால் அவனைக் குளிப்பாட்டினார் முருகனும், மனைவியும்.

விடிந்தது, காய்ச்சல் சற்றுக் குறைந்திருந்தது. வேலைக்கு எங்கும் போக வேண்டாம் என்று மனைவியிடம் சொல்லிவிட்டு, கார்த்திகேசரின் வீட்டிற்கு வந்தான் முருகன்.

★

சிந்தனை முழுவதும் மகன் மேல் இருந்த பொழுது, வேலையை எப்படி ஒழுங்காகச் செய்ய முடியும்? ஏக்கம் நிறைந்த அவன் விழிகளையும், சோகம் நிறைந்த பார்வையையும், சோர்வு நிறைந்த தோற்றத்தையும் கண்ட மற்றைய தொழிலாளர்கள் அவனை அனுதாபத்துடன் அணுகினர். ஆனால் அவன் யாருக்குமே எதையுமே சொல்லவில்லை. சொல்

(16-ம் பக்கம் பார்க்க)

## ரிஷி
## அஜமாமிச லேகியம்

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்து தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதை பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்து விடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்திய மில்லை.

விலை 1 றுத்தல் ரூபா 35/00
" ½ " ரூபா 22/50

[தபாற் செலவு 95 சதம்]

ஆயுர்வேத டாக்டர்:

**T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்**

**ஞானசுந்தர வைத்தியசாலை,**

187, செட்டியார் தெரு, கொழும்பு.

# செஞ்சீனவில் மொழி வளர்ச்சி

## சீன மக்களின் தாய் மொழிப்பற்று நம்மவர்களுக்கு வழிகாட்டி

உணவிற்காக வேண்டி, சொந்த மொழியை அடிமைப் படுத்தி வந்த மொழியை வரவேற்பதில் ஆவல் கொள்கின்றனர் எம் தோழர்கள் சிலர். உணவில் மாத்திரமல்ல, உணர்வுக்கு ஊன்று கோல் போன்ற மொழி வளர்ச்சியில் செஞ்சீனர் எவ்வாறு ஈடுபட்டுள்ளனர் என்பதை விளக்குகிறார் இக்கட்டுரை ஆசிரியர்.

இவர் 58ம் ஆண்டு இலங்கை நல்லெண்ணத் தூது குழுவில் ஒருவராக செஞ்சீனா சென்றவர்.

**மு. சிவானந்தன் எம். ஏ.**

பொங்கல் விழா நாள் உழவர் திருநாள். உழைப்பின் பெருமையை அறிகிறேன்: போற்றுகிறேன். உழவுப் பெரு மக்கள் மாத்திரமல்ல, உழைப்பாளர் அனைவரதும் இல்லங்களில் பானையிற் பொங்கலும், உள்ளத்தில் உவகையும் பொங்கக் காண்கின்றேன். மகிழ்ச்சிப் பெருக்கில் ஆடுகிறோம்; பாடுகிறோம்; கலை பல ஆக்குகிறோம். கலை வளர்ச்சிக்கு மொழி இன்றியமையாததல்லவா?

செஞ்சீன மக்களும் உழவின் பெருமையறிந்து "அறுவடைத் தினம்" கொண்டாடுகின்றனர். 1958-ம் ஆண்டு செஞ்சீனாவிலே, உழைப்பாளர் தினமான மேதின விழாவில் கலந்து கொண்ட நான், அவர்கள் தங்கள் மொழி வளர்ச்சியில் எவ்வளவு ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அறியும் வாய்ப்புப் பெற்றேன்.

### சீன எழுத்துக்கள்

சீன நாகரீகம் பழம் பெரும் நாகரீகங்களில் ஒன்று. இன்றும் தங்கள் மொழியைக் கண்ணெனப் போற்றுவதைக் கண்டேன். சீன எழுத்துக்கள் ஒலியியல் அடிப்படையில் அமைந்தவையல்ல. ஆதிகாலத்தில் பொருட்களின் படங்களே எழுத்துக்களாக இருந்தன. அப்படங்கள் உருமாறிப் பல கோடுகள் கண்ட எழுத்துக்களாக மாறின: ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு சொல்லே. கிட்டத்தட்ட அறுபதினாயிரம் எழுத்துக்கள் உள்ளன. அவற்றில் ஏழாயிரம் மட்டில்தான் சாதாரண புழக்கத்தில் உள்ளன. எட்டுக் கோடுகள் தொடக்கம் இருபத்தேழு கோடுகள் வரையுமுள்ளன ஒவ்வொரு எழுத்தும்!

### மொழி வளரத் தடைகள்

அச்சியந்திரம் அமைத்துத் தந்த பெருமை படைத்தவர்கள் சீனர். இன்றைய விஞ்ஞான யுகத்திலே "லினோ டைப்" (Lino Type) இயந்திரங்களைப் பாவித்து விரைவாக அச்சுக் கோர்த்து விடுகிறோமல்லவா? ஆனால் சீன மொழியிலுள்ள எழுத்துச் சிக்கலால் கையாலேயே அச்சுக்கோர்க்கும் நிர்ப்பந்த மேற்படுகின்றது. சீன அகராதியிலே சொற்களைத் தேடிக் கருத்துக்கள் அறிவதும் எளிதானதன்று. தொலைபேசி மூலம் செய்திகள் அனுப்புவதிலும் சுணக்க மேற்படுகின்றது. ஏனெனில் எண்களைக் குறியீடுகளாகப் பயன்படுத்தியே செய்தி அனுப்புகின்றனர். இவ்வளவு இடர்ப்பாடுகள் இருந்தும் சீனர்கள் பெரு முயற்சியோடு தம் மொழியைப் பயிலுகின்றனர். 'முயற்சி தன் மெய் வருந்தக் கூலி தரும்' அல்லவா?

### எழுத்துச் சீர்திருத்தம்

சராசரி பன்னிரண்டு கோடுகள் உள்ள இரண்டாயிரம் சீன மொழிச் சொற்களைப் பயில ஒரு சாதாரண மனிதனுக்கு 450 மணித்தியாலங்கள் எடுக்கும். பீக்கிங் பல்கலைக் கழக மொழித் துறைப் பேராசிரியர் இத் தகவலைத் தந்தார். "இச் சிரமத்தைக் குறைக்க ஏதாவது செய்ய முடியாதா? அடுத்து முயன்றால் ஆகாத தொன்றுண்டா?" என்று கேட்டேன், தற்போது சீன மொழியில் நடைபெற்று வரும் சீர்திருத்தத்தைப் பற்றி ஒரு சொற்பொழிவே நிகழ்த்திவிட்டார் அந்தப் பேராசிரியர் சீன மொழியில். பாவம்! எமக்கு மொழி பெயர்ப்பாளராக வந்த சீனத்துச் சொல்லழகி பாடு திண்டாட்டமாகி விட்டது. பெண்ணென்றால் பேயுமிரங்கும் என்பார்கள். நானென்ன, பேயிலும் கடையவனா? ஏன் அந்தக் கேள்வியைக் கேட்டு, பேராசிரியரின் சொற்பெருக்கை மொழி பெயர்க்கச் செய்தேன் என்று என்னையே நான் நொந்து கொண்டேன்.

சீன மொழி எழுத்தமைப்பை ஒத்திருந்தது வியட்நாம் மொழி. இம்மொழியைச் சீர்திருத்தி ஒலியியல் அடிப்படையில் எழுத்துக்களை அமைத்தனராம். நூறு மணித்தியாலங்களுக்கு அம் மொழியைப் பயிலுமொருவன் அதிலுள்ள இலக்கியத்தை வாசித்தறியலாமாம். இதனைக் கண்ட சீனரும் எழுத்துச் சீர்திருத்தத்தில் இறங்கி விட்டனராம். சீனப்பொதுவுடைமையின் தந்தையெனப் போற்றப்படும் மா-சே-துங் 1940-ம் ஆண்டளவிலேயே இச் சீர்திருத்தத்திற்கு வழி கோலினார் என்று பெருமையடித்துக் கொண்டார் அவர்.

### அந்நிய மொழிப் பயிற்சி

எப்படித்தான் ஒதுங்கியிருந்தாலும், ஒதுக்கப்பட்டிருந்தாலும், வாணிபம், தொழில் நுட்பம் முதலியவற்றிற்காகவேனும் வேற்று நாட்டவரோடு தொடர்பு கொள்ள வேண்டும். எனவே தான் அந்நிய மொழிகளைப் பயிற்றுவிக்கவெனத் தனிக் கல்லூரியே நடத்துகிறது செஞ் சீன அரசாங்கம். பீக்கிங்கில் இருக்கும் இக் கல்லூரிக்குச் சென்றிருந்தேன். பேராசிரியர் சியூ-டா-கௌ வரவேற்றார். நேரடியாகவே எம்மோடு சிறப்பான ஆங்கிலத்தில் உரையாடினார். வியப்புக் குறி விழுந்தது என் முகத்தில். வழிகாட்டி வந்த மங்கையின் முகத்திலோ மகிழ்ச்சிக் குறி தெரிந்தது. தற்கால ஆட்சியில் விளைந்த நலன்கள் பலவற்றையும் அங்குள்ள சிலர் திருப்பிக் கூறியவற்றை மொழி பெயர்த்த மங்கை நல்லாள், ஓய்வு கிடைத்ததே இந்த ஒழியாத புளுகிற்கு என்று எண்ணி மகிழ்ந்தாரோ, என்னவோ!

### மொழிபெயர்ப்பாளரும் அரசியலும்

ஆங்கிலமும், உருசிய மொழி, பிரெஞ்சு, சர்மானி முதலிய மொழிகளைப் பேசவும், மொழி பெயர்க்கவும் பயிற்சியளிக்கின்றனர் இக் கல்லூரியில். அந்நிய நாட்டு விருந்தினரோடு அதிகம் கலந்துரையாடும் வாய்ப்புப் பெற்றவர்கள் இந்த மொழிபெயர்ப்பாளர்கள். இவர்கள் மூலம் ஆட்சிக்கு மாறான கருத்துக்களை அந்நியர் பெறுவதைத் தடுப்பதிற் கண்ணுங் கருத்துமாக இருக்கின்றது செஞ்சீன அரசாங்கம். நாட்டை நேசிப்பது போல் ஆட்சியையும் நேசிக்க இவர்களுக்குப் பயிற்சி தரப்படுகின்றது. "நின்றும், இருந்தும், கிடந்தும், என்றும் பொதுவுடைமை பணி" என்பதுதான் இவர்கள் தாரக மந்திரம் போலும்!

### விருந்தும் மொழியும்

கல்லூரியின் பல பிரிவுகளுக்கும் எம்மை அழைத்துச் சென்று பரிவோடு விளக்கினார் பேராசிரியர். ஒரே நேரத்தில் பல மொழி பெயர்ப்பாளர்கள் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பயிற்சி பெறுவதைக் காட்டினார். இதனால் பல நாட்டுப் பிரதிநிதிகளும் எளிதாகக் கருத்துப் பரிமாற முடிகிறது. பல மொழிப் பயிற்சிகளையும் ஒரே நேரத்தில் கண்டு, கேட்டு, உய்த்துணர்ந்ததினாற் போலும் எனக்கும் சிறிது அயர்வு ஏற்பட்டது. "செவிக்குணவில்லாதபோது சிறிது வயிற்றிற்கும் ஈயப்படும்" என்ற வள்ளுவர் வாக்கு நினைவு வந்த நேரத்தில், "பொது அறைக்கு வாருங்கள். கொஞ்சத் தேநீர் அருந்தலாம்!" என்றார் பேராசிரியர். எனக்கிருந்த தாகத்திலும் பசிக் களைப்பிலும் "கொஞ்சத் தேநீர் அருந்தலாம்!" என்றவர் கூறியது பிடிக்கவில்லை. இப்படித்தான் வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி வாழ்கிறார்களாக்கும் என்றெண்ணி அமைதி கொண்டேன். என்றாலும் விருந்திலே ஒரு கை பார்த்துவிட்டேன்.

விருந்தின் போது நல்ல ஆங்கிலச் சொற்பொழிவைக் கேட்கலாமென்றிருந்தேன்; ஏமாந்தேன். பேச எழுந்தார், இருவினர் செருமினர்; சீன மொழியிலே தட்டித் தவறிப் பேசினர்; பல்லாண்டு இங்கிலாந்திலே ஆங்கிலம் பயின்ற பேராசிரியர் நாட்டுப் பற்றினால் தாய் மொழியிலேயே அரசாங்க விருந்தில் பேசினார்.

## கன்னித் தமிழ்...

(11-ம பக்கத் தொடர்ச்சி)

வகையாலும் வரும் பணத்துடன் எமது சொந்தப் பணத்தையும் சேர்த்து, "கலைச்செல்வி"யை அச்சிட்டு வருகின்றோம். பெயரளவில் தான் நாம் உரிமையாளர்களே தவிர, உண்மையான உரிமையாளர்கள் "கலைச் செல்வி"யின் சந்தாதாரர்களும் விளம்பரதாரருமே" என மிகுந்த அடக்கத்துடன் கூறிவருகின்றனர் "கலைச் செல்வி" நிர்வாகிகள்.

சுயநலம் இன்றிச் செந்தமிழ்ப் பணி புரியும் "கலைச் செல்வி" நிர்வாகிகளை ஆதரிப்பது தமிழ் மக்களின் தலையாய கடமையாகும். மாதந்தோறும் அதிக பணம் செலவு செய்து இந்தியப் பத்திரிகைகளை வாங்குபவர்கள், இனிமேல் அவற்றுடன் சேர்த்து, "கலைச் செல்வி"யையும் வாங்க வேண்டும். வியாபாரிகள் தாராளமாக விளம்பரம் உதவ வேண்டும். "தமிழினம் இலங்கையில் இருந்ததென்பது பொய்யாய்ப் பழங்கதையாய், கனவாய் மாறிப் போக வேண்டும்" என உள்ளூர விரும்பி, அந்த நிலை ஏற்படுவதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர் சில அரசியல் தலைவர்கள். இந்த ஆபத்தைத் தவிர்க்க வேண்டியது நம் கடமையல்லவா? இலங்கையிலும் வெளிநாடுகளிலும், ஈழத் தமிழர்களின் பிரதிநிதியாக, கலைத் தூதுகை உலாவும் "கலைச் செல்வி"யை அனைவரும் ஆதரிப்பார்கள் என்பதற்கையமில்லை. அட்சரலட்சம் கொடுத்துத் தமிழ் வளர்த்தார்கள். நாம் ஆண்டு தோறும் நான்கு ரூபா கொடுக்கவா தயங்கப் போகின்றோம்?

வாழ்க கலைச்செல்வி! வளர்க அவள் தமிழ்ப் பணி!

## தமிழரசு அபேட்சகர் வெற்றி

### அச்சுவேலி கிராமசபைத் தேர்தலில்

அண்மையில் நடைபெற்ற அச்சுவேலிக் கிராமசபை முதலாம் வட்டார இடைத் தேர்தலில் தமிழரசுக் கட்சிக் கிளைச் செயலாளரான திரு. தா. சிவலிங்கம் வெற்றி பெற்றுள்ளார். இவர் இருபது வயது நிரம்பப் பெறாத இளைஞர்.

எதிர்த்துப் போட்டியிட்ட தமிழ் காங்கிரஸ் அபேட்சகரை 88 அதிகப்படி வாக்குகளால் தோற்கடித்துள்ளார்.

#### விபரம்

தா. சிவலிங்கம் தமிழரசு-316 த. இராசரத்தினம் தமிழ் காங்கிரஸ் 228. அதிகப்படி—88.


சிறந்தது! சிக்கனமானது! சிந்தனையூட்டுவது!




யானை பீடி ஸ்பெஷல்

காரம், மணம், குணம், நிறைந்தது.
புகைப்போருக்கு புத்துணர்ச்சியை ஊட்டும்.

யானை பீடி கம்பெனி,

62, மெசஞ்சர் வீதி, கொழும்பு. டெலிபோன்: 7651.

# பட்டுச் சட்டை

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தான் என்ன ஆகப் போகின்றது? விபரம் முழுவதையும் கூறிஞல் இரண்டு வார்த்தை இரக்கமுடன் பேசுவார்கள். அவ்வளவுதான். நோயினுல் கஷ்டப்படும் வேலனுக்கு அந்த வார்த்தைகள் எந்த விதத்தில் உதவி செய்யப் போகின்றன?

வேண்டா வெறுப்பாக அன்று வேலை செய்தான்; எசமான் கோபிப்பாரே என்பதற்காக வேலை செய்தான்.

பொழுது சருக வீட்டிற்குத் திரும்பினுன். காலையிலும் பார்க்க, காய்ச்சல் குறைந்திருந்தது. பிதற்றல் புதிய உருவம் பெற்றிருந்தது—"பட்டுச் சட்டை...... அப்பூ...பட்டுச் சட்டை..."

குழந்தை மனத்தின் சிக்கலான தத்துவம் முருகனுக்குத் தெரியாது. ஆனுல் முதல் நாளைய நிகழ்ச்சி, குழந்தையின் மனத்தில் ஒரு ஆசை வேரை ஆழப்பதித்து விட்டதுஎன்பதை உணர்ந்து கொண்டான். அந்த ஆசையை நிறைவேற்றி வைத்தால்தான், வேலனின் மனம் நிம்மதியடையுமோ!

"பட்டுச் சட்டை...அப்பூ ......பட்டுச் சட்டை,'!

முருகனின் நெஞ்சின் அடித்தளம்வரை அந்தக் குரல் எதிரொலித்தது. விலையுயர்ந்த ஒரு பட்டுச் சட்டையை வாங்குவதென்பது அவனுல் முடியக்கூடிய காரியமா? நாள் முழுவதும் கணவனும் மனைவியும் கஷ்டப்பட்டுழைத்து இதுவரை கண்ட பலன் என்ன? உண்மையான ஒரு கஷ்டம், உயிருக்கே ஆபத்து என்ற இந்த நிலையில் அவர்களின் உதவிக்கு வருவதற்கு யாவரும் இல்லையே! ஒன்றும் இல்லையே!

"அப்பூ...... ஊ......பட்டுச் சட்டை"

பணக்காரர்கள் தம்பணத்தின் பெருமையை, டாம்பீகத்தைப் பகிரங்கமாகக் காட்டப்போக, அதனுல் ஏழைகளின் உயிரல்லவா ஊசலாடத் தொடங்குகின்றது! கார்த்திகேசரின் குழந்தையுடன் வேலனை விளையாட விட்டது எவ்வளவு பெரிய பிழை! அந்தக் குழந்தையைப் பார்த்திராவிட்டால் வேலனுக்கு இந்த ஆசை வருமா?

"அப்பூ...சட்டை......பட்டுச் சட்டை..."

இப்படியே அவனைத் தொடர்ந்து ஏங்கச் செய்தால், காய்ச்சல் மறுபடியும் அதிகரித்துவிடுமே! காய்ச்சல் அதிகரித்துக் கடைசியில்.........!

முருகனுல் மேற்கொண்டு சிந்திக்கவே முடியவில்லை.

"கொஞ்சம் பொறடா ராசா. நான் இப்ப போய்க் கடையிலை கட்டாயம் உனக்கொரு சட்டை வாங்கியாறன்..." தன் அருமைச் செல்வத்தை அணைத்து உறுதிமொழி கூறிவிட்டு வெளியே வந்தான் முருகன்.

சுகத்துக்கும் துக்கத்துக்கும், நல்லதுக்கும் கெட்டதுக்கும்—எல்லாவற்றிற்கும் அன்பை நாடி ஆதரவைத் தேடி ஓட ஒரே ஒரு இடம் இருந்தது—கார்த்திகேசரின் வீடு. அவருடைய காலில் விழுந்து கதறி அழுதாலும் அவர் முருகனுக்கு இரங்கி உதவி புரிவாரா? பழைய அனுபவம் 'இல்லை' என்று பதிலளித்தது. வேலை செய்யாமல் நின்றதற்காக அன்று தானே அவருடைய ஏச்சையும் பேச்சையும் வேண்டிக் கட்டினுன்! மீண்டும் அவரிடஞ் சென்று பணம் தேவையென்ருல் பட்டுச் சட்டை வேண்டும் என்ருல், அவர் எள்ளி நகையாட மாட்டாரா? ஏசிக் கலைத்துவிட மாட்டாரா?

"அ...ப்......பூ... ப...ட்...... டு...ச்... ச......டை..."

உள்ளிருந்து வேலனின் குரல் மெல்லியதாகக் கேட்டது. இனியும் தாமதிக்கக் கூடாது என்று தீர்மானித்துக்கொண்டான். ஏதாவது வழி பிறக்காதா? என்ற ஏக்கத்தில் முற்றத்திற்கு வந்தவனின் கண்களில் அங்கே கட்டப்பட்டிருந்த மாடு தென்பட்டது.

"சந்தையடியில் இருக்கிற முத்துக் காக்கா எங்கடை மாட்டை விக்கிறதே எண்டு கேட்டவர். உங்களைக் கேட்டுச் சொல்லலாம் என்டு நான் சொன்னனுன்"—ஒரு கிழமைக்கு முன்பு மனைவி சொன்னது முருகனின் காதுகளில் ஒலித்தது.



"என்னட்டை என்ன கேக்கிறது? நீயே மறுமொழி சொல்லிறதுக்கென்ன விற்க முடியாதெண்டு? அது கண்டும் போட வேண்டாம்...... பாலும் கறக்க வேண்டாம். அதைக் கடைசிவரை விக்கிறேல்லை. இஞ்சை எங்களோடை அது நிற்கட்டும்"—அப்போதிருந்த மனநிலையில் அப்படிச் சொல்லியிருந்தான் முருகன்.

ஆனுல், இப்போது? மாட்டை விற்பதைத் தவிர வேறு வழியேஇல்லை. வேலன் பிழைக்கவேண்டுமென்ருல் மாட்டை விற்றுத்தான் ஆகவேண்டும்.

'முத்துக் காக்காவிடம் நியாயமான விலையைப் பேசலாம். வாற காசிலை ஒரு பட்டுச் சட்டை வாங்கி வேலனுக்குக் கொடுக்கலாம்!'

மாடு நிற்குமிடத்தை அடைந்தபோது, அவன் கண்களில் கண்ணீர் துளும்பியது. ஒரு சில நிமிடங்கள் அசைவற்று அப்படியே நின்ருன்; அதன் முதுகை அன்புடன் தடவிக் கொடுத்தான். அதன் முகத்தைத் தன் முகத்துடன் சேர்த்து வைத்துக் கொண்டு பைத்தியக்காரனைப்போல் அழுது தீர்த்தான்.

"அப்பூ......ஊ ......பட்டுச் சட்டை......!"

வேலனின் குரல் அவனைச் சுறுசுறுப்படையச் செய்தது.

மாட்டை அவிழ்த்துக் கொண்டு, வேலியைக் கடந்து, வீதியில் சென்ருன். மாடு முன்னேக்கிச் செல்ல, அவன் அதன் பின்னுல் செல்ல, அவனுடைய சிந்தனை பின்னேக்கிச் சென்றது.

அந்த மாடு அடிநாளில் கார்த்திகேசருக்குச் சொந்தமாக இருந்தது. அங்கிருந்த போதும் அதற்குத் தீன் வைப்பது, குளிப்பாட்டுவது, பால் கறப்பது — எல்லாமே முருகன்தான். வேறு யாரும் கிட்டச் சென்ருல், கொம்பினுல் குத்தும்; அல்லது காலால் அடிக்கும். அப்படி ஒரு விசித்திர உறவு முருகனுக்கும் அதற்குமிடையில் இருந்தது. மனிதர்களின் போலி அன்பிலும் பார்க்க, அந்த வாய்பேசா மிருகத்தின் ஊமைப் பாசம் அவனுக்குப் பிடித்துவிட்டது.

திடீரென்று பரவிய ஒரு நோய், கார்த்திகேசரின் மாடுகளையும் பற்றிக்கொண்டது. அவை சரியானபடி தீன் தின்னுது வரவர மெலிந்துகொண்டு வந்தன. காசிலே கண்ணுன கார்த்திகேசர் அவற்றை, உயிருடனிருக்கும்போதே, விற்க விரும்பினுர். சில மாடுகள் விலைப்பட்டன. அந்த மாட்டை வாங்குவதற்கு எவரும் முன்வரவில்லை.

மாட்டைத் தனக்குத் தரும்படி கேட்டான் முருகன். நோயுள்ள மாட்டைப் பட்டியில் வைத்திருந்தால், மற்றைய மாடுகளுக்கும் நோய் பரவிவிடுமே! கார்த்திகேசர் சம்மதித்தார். மாடு கை மாறியது.

மாட்டை மிகவும் பக்குவமாக வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தான் முருகன். மாடு வீட்டிற்கு வந்த வேளை நல்லதாக இருந்தது—தான் தாயாகப் போகும் செய்தியை முருகனிடம் அறிவித்தாள் அவன் மனைவி.

நாட்கள் சென்றன. பிள்ளைக்கலி தீர்க்க வந்து பிறந்தான் வேலன். ஏழைகளுக்கு ஏற்படும் வியாதிகளைப் போல், வைத்தியம் எதுவும் செய்யாமலே மாட்டின் நோயும் மாறிவிட்டது. வேலனை எவ்வளவு ஆசையுடன் வளர்த்தார்களோ அவ்வளவு ஆசையுடன் அந்த மாட்டையும் வளர்த்தார்கள் தம்பதிகள். உடம்பு பிடித்து, உருண்டு தவழ்ந்து நடக்கத் தொடங்கிய வேலனும் மாட்டின் மீது உயிரையே வைத்திருந்தான்.

அந்த எளிய வீட்டிற்கு இலட்சுமிகரத்தைக் கொண்டுவந்த மாடு அவர்களின் மதிப்பைப் பெருமளவில் பெற்றிருந்தது ஏழைகளானபடியால் எந்தப் பண்டிகையையும் கொண்டாடாமல் இருந்த அவர்கள் மாட்டுப் பொங்கலை மட்டும் தமது சக்திக்கேற்றபடி கொண்டாடினுர்கள். வேலன் பிறந்த நாளும் அதுவேயாதலால் அன்று அவர்களின் மகிழ்ச்சி பொங்கி வழியும்.

*

தூரத்தே ஒரு காரின் ஒலிச் சத்தம் கேட்டது. முருகனின் சிந்தனை தடைப்பட்டது. நடுரோட்டில் நடந்து சென்றவன், ஒரு பக்கத்திற்கு ஒதுங்கி வந்தான்.

'மாட்டுப் பொங்கல் கெதியிலை வரப்போகுது. இந்த வரியம் பொங்கலைக் கொண்டாட முடியாதா? வீட்டிலை இனி மங்கலமும் மகிழ்ச்சியும் வராதே!'—இந்த நினைவு அவன் நெஞ்சுள் நிறைந்து கண்ணீரை வருவித்தது. கால்கள் தள்ளாடின.

கார் சமீபத்தில் வந்துவிட்டது. கார் விளக்கின் பிரகாசமான ஒளி கண்களைக் கூசச் செய்தது; 'ஹாரனி'ன் ஒலி காதுகளைக் 'கிண்ணி'டச் செய்தது. அதற்குப்பழக்கப் படாத மாடு வெருண்டது. அங்குமிங்கும் முருகனை இழுத்தது. ஒரு மாதிரியாக அதை அடக்கிவிடலாம் என்று அவன் முயன்ற போது—

ஐயோ! முருகன் மேல் மோதிவிட்டது கார்! இரத்த வெள்ளத்துள் கிடந்து துடித்தான் முருகன்.

"குடிச்சாக் கிடிச்சா வீட்டிலை கிடக்கிறதுக் கென்ன! ரோட்டிலை நடக்கத் தெரியாத சனியன் இராவிலே இப்படி வந்து எங்களுக்கெல்லே கரைச்சல் குடுக்கினம்..." காரிலிருந்து தள்ளாடியபடியே இறங்கி வந்த கார்த்திகேசரின் குரல், முருகனின் காதுகளில் லேசாக விழுந்தது.

"ஐயோ எசமான்...!"—அந்த நிலையிலும் தன் எசமானுக்கு மரியாதை செலுத்த முயன்ருன் அவன். கிடந்தவன் முருகன் என்பதையறிந்த கார்த்திகேசர் பொங்கியெழுந்த ஆத்திரத்தை அடக்க முடியாது கூப்பாடு போட்டார்.

"டேய் கழுதை! என்றை காரின்ரை முன் பக்கத்தைப் பழுதாக்கிப் போட்டியேடா......இதை திருத்திறதுக்கு உன்னை வித்தாலும் காணுதெடா......"

கார்த்திகேசருடன் வந்த அவருடைய நண்பர் ஒருவர், முருகனின் நிலையை அறிந்து, தொடர்ந்து அங்கே நிற்பது ஆபத்தில் முடியும் என்பதை உணர்ந்து, எப்படியாவது முருகனை அவனுடைய குடிசைக்குக் கொண்டு போகும்படி ட்ரைவரிடன் சொல்லிவிட்டு, தானே காரைச் செலுத்திக் கொண்டு கார்த்திகேசருடன் சென்று விட்டார்.

தற்செயலாக அங்கு வந்த சில தொழிலாளர்களின் உதவியுடன் முருகனைக் குடிசையில் சேர்த்தான் ட்ரைவர்.

மெல்ல மெல்ல அனுங்கிய முருகன், நேரம் செல்லச் செல்ல அதையும் நிறுத்திக் கொண்டான். வெளியே பாய்ந்த அவனுடைய இரத்தத்துடன் அவன் உயிரும் கலந்தது! கரைந்தது.

முருகனின் நிலையைக் கண்ட மனைவி குழறினுள்; கூக் குரலிட்டாள்; தலையில் அடித்தடித்துக் கதறினுள். அவளை ஆற்றுவதற்கோ தேற்றுவதற்கோ எவராலுமே முடியவில்லை.

அவளைச் சுற்றிச் சோக வெள்ளத்தில் மிதந்தவர்களை விலக்கிக் கொண்டு, தாண்டித் தாண்டி வந்தான் வேலன்.

அப்புவின் மீது விழுந்து விழுந்து, ஆச்சி ஏன் கதறுகிருள் என்பது அவனுக்குத் தெரியவில்லை, தான் வந்ததையும் கவனியாது, ஒன்றும் பேசாது ஏன் 'அப்பு' படுத்திருக்கிருர் என்பதும் அவனுக்குத் தெரியவில்லை.

"அப்பூ' எங்கை எப்பு என்ரை பட்டுச் சட்டை? இண்டைக்குக் கட்டாயம் வாங்கியாறதெண்டெல்லே சொன்னனீ. எங்கை அந்தப் பட்டுச் சட்டை?"—இந்த ஒரே கேள்வியைக் கேட்டு விட்டு, பதில் வராததால், அழுவதற்கு மட்டும் வேலனுக்குத் தெரிந்தது.

நெஞ்சையுருக்கும் அந்தக் காட்சியைக் காணச் சகியாத மற்றவர்கள் தமது கண்களை மூடிக் கொண்டனர்.

---

## கல்குடாவில் கட்சிக் கிளைகள்

நவம்பர் மாத ஆரம்பத்தில் மட்டக்களப்பின் பல பாகங்களிலும் தமிழரசுக் கட்சிக் கிளைகள் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றிருந்தன. வெள்ளாமை விதைப்பு மும்முரமாக விருக்கும் அக்காலத்தில் கிராம வாசிகள் பலரும் வயல்களில் இருப்பார்கள் என்ற காரணத்தினுல், பல கிராமங்களில் கிளைகள் அமைக்க முடியாது போய் விட்டது.

கல்குடாத் தொகுதியில் புது வருட ஆரம்பத்தினின்று கிளைகள் அமைப்பதற்கான ஒழுங்குகள் நடைபெறும் எனத் தெரிகிறது.

தை மாதம் தொடக்கம் கல்குடாத் தொகுதியைச் சேர்ந்த சித்தாண்டிவந்தாறுமூலை, முறக்கட்டாஞ்சேனை, வாழைச்சேனை, கிரான், சந்திவெளி, வாகரை ஆகிய கிராமங்களுக்கு - கல்குடா பிரதிநிதி திரு. பொ.மாணிக்கவாசகர் அவர்கள் சென்று கிளைகள் அமைப்பதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளவிருப்பதாக நமது நிருபரிடம் தெரிவித்தார்.

அறுவடை ஆரம்பமாவதற்கு முன்னரே கிராமங்கள் தோறும் தமிழரசுக் கட்சிக் கிளைகள் அமைக்கப்பட்டு விடும் என்றும் கூறினுர்.

# பொருட் செல்வமில்லா. . .

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்லுபடியாகிக் கொண்டிருக்கும் ஒரே நாணயம் புதுக் காசுதான். அதன் உள்மதிப்பும் வெளி மதிப்பும் ஒன்றே. முன் வெள்ளியிலும் தங்கத்திலும் அச்சிடப்பெற்ற நாணயங்களின் உள் மதிப்பும் வெளி மதிப்பும் ஒன்ருகவே இருந்தன. காகிதப் பணம் அப்படியல்ல. அது பெருகப்பெருக அதன் மதிப்புக் குறையும். மதிப்புக் குறையக் குறைய ஒரு பொருளுக்கு அதிகக் காகிதப் பணம் கொடுக்க வேண்டி வரும். அதைக் காண்பவர் பொருள்களின் விலை ஏறிவிட்டதாகக் கூறுவர். இது தவருன கருத்து.

உண்மை என்னவெனில் 1931 முதல் இன்றுவரை கடந்த 30 ஆண்டுகளாக எந்தப் பொருளும் விலை ஏறவில்லை என்பதே. அன்றைக்கும் பவுனுக்கு 3 மூட்டை நெல் இன்றைக்கும் பவுனுக்கு 3 மூட்டை நெல். பவுன் 15 ரூபாயாக இருந்த போது நெல் மூட்டை 5 ரூபாயாக இருந்தது. பின் பவுன் 30 ரூபா ஆனபோது நெல் ரூபா 10. பவுன் 45 ரூ ஆனதும் நெல் 15. பவுன் 60 ரூபா ஆனதும் நெல் ரூபா 20. இப்போது 90 ஆனதும் ரூபா 30. பவுனுக்கு மூன்று மூட்டை அன்றும் விற்றது, இன்றும் விற்கிறது, இனியும் விற்கும்.

### பண்டமாற்று புதிய உருவில்

ஒரு ஏக்கர் நிலம் உள்ள உழவன் தன் நிலத்தில் 30 மூட்டை நெல் விளைவித்து 15 மூட்டையை தம் செலவிற்கு வைத்துக் கொண்டு மீதி 15 மூட்டை நெல்லை விற்று எல்லாப் பொருள்களையும் அன்றும் வாங்கிஞன், இன்றும் வாங்குகிருன். எது விலை ஏறியது? நெல்லையும் தங்கத்தையும் இணைத்துப் பார்க்கும்போதும் எப்பொருளும் விலை ஏறியதாகத் தெரியாது. காகிதப் பணத்துடன் இணைக்கும் போதுதான் எல்லாப் பொருளும் விலை ஏறியதாகத் தோன்றும். இது பொய்த் தோற்றம். உண்மை என்னவெனில் காகிதப் பணத்தின் மதிப்பு குறைந்துவிட்டதேயாகும். அன்று நமது நாட்டில் 150 கோடி ரூபாய்க்கு தங்கம் இருக்க 300 கோடி ரூபாய்க்கு காகிதப் பணம் இருந்து வந்தது. இன்று அதே தங்கத்திற்கு 2100 கோடி காகிதப் பணம் இருந்து வருகிறது. காகிதப் பணம் 1 க்கு 7 ஆகப் பெருகிவிட்டதால் ஒரு காசுப் பொருளுக்கு 7 காசும், 1 அணுவுக்கு 7 அணுவும், 1 ரூபாய்க்கு 7 ரூபாய் காகிதமும் கொடுக்க வேண்டியிருக்கிறது.

ஒரு நாட்டின் காகிதப் பணம் வெளிநாட்டில் செல்லாது. அது பிற நாடுகளிலிருந்து சாமான்களை வாங்கிஞல் தங்கமாகவே கொடுக்க வேண்டும். தங்கம் குறைவாக உள்ள நாடுகள் தம் நாட்டில் விளைந்த அல்லது செய்த பொருள்களைக் கொடுத்துவரும். இது ஏறத்தாழ பண்டமாற்று முறை போன்றதேயாகும். இறக்குமதியைக் கட்டுப்படுத்தி ஏற்றுமதியை விரிவு படுத்தும் நாடுதான் பொருளாதாரத்தில் சிறந்து விளங்கும் என்ருலும் அது உள் நாட்டுத் தேவையையும் நிரப்பி ஆக வேண்டும்.

### நமது பொருளியல்முறை

பொருளாதார அறிவு மேலை நாடுகளிலிருந்து வந்த ஒன்று. அதற்கு முன் நமது நாட்டில் பொருட் செல்வத்தின் மீது பற்றற்ற தன்மையும், அது அவனவன் தலைவிதிப்படி வந்துசேரும், என்ற கொள்கையுமே இருந்துவந்தது. ஒரு தனி மனிதனே, ஒரு நாடோ தனது அறிவு, ஆற்றல், ஊக்கம், உழைப்பு ஆகியவைகளால் வேண்டிய அளவு பொருட் செல்வத்தைப் பெற முடியும் என்பதே பொருளாதாரக் கலையின் முடிவாகும்.

### பணத்தின் வலிமை

செல்வங்களில் உயர்ந்தது பொருட் செல்வம். பணம் பத்தும் செய்யும். பணம் பாதாளம் வரை பாயும். பணம் உள்ளான் படைக்கு அஞ்சான். பணம் உடையவர் பலவும் உடையவர். செல்வரை எல்லோரும் செய்வர் சிறப்பு. ஆகவே பொருளை நல்வழியில் தேடு! நல்ல வழியில் செலவிடு! அதிலும் சிக்கனத்தைக் கையாள்! சேமித்து வை! அதையும் பாதுகாத்துவை! இவை அனைத்தையும் எண்ணியே 'பொருள் தனை போற்றி வாழ்' என்ருர் ஔவையார்,

'பணத்திலே ஆசையொன்றிலேன்' என்பது இராமலிங்க அடிகளின் வாக்கு. ஏன்? பணத்திலே ஆசை வந்துவிட்டால் பிற செல்வரைவிட தமது செல்வம் குறைவாகத் தோன்றி உள்ளத்தை வருத்திவிடுமாம். பொருட் செல்வம் உண்மையான செல்வம் ஆவது எப்போது? 'தம்மின் எளியாரை நோக்கித் தமதுடைமை அம்மா பெரிது' என எண்ணி மகிழ்ச்சியடையும் போது.

வாழட்டும் பொருட் செல்வர்!
வளரட்டும் பெருஞ் செல்வம்!!

## மலையகத்தில் தமிழரசுக் கட்சி

எதிர்வரும் 13ந் தேதி காலை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரசாரக் கூட்டம் ஒன்று பொகவந்தலாவையில் நடைபெற விருக்கிறது. அன்று பிற்பகல் அடுத்த பிரசாரக் கூட்டம் மஸ்கேலியாவில் நடைபெறவிருக்கிறது.

இரு கூட்டங்களிலும் கட்சித் தலைவர்களும், இலங்கைத் தொழிலாளர் கழகப் பிரமுகர்களும் கலந்து உரை நிகழ்த்தவுள்ளனர்.

12-ம் திகதி மாலை இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் நிர்வாக சபைக் கூட்டமும் நடைபெறவிருக்கிறது.

## மட்டக்களப்பில் சிறுவர் கலைக்கழகம்

"சிறுவர்களிடம் பொதிந்துள்ள கலை ஆற்றல்களை வளர்ச்சியடையச் செய்தால் அவர்கள் எதிர்காலத்தில் சிறந்த கலைஞர்களாகத் திகழ்வார்கள். சிறுவர்களின் கலையார்வத்தைத் தூண்டி வளர்க்க வேண்டியது பெரியவர்களுடைய முக்கிய கடமையாகும்."

இவ்வாறு மட்டக்களப்பு சிறுவர் கலைக் கழகத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து திரு. மாஸ்டர் சிவலிங்கம் குறிப்பிட்டார்.

பின் வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப் பட்டனர்:

போஷகர்: திரு. மாஸ்டர் சிவலிங்கம், தலைவர்: செல்வி வனஜா. பரம், உபதலைவர்: செல்வி வனித்தா ஞானசூரியம், இணைச் செயலாளர்கள்: செல்வி ரவீந்திரா, இராசதுரை, செல்வி நளினி ராமச்சந்திரா, பொருளாளர்: செல்வி சந்திரா. பீடில்.

## பெப்ரவரி 4 துக்க தினம்

எதிர்வரும் பெப்பிரவரி 4ம் திகதி, கடந்த ஆண்டுகளைப் போலவே இம் முறையும், துக்க தினமாக அனுஷ்டிக்கப்படும்.

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தபொழுதிலும், இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் முன் எப்பொழுதும் இல்லாத நிலைக்கு உரிமைகள் அற்றவர்களாகத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

தமிழர்கள் தங்கள் உரிமைகளைப் பரிபூரணமாகப் பெற்று சுதந்திர புருஷர்களாக இந்நாட்டில் நடமாடும் வரை, இந் நாள் துக்க தினமாகவே அனுஷ்டிக்கப்படும்.

ஏனைய ஆண்டுகளைப் போலவே, அன்றைய தினம் வியாபார நிலையங்கள், மற்றும் தொழில் நிலையங்கள் யாவும் பூட்டப்பட்டு, அந்த ஸ்தாபனங்களிலும், தமிழர் இல்லங்களிலும் கறுப்புக் கொடி பறக்கவிட வேண்டும் என்று தமிழ் பேசும் மக்கள் கேட்கப்படுகின்றனர்.

வாசகர்களுக்கு எமது
பொங்கல் வாழ்த்துக்கள்
★
இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்
ராஜா பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்
புகைத்துப் பலனடையுங்கள்
ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு - 14.
டெலிபோன்: 2739.




கணவனை இழந்த காய்கறிக்காரிதான் செல்லம். தான் பெற்ற இரண்டு செல்வங்களையும், மானமுடன் வாழ வைக்க, மனத்தை அடக்கி, மாற்றாரின் அவதூறுகளுக்குச் செவி சாய்க்காமல், 'பெரிய' மனிதரின் மனத்தூண்டிலுக்கும் அகப்படாமல், ஓடி ஓடி உழைக்கிறாள் செல்லம். அவளுக்கு உற்றார், உறவினர், தெய்வம் எல்லாம் அந்தக் 'காளி ஆச்சி'தான்.

அன்று செல்லத்தின் சின்னவளுக்குக் காய்ச்சல். பெரியவளைப் பள்ளிக்குப் போகாமல் நிறுத்தி வைத்துவிட்டு, சந்தைக்கு ஓடோடிச் செல்கிறாள் செல்லம்.

சந்தையில் அவளுடைய மனம் நிலையற்று அலைகிறது. எண்ணமெல்லாம் குடிசையில் கிடக்கும் இளைய பிள்ளை மீதுதான்.

காய்கறி வியாபாரத்தையும் அரைகுறையாகச் செய்துவிட்டு, வீடு நோக்கி அவசர அவசரமாக ஓடி வருகிறாள் செல்லம்.

அங்கு......அவளை வரவேற்பது?

'சாம்பல் மேடு'!

செல்லம் துடித்துப் பதைத்து எழுந்தாள்.

நேரம் என்ன இருக்கும் என்று அனுமானித்துக் கொள்ள முடியவில்லை. கால் கைகளை நீட்டி மடக்கி, நெட்டி முறித்து ஆறுதலாக கொட்டாவியை வெளிப்படுத்தியும்-

அலுப்பு முறியவில்லை.

'சதிரந் தேகமெல்லாம் குத்தி உளையுது. ஒரு ஆசறிதியாக் கிடந்தெழும்பவும் வழியில்லாமல்......... என்ரை சீவியம்......'

அவளைப் போன்றவர்கள் அலுப்பைப் பார்த்தால், அவர்களுடைய வாழ்க்கை...

கஞ்சியோ...கூழோ......கந்தலோ—பிறந்து விட்டோம் என்பதற்காக வாழ்வைக் கடத்தும் நிர்ப்பந்தம்!

காளிகோயில் வேள்விக்கு என்று நேர்ந்து, அவள் வளர்க்கும் வெள்ளைச் சேவல், கோடியில் நிற்கும் வேம்பிலிருந்துகூவி அவளைத் துடித்தெழ வைக்கிறது.

'நல்லா நேரஞ் செண்டு போச்சு'

இதயம் பதற, படுத்த கிழிசற் பாயைச் சுற்றி 'அசை'யில் வைக்கிறாள்.

படுத்த இடத்திலிருந்து கொஞ்சம் தள்ளி குடிசை மூலையோடு, சாம்பல் பூத்துக் கிடந்த அடுப்பில் ஒரு கரித்துண்டைத் தேடியெடுத்து வாயிற் போட்டுக் கொள்கிறாள். வாய் அசைவு கரியினைப் பொடிக்க, கையிலிருந்த, சிரட்டை, அடுப்புச் சாம்பலை அள்ளி வெளியே போடுகிறது.

ஒரு முறை செல்வச்சந்நிதி தேர்த்திருவிழாவின் மூட்டம் ஒன்றரை ரூபாய் கொடுத்து வாங்கப்பட்ட அலுமினியக் குடுவை, அடுப்பில் ஏறுகிறது.

அடுப்பை மூட்டி, தண்ணீரைக் கொதிக்க வைத்துவிட்டு அவள் பனைக்குப் போய், கை கால் முகத்தையும் கழுவிக் கொண்டுவர— இங்கே அலுமினியக் குடுவையில் வெந்நீர் கொதித்துக் குமுறும். இது அவளுடைய நித்திய வழக்கம்.

குடிசையின் வாசற்படலைத் தட்டியை விலக்கிக்கொண்டு அவள் வெளியே போகிறாள்.

பத்தடிச் சதுரப் பரப்பில், கிடுகுக் கூரையினாலும் செத்தைத் தட்டியினாலும், உருவம் பெற்றுக்கிடக்கும் அந்த ஓலைக் குடிலின் உள்ளே,

கரும் புகையைக் கக்கி, ஒளியற்ற ஒளியைப் பிரசவிக்கும் தகர விளக்கின் ஒளிப்பில்—

ஒரு மூலையோடு ஓலைப் பெட்டி கடகங்களின் அடுக்கு; அதை அடுத்து ஒரு கள்ளிப்பெட்டி.....அதற்குள்—வெளிக்கிட்ட இடத்திற்கு உடுக்கும் துணிமணிகளும், குழந்தைகளின் சாதகக் குறிப்புகளும், கூப்பன் புத்தகங்களும் அடக்கம்.

இடப்புறத் தட்டியோடு கிழிசற் பாயொன்றைத் தாங்கும் 'அசைவு' தொங்குகிறது. அதே தட்டிககரையோடு விரிக்கப்பட்டிருக்கும் பாயில், இரண்டு குழந்தை புழுதிச் சிலைகளாய் நித்திரையிற் கிடக்க—

படுப்பிடத்திலிருந்து மூன்றடி அயலில், அலுமினியக் குடுவையை ஏந்தியபடி அடுப்பு எரிந்து கொண்டிருக்கிறது. இரண்டு மூன்று சட்டிகள், ஒரு மண்குடம், ஒரு பானை,ஒரு குண்டான்..., பேணிகள், தகரக் கோப்பைகள்... இவை அடுப்புக்கரையோடு அங்கங்காய் கிடக்கின்றன. அடுப்பிற்கு மேலே பரணில், ஒட்டறை பிடித்த இரண்டு சீலைப் பொட்டலங்கள் கட்டப்பட்டுத் தூங்குகின்றன.

வாசற்புறத் தட்டி மெல்ல விலகுகின்றது. செல்லம் உள்ளே வருகிறாள்.

நீரலம்பிக் கிடந்த முகத்தை முந்தானைச் சீலையாற் துடைத்து விட்டு, இறப்பில் தொங்கும் திருநீற்றுக் குடுவையில் கையை விட்டு, திருநீற்றைக் கிள்ளி, 'காளி அம்மனை' மனதில் நினைத்தபடி, புருவ விளிம்பிற்குமேல் பிறை வடிவு காட்டும் பிரதேசத்திலும், கழுத்துப் பக்கங்களிலும் பூசிக்கொள்கிறாள்.

அடுப்பில் நீர் கொதித்து எழும்பும் '...ங்ஙிய்...' ஒலி அவளை அடுப்புக்கு இழுக்கிறது.

அடுப்பைத் தணித்து, குடுவையை இறக்கி தேயிலைத் தூளைக் கிள்ளி சுடுநீரிற் போடவும் தேநீர் பிறக்கிறது.



அவளுடைய குழந்தைகள் விளையாட்டுப் புத்தியில், எங்கோ தூக்கிக் கொண்டு போய்ப் போட்டுவிட்ட லோட்டாக்களைத் தேடி எடுத்துவந்துகழுவி,தேநீரை ஆற்றுகிறாள்.

'இண்டைக்குச் சந்தை முறை ......வெள்ளனவாப் போனாத்தான் ஒரு நாலு பணத்துக்கெண்டாலும் யாவாரஞ் செய்யலாம்... இண்டைக்கு நல்ல செண்டும் போச்சு...... இனிச் சுண்ணாகச் சந்தையெங்கை...நானெங்கை...' கைகள் தேநீரை ஆற்ற, உள்ளம் பரபரக்கின்றது.

இனி அவள்—

சுன்னாகச் சந்தைக்குப் போய்...வாழ்வின் அன்றாட பிரச்சினைக்கு மாற்றுத்தேட, மரக்கறி வியாபாரம் செய்ய வேண்டும். அவசர அவசரமாக மூத்த குழந்தையை எழுப்பி தேநீரைக் கொடுக்கிறாள். அவளுடைய மற்றக் குழந்தையை அவள் தொட்டபோது—

அவள் கைகளில் ஏன் அந்தத் துடிப்பு...!

"பிள்ளை இஞ்சை தங்கச்சிக்குக் காய்ச்சல் காயுமாப் போலை கிடக்கு. நீஇண்டைக்குப் பள்ளிக்குப் போகாதை. வீட்டிலை நிண்டு கொள், நான் வெள்ளனவா ஓடியாறன்''.

செல்லம் அவசர அவசரமாகக் கடக அடுக்கைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டாள்.

ஆறே வயதான அவளுடைய மூத்தகுழந்தை, கலைந்தும் கலையாத தூக்கத்தில் தலையை ஆட்டி வைக்கிறது.

"சட்டிக்கை பழஞ் சோறு வைச்சிருக்கிறன். நீ எடுத்துத் தின். தங்கச்சிக்குத் தீத்திப் போடாதை. நான் எல்லாத்துக்கும் வாறன்'' முற்றத்தில் கேட்ட செல்லத்தின் குரல் கல் ஒழுங்கையில் இறங்கி மறைகிறது.

கால்களின் இயக்கத்தில் கல் ஒழுங்கை கழிந்து கொண்டே போகிறது.

ஒழுங்கை—

ஒற்றையடிப்பாதை—

புலரிப்பொழுதின் ஒளியும் இருளுமற்ற மயக்க மைம்மலில், பழக்கப்பட்ட பாதையின் தடத்தைக் கால்கள் தாளுகப்பற்ற அவள் நடக்கின்றாள்.

நடையா...? ஓட்டமா...? மரக்கறிக் கடகத்துப் பாரம் தலையை அழுத்துகிறது. ஆனால், அது அவளுக்குப் பாரமாகத் தோற்றவில்லை. தலைப்பாரத்தை இறக்கி வைத்து ஆறுவதற்குச் சுமைதாங்கிகள் இருக்கின்றன. மனப்பாரத்தை...

'சின்னவளுக்குக்காச்சற் குணமாக் கிடக்கு...என்ன இழவோ தெரியவில்லை... காளியாச்சி! நீதான் எல்லாத்துக்கும்...என்ரை பிள்ளைக்கு ஒண்டுஞ் செய்யப்பிடாது. உனக்கு நான் மடிப் பிச்சையெடுத்து விளக்கு வைக்கிறன்......— பின்னேரம் வெள்ளனவாப்போய், பிள்ளையை ஒருக்காப் பரியாரியார் வீட்டை கொண்டுபோய்க் காட்டவேணும்.........அது தின் கூடி ஆனவாவு தின்னிறேல்லை...'

கால்கள் சுன்னாகச் சந்தையைக் குறி வைத்துப் பதைபதைக்க, சிந்தனைகள் மட்டும் எதிர்மாறாக அவளுடைய வீட்டுக் குடிலுக்குள் நுழைந்து தவிக்கின்றன.

'அந்த மனிசன் இருந்தா எனக்கேன் இந்தப்பாடு... கொண்டு வாறதை... கொதிப்பிச்சுக் குடுத்துப் போட்டு, ராசாத்தி மாதிரி இருப்பன்...'

சுந்தையரின் சுருட்டுக் கொட்டிலில் சுருட்டுப் பிழைத்து, அவளையும் அவளது இரண்டு குழந்தைகளையும் மற்றவர் வீட்டில் மடியேந்த விடாமற் சீவிக்க வைத்த அவள் கணவனை நினைத்துக்கொள்கிறாள்.

போன சித்திரையோடு இந்த வாழ்க்கை அநித்தியம் என்று அவன் காட்டிவிட்டுப் போய்விட—

தன் தலையில் விழுந்து விட்ட சுமையை இழுக்க, செல்லம் மரக்கறிக் கடகத்தைச் சுமக்கத் தொடங்கி, இன்று பத்து மாதங்களாகின்றன...

'அண்டண்டு அடிச்சு அண்டண்டையோடை.... வரியம் பன்ரண்டு மாதமும் மரக்கறிக் கடகச் சுமையும் நானும்......எங்கையன் ஆத்திலை குளத்திலை விழுந்து என்ரை சீவனை முடிக்கலாமெண்டாலும், என்ரை பாலாத்தையளாலை...காளி ஆச்சி என்ரை பிள்ளைக்குத்தான் ஒண்டுஞ் செய்யப்படாது'.

அவள்நம்பும் காளித்தெய்வத்தை, அவள் நடந்து நடந்து கும்பிடுகிறாள்.

'ஆம்பிளைப் பலமில்லாமல் பெண் பிரசுகள்தனிய இருந்தாலும் எத்தனை பேர எத்தனைவிதம் நாக்கு வளைக்கினம், ...அவள் அருமைப் பிள்ளையெல்லாம் என்னைப்பற்றி எத்தினை கதையளை முடிஞ்சு விட்டிருக்கிறாள்...... உவளின்ரை வாய் அந்நிதத்துக்கு எக்கணம் புழுக்கிடங்குதான் இடிப்பள்......'

அவசியமில்லாமற் பிறர் வீட்டு நடப்புக்களை; கதைகளைக் காவித்திரியும் அருமைப் பிள்ளையின காளிகத் தோற்றம் மனதில் உருக்காட்ட, அவளுடைய உள்ளம் அருக்குளிக்கிறது.

'...நானும்...ஆரையன் எண்டாலுஞ் சடங்கு செய்தால்...'

கடந்த இரண்டு மாத இடை வெளிக்குள் அவள் எத்தனை எத்தனையோ இடங்களில் நினைத்துக் கொண்டதை மீண்டும் நினைக்கிறாள். யார்யாரோ எல்லாம் மனதில் விரிந்து பிரிந்து, அறுகுகிறார்கள்.

(21-ம் பக்கம் பார்க்க)


# இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

## சுதந்திரன் ரைப் பவுண்டரி,

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.

# வேற்றுமையில் ஒற்றுமை

'செங்கை ஆழியன்'

வந்த சிகரப்பன், இருந்த தகரப்பனைத் துரத்தப் பார்க்கிறான். தகரப்பனின் இளகிய மனது ஒற்றுமையை நாடுகிறது. இளைய மகன் துடித்தெழுகிறான். என்றாலும் வேற்றுமையில் ஒற்றுமை காண்போம் என்ற திட நம்பிக்கையுடன் செல்கிறான் தலைமகன்.

இருண்டு கறுத்த ஒரு காடு. பிரபஞ்சஒளி, —வெப்பச் சுடர், எத்தனை இடங்களைத் தழுவி வெம்மைப்படுத்துகிறதோ, இல்லையோ, தெரியாது, ஒரே வெப்ப வேட்கை.

ஒரு மனிதப் பூண்டையுமே காணமுடியவில்லை; அங்குமிங்குமாகச் சில உயிரினத் தொகுதிகள்.

பரிணாம வளர்ச்சியில் மனிதன் ஜனித்து, உச்சபீடத்தை அடைந்து, எத்தனையோ கோடியாண்டுகள் கழித்துவிட்ட ஒரு காலத்தில், இக்காட்டிடையே—

தகரப்பன் தன் சிறு குடும்பத்தோடு கடந்து கொண்டிருக்கிறான்; அவர்கள் தங்கிச் சீவிப்பதற்கு ஓரிடம்தேவை; இல்லம் தேவை.

தேடியலைந்து ஈற்றில் ஓரிடத்தை அடைகிறார்கள்.

எல்லாவற்றிற்கும் தங்க இடம்.

தகரப்பன் பெரிய ஓர் வீட்டையமைத்து, அங்கு தன் குடும்பத்தாரோடு தங்கி, வாழத் தொடங்குகின்றான்.

சுற்றியுள்ள நிலப்பரப்பைத் திருத்திப் பயிர்பச்சையாக்கிக் கொள்கிறான்.

ஆனந்தமான, தனிமை நிறைந்த, சுகவாழ்வு அவர்களுக்கு!

காலம் கழிகிறது.

ஒரு நாள்—

அவன் வாழ்கின்ற இல்லத்தை நாடிச் சில மனிதப் பூச்சிகள் வருகின்றார்கள்; தகரப்பன் குடும்பத்தினருக்கு ஒரே ஆச்சரியம்.

ஆனந்தக்களி; வரவேற்கிறார்கள்.

"நீங்கள் யார்?" என்று விசாரிக்கிறான், தகரப்பன்.

"என் பெயர் சிகரப்பன்! நாம் இங்கு வாழ்வதற்காக வந்தோம்! எங்களுக்கும் உங்கள் வீட்டில் இடம் தர முடியுமா?" என்று பரிதாபமாக வினவுகிறான், வந்தவர்களின் குடும்பத் தலைவன்.

தகரப்பனுக்கு இளகிய மனது.

இரு குடும்பங்களும் சேர்ந்து அந்த, ஒரே ஒரு இல்லத்தில் மகிழ்ச்சியாக வாழ்கின்றன. ஒன்றாக இணைந்து நிலத்தில் பாடுபடுகிறார்கள்; பயனடைகிறார்கள்.

சுகானந்த வாழ்வு.

சிலகாலம் சிறகடிக்கிறது. சிகரப்பனின் குடும்பத்தில் அங்கத்தினர்கள் கூடி விடுகிறார்கள்.

பிரச்சினை தோன்றுகிறது.

சிகரப்பன், தனக்கு வீட்டில் இன்னும் சில பகுதிகளைத் தரவேண்டும் என்று தகரப்பனைக் கேட்கிறான்.

தகரப்பனுக்கு இளகிய மனது!

காலத்திற்குச் சிறகுகள் இருக்கின்றன.

ஒருநாள்—

தகரப்பனுடைய கடைசி மக்கள் இருவருக்கும், சிகரப்பனின் மக்கள் இருவருக்கும் அடிதடி சண்டை நிகழ்ந்துவிட.........

சிகரப்பன் கொதிப்படைகிறான்.

தகரப்பனுக்குத் தெரியும், சண்டைக்குக் காரணம் சிகரப்பன் பிள்ளைகள் தானென. எனினும்—

அவனுக்கு இளகிய மனது!

குழந்தைகளின் சண்டை இரு குடும்பத்தாரிடையேயும் பிளவுப் பள்ளத்தாக்காகிறது.

இருந்தாற்போல்—

"எனக்கு இந்த வீடு முழுவதும் வேண்டும்! எங்களுக்குப் பத்தாது!" என்கிறான் சிகரப்பன்.

தகரப்பனுக்கு விழிப்பு.

"அப்படியானால் நாங்கள்?"

"எங்காவது போங்கள்!..."

"ஒட்டகத்தின் 'கதை தான்."

தகரப்பனும் மனிதன்.

"போங்காணும்! நீர் ஆகத் தலைக்குமேல் ஏறப்பார்க்கிறீர்?" என்று ஏசி விடுகிறான்.

பிளவில் விரிசல் கூடுகிறது; போகிற போக்கில் பயங்கர உடைசலாகி விடலாம்.

இந்நிலையில்—

தகரப்பன் குடும்பத்திடையே வாக்கு மோதல்கள் நிகழ்கின்றன.

"அவர்களை இங்கிருந்து துரத்து" என்கிறான் ஒரு மகன்.

"சாச்சாய்! அது சரியல்ல..." என்கிறான் தகப்பன்.

"இந்த வீடு எங்களுடையது!" என்கிறான் இன்னொரு மகன்.

"அதனால்......அதெல்லாம் கூடாது!"

தகரப்பனுக்கு இளகிய மனது.

"அப்படியென்றால் வீட்டைப் பிரித்து, வளவைப் பிரித்து எல்லையிடுவோம்!" என்று கூறுகிறான், ஒருமகன்.

"வாழுற வீட்டைப் பிரிப்பதா?"

"வீட்டைப் பிரித்தால், பயிர் செய் நிலங்களையும் பிரிக்க வேண்டும்! அப்படிப் பிரித்தால் நல்ல நிலங்கள் அவர்கள் பக்கமாகிவிடும்! பிறகு நாங்கள் என்ன செய்யிறது......?" என்று குறுக்கிடுகிறான் மூத்த மகன்.

இவன் அறிவு—விரிவு.

"வீட்டைப் பிரிக்கக் கூடாது! பிரிப்பதென்றால் கஷ்டம்! நாங்கள் வைத்த பிரயோசனங்கள் எல்லாம் அவர்கள் வீட்டுப் பக்கம்...!"

"அப்ப இப்பிரச்சினையைத் தீர்க்க வழி?"

"ஒற்றுமையாகி விடுவோம்!"

"ஒற்றுமையானாலும், சேர்ந்து வாழ்வதென்பது இயலாத செயல்?"

"அப்ப நீயே வழி சொல்!" என்று தகப்பன் கேட்கிறான், தகரப்பன்.

மூத்த மகன் கூறுகிறான்.

"வேற்றுமையில் ஒற்றுமை காண்பதுதான், தக்கவழி! அவர்கள் தங்களது சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொண்டு, எங்கள் சுதந்திரத்தில் தலையிடாது வாழட்டும்! நாமும் அப்படியே இருப்போம்! வீட்டைப் பிரியாது, பண்பாட்டில் பிரிவோம்! இவ்வீடு இரு குடும்பத்தினருக்கும் சொந்தமானது, தான்! அவரவர் சுதந்திரம், பண்பாடு அவரவர்களுக்குச் சொந்தமானது...!"

"என்னப்பா! அப்போதும் பிணக்குகள் தோன்றினால்...!"

"தோன்றாது! நம்மிருவர் பகுதியிலுள்ள பெரியவர்கள் கூடி, இரு பகுதியினரையும் சமமாக, நடுநிலையோடு மேற்பார்வையிடில் சண்டை சச்சரவு தோன்றவே இடமில்லை...!"

"இது கஷ்டமானது!" என்று முணு முணுக்கிறான், கடை மகன்.

அவன் குழந்தை தானே?

"முதலில் எல்லாம் கஷ்டம் தான்! பழக்கப்பட்டால் எல்லாம் சரியாகி விடும்!"

"இதற்குச் சிகரப்பன் குடும்பத்தினர் ஒப்புக்கொள்வார்களோ?" என்று சந்தேகக் குரல் எழுப்புகிறான், தகரப்பன்.

"ஒப்புக் கொள்ள வைப்போம்!" என்று கூறுகிறான் மூத்த மகன், நம்பிக்கையோடு.

## வந்தது தமிழர் பொங்கல்!

கோவை—மகேசன்

எங்கணும் மகிழ்ச்சி பொங்க
இதயத்தில் ஒளி துலங்க
குங்குமத் தோடு மாதர்
குறைவின்றி இனிது வாழ
மங்கல ஓசை கேட்டு
மணத்தினை நெருங்குங்கோல
வஞ்சிய ருள்ளம் துள்ள
வந்தது தமிழர் பொங்கல்!

தியவை யெல்லாம் மாள
தீந்தமிழ் மக்கள் யாரும்
நோய் நொடி வறுமை நீங்கி
நொந்திடும் உள்ளம் மாறி
சேயினை அணைத்து நிற்கும்
சேயிழையோடு சேர்ந்து
வாயிதழ் சுவைத்து நிற்க
வந்தது தமிழர் பொங்கல்!

எத்தனை திரு நாளுண்டு
இருப்பினும் ஆண்டு தோறும்
தைத் திருநாளைப் போலத்
தமிழர்க்கு மகிழ்ச்சியில்லை
இத்திரு நாளின் போது
ஏழையும் சிரிப்பான் எங்கும்
புத்தொளி பரவும் இன்பம்
பூத்திடும் நன்னாள் தைநாள்!

உறு பசி தீர்க்க உண்மை
உழைப்பினை யீந்து நாட்டின்
வறுமையைப் போக்கும் நல்லோர்
வஞ்சமில் உழவர் மக்கள்
பருவத்து மங்கை போலப்
பாங்குடன் நெல்லுப் பெண்ணாள்
அறுவடைக்காக நிற்கும்
அழகு கண்டுவகை கொள்வர்!

இஞ்சியினோடு மஞ்சள்
இலந்தொறும் மணக்க மாதர்
பொங்கிடும் மகிழ்ச்சி யோடு
புதியதோர் பானை தன்னில்
பஞ்சுபோற் பாலும் தேனும்
பழமும் சர்க்கரையும் சேர்த்து
பொங்கற் பால் பொங்கி நின்று
பூரிக்கும் திருநாள் தைநாள்!

என் தமிழ் மக்கள் எல்லா
இன்பமும் பெற்று வாழ்க!
கன்னலின் மொழியார் தங்கள்
கணவனைப் போற்றி வாழ்க!!
தென்றலும் நிலவும் வானும்
தேசமுள்ளளவு மெங்கள்
செந்தமிழ்க் கன்னி வாழ்க!
சிறப்பொடு பொங்கல் வாழ்க!


வேல் தைலம்
மிகச் சிறந்த சஞ்சீவி

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்றாகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சீவி.

விலை ரூபா 1-25

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:

S. P. S. ஜெயம் கம்பெனி,

மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

M. A. R. S. மனுவேல் நாடார் அன் கோ.,

34, செட்டியார் தெரு,

கொழும்பு-11.



சம்பாதித்தும் பயனில்லை!

எவ்வளவுதான் கஷ்டப்பட்டு சம்பாதித்தாலும் கொஞ்சமும் மிச்சம் பிடிக்க முடியவில்லை. எத்தகைய முன்னேற்றமுமில்லை. காரணம்:—

கிரக தோஷங்கள், கண்பார்வை, வாய் வார்த்தைகளால் ஏற்படும் தோஷங்கள் இடத்திலுள்ள தோஷங்கள்.

அவற்றை அறவே நீக்கி, எதிர்பார்க்கப்படும் பலனை மந்திர சக்தியாலும், தெய்வ பலத்தாலும் பெற்றுக்கொள்ள முடியும்.

விபரங்களுக்கு எழுதவும், அல்லது நேரில் வந்து சந்திக்கவும்

அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட மந்திராச்சாரி

பீ. எம். திஸாநாயக,

(நான்கு தேவாலயங்களின் பிரதம தர்மகர்த்தா)

371, டாம் வீதி, கொழும்பு-12.

அருத எண்ணெ அலுவலகம்

கம்பளை.




பட விமர்சனம்

# ராணி சம்யுக்தா

சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தார் இவ் வருடப் பொங்கல் விருந்தாக "ராணி சம்யுக்தா" தமிழ்ப் படத்தை திரையிட்டுள்ளனர்.

பிருதிவிராஜன், சம்யுக்தா காதல் கதை நாடறிந்ததே. முன்பு தயாரிக்கப்பட்ட 'பிருதிவிராஜன்' படத்தில் பி. யு. சின்னப்பா பிருதிவிராஜனாகத் தோன்றி நடித்திருக்கிறார். சோக முடிவுடைய இக் காதல் கதையைத் தமிழ் நாட்டார் பல்லாண்டுகளாக அறிவர்.



டில்லி சாம்ராஜ்யத்தின் அதிபதியாக பிருதிவிராஜன் தேர்ந்தெடுக்கப்பட்டது காஞன் தேசத்தரசனுக்குப் பொருமையைக் கொடுக்கிறது. வேறு பல சிற்றரசர்களின் துணை கொண்டு, பிருதிவிராஜனைத் தீர்த்துக் கட்டப் பல முயற்சிகளில் ஈடுபடுகிருன். எதிர்பாராதவிதமாக அவனுக்கும், சிற்றரசர்களுக்கும் தோல்வியே ஏற்படுகிறது. காஞன் தேசத்தரசனுடைய மகள் சம்யுக்தையே பிருதிவிராஜனைக் காதலிக்க ஆரம்பித்து விடுவதும், பிருதிவிக்கு எதிராகத் தனது தந்தை எடுக்கும் முயற்சிகளை முறியடித்துவிட முனைவதும் காஞன் தேசத்து மன்னனுக்குத் தீராத தலைவலியைக் கொடுக்கிறது.



சுயம்வரத்தை ஏற்பாடு செய்து, வேறொரு மன்னனை சம்யுக்தையின் கணவனாக்கி விடவும், சுயம்வரத்துக்கு எல்லா அரசர்களையும் அழைத்து, பிருதிவியை மட்டும் அழையாது, அவன் சிலையை வைத்து அவமதிப்பதும் மன்னனின் கடைசித் திட்டமாகவிருந்தது. அதேதிட்டமும் தோல்வியடைந்து காதலர்கள் ஒன்று சேர்கின்றனர். ஆனல் முடிவு என்னவோ சோகந்தான.

பிருதுவியாக புரட்சி நடிகர் வருகிருர். புரட்சி நடிகர் ராஜா வேடம் புனைந்தால் கூரிய வாளுக்கும், வேலுக்கும், வில்லுக்கும், அவர் தோள்வலிக்கும் வேலையிருக்காமலா போகும்? சண்டைக் காட்சிகள் நிரம்ப உண்டு. புரட்சி நடிகரின் ரசிகர் குழாத்துக்கு நல்ல சண்டை விருந்துகள் உண்டு. அழகு நடிகை பத்மினிதான் எம். ஜி. ஆரின் காதலி சம்யுக்தையாகத் தோன்றுகிருர்.

நகைச்சுவைப் பாகத்தை தங்கவேலுவும், ராகினியும் ஏற்றுள்ளனர். இருவர் அறிமுகமும் புது 'மோஸ்திரி'யில் இப்படத்தில் இடம் பெற்றுள்ளது. படத்தில் முதன் முதல் அறிமுகமாக்கபபடுபவர் தங்கவேலுதான்.

காஞன் தேசத்ததிபதியாக வருபவர் சகஸ்ரநாமம். அவருடைய மந்திரியாக—குறுக்கு மூளையாளராக வருபவர் எம். ஜி. சக்ரபாணி. பிருதுவியின் தளபதியாக வந்து சிறிது நேரம் மட்டும் திரையில் காட்சி தருகிருர் முஸ்தபா. சிறப்பாகவே நடித்துள்ளார். நம்பியார் ஆப்கானிஸ்தானத்து அரசனாக—கௌரவ நடிகராக வருகிருர். சம்யுக்தையின் தோழியாக எம்.என். ராஜம் தோன்றுகிருர்.

திரைக்கதை, வசனம், பாடல் ஆகிய பொறுப்பை கவிஞர் கண்ணதாசன் ஏற்றுள்ளார். இசை மகாதேவனுடையது. இயக்குநர்: யோகானந்த்.

சரஸ்வதி பிக்சர்சுக்காக ஏ. சி. பிள்ளை 'ராணி சம்யுக்தா'வைத் தயாரித்துள்ளார். ஓர் சிறந்த படம்.

—நாதன்—



"எத்தனை சுயம்வரம் நடத்தினுலும், "ராணி சம்யுக்தா" எனக்கே உரியவள். அவள் பக்கம் யாருமே நெருங்க முடியாது" என்று போர்க் கோலம் பூண்டுவிட்டார், மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.

[இப்பொழுது சினிமாஸ் திரைகளில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் 'ராணி சம்யுக்தா'வில் எம். ஜி. ஆரின் கம்பீரத் தோற்றம்.]

## திரையுலகில் மீண்டும் பத்மினி!

திருமணத்திற்குப் பின் படங்களில் நடிப்பது இல்லை என்று முடிவு செய்திருந்த பத்மினி, மீண்டும் திரையுலகிற்குத் திரும்பி வந்துள்ளார். மொடர்ன் தியேட்டர்சாரின் 'கா[illegible]டு ரோஜா'வில் நடித்து வரும் பத்மினி, இப்பொழுது மேலும் ஒரு புதிய படத்தில் ஒப்பந்தமாகியுள்ளார்.

ஓரியண்டல் மூவி சார் தயாரிக்கப் போகும் தமிழ்ப் படமொன்றிலேயே இப்பொழுது ஒப்பந்தமாகியுள்ளார். படத்திற்கு இன்னும் பெயரிடப்படவில்லை.

இப்படத்திற்கான சில பாடல்களை ரேவதி 'ரெகார்டிங்' ஸ்டுடியோவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்படத்தைத் தயாரிப்பவர் சத்யபால். இதற்கு முன்னரும் இவர் எடுத்த படம் ஒன்றில் பத்மினி நடித்துள்ளார். சத்தியபால் பத்மினியின் உறவினர் என்பது குறிப்பிடத்தக்கது.



அவள் கண்கள் கூறும் கதையைக் கேட்டுக் காதலன் முகம் மகிழ்ச்சியுடன் பொங்குவது, விரைவில் சினிமாஸ் திரைகளில் காட்சியளிக்கவிருக்கும் 'பர்மா ரேஸ்' இந்திப் படத்திலே தான். [அவள்: குங்கும் அவன்: மோற்றிலால்.]

# பலவழிகளில் சிறந்து விளங்கும் நெஞ்சில் ஓர் ஆலயம்

## இவ்வாண்டு ஆஸ்கர் பரிசுக்குப் போட்டியிடுகிறது

கடந்த ஆண்டு வெளிவந்த 'நெஞ்சில் ஓர் ஆலயம்' பல வழிகளில் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கிறது.

சென்ற ஆண்டின் சிறந்த டைரக்டர் என்ற பட்டத்தை, திரு. ஸ்ரீதருக்குப் பெற்றுக் கொடுத்த படம் 'நெஞ்சில் ஓர் ஆலயம்'.

1962-ம் ஆண்டில் தொடர்ந்து இருபது வாரங்கள் ஓடிய ஒரேயொரு தமிழ்ப் படம் 'நெஞ்சில் ஓர் ஆலயம்'.

தமிழ் சினிமா உலகிற்கு முத்துராமன் என்றவொரு புதிய கதாநாயகனை அறிமுகப் படுத்திய படம் 'நெஞ்சில் ஓர் ஆலயம்'.

தமிழ் சினிமா உலகில் புரட்சிகரமான முறையில் ஒரே செட்டில் குறுகிய நாட்களில் தயாரிக்கப்பட்ட ஒரே படம் 'நெஞ்சில் ஓர் ஆலயம்'.

சிறந்தவொரு குட்டி நடிகையான பேபி பத்மினியை சினிமா உலகிற்கு அறிமுகப் படுத்திய படம் 'நெஞ்சில் ஓர் ஆலயம்'.

தேவிகா சிறந்த நடிகை என்ற அளவுக்கு வளர்ந்து, அதிக படங்களில் நடிக்கச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்த படம் 'நெஞ்சில் ஓர் ஆலயம்'.

இத்தனை சிறப்புக்களையும் தாங்கி, தமிழ் சினிமா உலகில் புரட்சியை ஏற்படுத்திய ஒரேயொரு படம் 'நெஞ்சில் ஓர் ஆலயம்'.

இவ்வாண்டு நடைபெறும் ஆஸ்கர் பரிசுப் போட்டிக்குத் தன் பிராந்திய மொழிகளின் சார்பில் கலந்து கொள்ளும் ஒரே படம் 'நெஞ்சில் ஓர் ஆலயம்'.

## எம். ஜி ஆருக்கும் அசோகனுக்குமிடையே கடும சண்டை!

ஈ. வி. சரோஜா நல்ல அழகி. காண்பவரைக் கவரும் கண்களுடன், கவர்ச்சி மிகு உடலமைப்பும் வாய்ந்தவர்.

விடுவாரா அசோகன்? சரோஜாவின் விருப்பமில்லாமலே, அவரைத் தூக்கிக் கொண்டு ஓடி விட்டார்!

எம். ஜி. ஆருக்கு இந்தச் சம்பவம் ஆத்திரத்தை அளவாக மூட்டிவிட்டது. அசோகன் மீது பாய்ந்தார்.

பிறகு என்ன? இருவரும் ஒருவர்க்கொருவர் சளைக்காமல் சண்டையிட்டனர்.

'கொடுத்து வைத்தவள்' படத்துக்கான கடைசிக் கட்டங்கள் கடந்த வாரம் படமாக்கப்பட்டபோது, மேற் கூறிய காட்சி இடம் பெற்றது.

---

## மகாதேவனின் படம்

இசையமைப்பாளர் கே. வி. மகாதேவன் சொந்தத்தில் ஒரு படத்தைத் தயாரிக்கிருர். இப்படத்தின் கதை, வசனம், டைரக்ஷன் ஆகிய பொறுப்புகளை 'சாரதா' புகழ் கே. எஸ். கோபாலகிருஷ்ணன் ஏற்றுள்ளார். இசைப் பொறுப்பை உரிமையாளர் மகாதேவனே ஏற்றுள்ளார்.

'சாரதா' படத்தின் மூலம் திரையுலகில் புது ஸ்தானம் வகிக்கும் ராஜேந்திரன், விஜயகுமாரி ஜோடி இப் படத்தில் பிரதம பாகங்களில் தோன்றுகின்றனர். பாடல்களை கண்ணதாசன் அமைக்கிருர்.

## திரைக்குப் பின்னல்

திரைக்குப் பின்னிருந்து செயல்படுபவர்களே ஒரு படத்தின் வெற்றி தோல்வியில் பெரும் பங்கை ஏற்கிறுர்கள். சிறப்பாக டைரக்டர், வசனகர்த்தா, பாடலாசிரியர், இசையமைப்பாளர் இவர்களின் முயற்சிகள் குறிப்பிடக் கூடியவை.

கடந்த ஆண்டின் சிறந்த டைரக்டர் பட்டத்தை நெஞ்சில் ஓர் ஆலயத்தின் மூலம் ஸ்ரீதர் தட்டிக் கொண்டார். கடந்த ஆண்டின் அவரது டைரக்ஷனில் வெளியான 'போலிஸ்காரன் மகள்', 'சுமைதாங்கி' ஆகிய படங்கள் வெற்றிப் படங்களாக அமையாவிட்டாலும், ஸ்ரீதரின் பெயரைக் காப்பாற்றவே செய்தன.

### வசனகர்த்தாக்கள்

சென்ற ஆண்டு அநேக படங்களுக்கு வசனம் எழுதியவர் ஆரூர்தாஸ் தான். இவர் ஐந்து படங்களுக்கு வசனம் எழுதியுள்ளார். கே. எஸ். கோபால கிருஷ்ணன், ஸ்ரீதர், ஜாவர் சீதாராமன், விருதை நா. ராமசாமி ஆகியோர் தலா மூன்று படங்களுக்கு வசனம் எழுதியிருக்கிருர்கள்.

### தன்னிகரில்லாக் கவிஞர்

தமிழ் சினிமா உலகில் கவிதைத் துறையில் தன்னிகரில்லாத் தனிப் பெரும் தலைவனுகத் திகழ்கிருர் கண்ணதாசன். அவர் பாட்டெழுதாத படமேயில்லை என்ற அளவில் அவர் இருக்கிருர். சில புதிய கவிஞர்களும் திரையுலகில் காலடி எடுத்து வைத்துள்ளார்கள், கடந்த ஆண்டில்.

### இசையமைப்பாளர்கள்

கடந்த ஆண்டின் சிறந்த இசையமைப்பாளர்கள் என்ற பட்டத்தை இரட்டையர்களான விஸ்வநாதன்—ராமமூர்த்தியே தட்டிக் கொள்ள வேண்டும். இவர்கள் இசையமைத்த படங்கள் சிறந்த வெற்றி பெற்றுள்ளன. இவர்கள் கடந்த ஆண்டு பதினைந்து படங்களுக்கு இசையமைத்துள்ளார்கள்.

கே. வி. மகாதேவன் பன்னிரண்டு படங்களுக்கு இசை அமைத்துள்ளார்.

# உழைப்பின் மகிமையை உணர்த்தும் உன்னதப் பொங்கல் திருநாள்

## உள நிறைவோடு அதைக் கொண்டாட தடையாக நிற்கிறது எமது அடிமை நிலை

தமிழன் எங்கிருந்தாலும், தமிழன் எம் மதத்தினனுயிலும், எச்சாதியினனுயிலும், எக் கட்சியினனுயிலும்—உவகையுடன், உள்ளப் பூரிப்புடன், ஐக்கிய உணர்ச்சி பொங்கி வழியக் கொண்டாடி மகிழும் திருநாள், மேதினி சிறக்க வந்த பெருநாள், தைப் பொங்கல் தினமேயாகும்.

உழைப்பின் மகிமையையும், உழவின் பெருமையையும் உலகுக்கு எடுத்துரைத்து, தமிழக இல்லங்களை ஆண்டுதோறும் மகிழ்விக்க வந்த இப் பொங்கற் திருநாளைச் சில காலமாக இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் நிறை மனதுடன் கொண்டாட முடியாத நிலையினில் இருப்பதைச் சுட்டிக் காட்டி, இந்த நிலை என்று மாறுமோ என்று கேட்கின்றார் இக் கட்டுரையின் ஆசிரியர்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் உன்னத திருநாள். உழவர் திருநாள். உலகுக்கோர் பொது நாள். தன்னிகரில்லாப் பெருநாள். பொங்கற் புதுநாள், புத்தாண்டுத் தொடக்க நாள், அறுவடைத் திருநாள். தைத் திருநாள். தமிழர் திருநாள். இந்நாள் உழவன், உழைப்பின் பயனை உண்டு களிக்கும் பொன் நாள். தொழிலாளி விவசாயிகளின் தொல் பெருநாள். ஆண்டு முழுவதும் அவன் பட்ட இன்னலுக்கு, இடர்ப் பாட்டுக்கு இதமளிக்கும் திருநாள். உழைப்பின் மகிமையை எடுத்துக் கூறும், இயற்கை தந்த இன்பப் பெருநாள். தமிழ் மாநிலங்களின் தன்னிகரில்லாப் பொதுநாள், மத மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்ட இன்ப நாள்! இதமளிக்கும் நாள்!

இத்தனை பெருமைகளைத் தன்னகத்தே கொண்டதாக, தன் பெயரிலேயே தூய தமிழைக் கொண்டதாக, சொல்லும்போதே மட்டற்ற மகிழ்ச்சியை மனதில் நிறைப்பதாக, எண்ணும் போது இன்ப உணர்ச்சியை உள்ளத்தில் ஊட்டுவதாக அமைந்த ஒரேயொரு பெருநாள் இத் தைத்திருநாள் ஒன்றேதான்.

இப் பெருநாள்— பெருவிழாவின் பெயர் மட்டுமல்ல, அதன் அடிப்படைக் கருத்தும் சிந்தனைக்கு விருந்தளிக்கும். மண்ணுலகில் வாழ வழிவகுக்கும் உழவுத் தொழிலை, அதன் மேன்மையைக் கூறும் நாளே, இத் தைத்திருநாள்.

### தமிழன் நாகரீகத்தில் உழவு

தமிழன் நாகரீகத்தில் உழவுத் தொழிலுக்குத் தனிச் சிறப்பு உண்டு. தமிழ் மாநிலங்களின் பொருளியல் வளர்ச்சிக்கு விவசாயமே மைன்றுகோல். தமிழன் இலங்கியங்களில் உழவுத் தொழிலுக்குத் தனிச் சிறப்பு

—புதுமைச் சிற்பி—

உண்டு. உலகப் பொது மறையாம் தமிழ் மறையியற்றிய வள்ளுவப் பெருமான் ஒழிபு இயலில் உழவைப் பாடியுள்ளார். 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்—தொழுதுண்டு பின் செல்பவர்', என்றும் 'பல குடை நிழலும் தங்குடைக் கீழ்க் காண்பர்—அலகு உடை நீழலவர்' என்றும் 'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்—உழந்தும் உழவே தலை' என்றெல்லாம் பெருமிதத்துடன் புகழ்ந்துள்ளார் உழவை.

### பட்டிப் பொங்கல்

சிறப்புமிக்க உழவையும், அதை நடத்தும் உழவனையும் அவன் அளிக்கும் உழைப்பையும், அதை ஏற்கும் நிலத்தையும் பாராட்டியதோடு மன நிறைவு பெற்றுவிடவில்லை தமிழகம். இத்தனைக்கும் உறுதுணையாக இருக்கும் அந்த நான்கு கால் நண்பர்களாகிய கால் நடைச் செல்வத்தையும் பாராட்டிப் புகழ்ந்து நன்றி தெரிவித்ததற்கு அப்புறம் தான் மனநிறைவு உண்டாகிறது தமிழா சமுதாயத்திற்கு. பெரும் பொங்கலுக்கு அடுத்த நாள் 'மாட்டுப் பொங்கல்' என்று தனியாக ஒரு நாளையே அமைத்து, மாடுகளைப் பாராட்டி மன மகிழ்ச்சி தெரிவிக்கும் தமிழகத்தின் பண்பு தன்னிகரற்ற பண்பாகும்.

### உழைப்பின் உயர்வை கூறும் திருநாள்

உழைத்தால்தான் வாழ்வு உண்டு — உழைத்தால்தான் சமுதாயம் உண்டு—உழைத்தால்தான் இன்பம் உண்டு என்னும் உண்மையை பொங்கல் விழா எடுத்து விளக்குவதைப் போல் வேறு எந்த விழாவும் எடுத்து விளக்குவதில்லை. உழைப்பின் உயர்வை எடுத்துக் காட்டும் முறையில் சென்ற நூற்றுண்டின் இறுதியிலிருந்து மேதினியெங்கும் மேதின விழா கொண்டாடப்பட்டு வருகிறது அல்லவா? அதே கருத்தை அடிப்படையாகக் கொண்டு பற்பல நூற்றுண்டுகளாகத் தமிழகம் கொண்டாடி வரும் பெருநாள் இந்தத் தமிழர் திருநாள். உண்மையிலேயே தமிழ் நாட்டு மேதினம் இந்த விழா. உழைப்பின் சிறப்பில்தான் உலகம் உய்கிறதென்னும் மிகச் சிறந்த கருத்தை மிக அழகிய முறையில் எடுத்து விளக்கும் மிக உயரிய விழா இந்ப் பொங்கல் விழா.

### நமது நிலை

இத்தனை சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்ட இந்நாளை, திருநாளாக—பெருநாளாகக் கொண்டாடி விழா எடுக்கும் நிலையில் நாம் தமிழர் உள்ளோமா?

பொங்கல் கொண்டாடுகிறோம்!

விழா எடுக்கிறோம்!

ஆனால்,

பொங்கல் புளிக்கிறது!

வெல்லம் துவர்கிறது!

கரும்பு கசக்கிறது!

ஏன்? எதற்காக?

தமிழன் கையில் அடிமை விலங்கு!

தமிழன் அன்னைக்கு அரியாசனத்தில் சரியாசனம் இல்லை!

எனவே,

பொங்கல் புளிக்கிறது!

பூரிப்பு இல்லை!

### கவிஞனின் கனவு

நாம் எடுக்கும் விழாவில் சிறப்பு இல்லை. நமக்கு அதனால் உற்சாகம் இல்லை.

இந் நிலை மாறி இன்பம் காணும் நாள், எந்நாள்?

என்னருந் தமிழ் நாட்டின் கண்
எல்லோரும் கல்விகற்றுப்
பன்னருங் கலை ஞானத்தால்,
பராக்கிரமத்தால், அன்பால்,
உன்னத இமமலைபோல்
ஓங்கிடும் கீர்த்தி பெய்தி
இன்புற்ருர் என்று மற்ருேர்
இயம்பக் கேட்டிடல்
எந்நாளோ?

தறுக்கினுற் பிறதேசத்தார்
தமிழன்பால்—என்—
நாட்டான்பால்
வெறுப்புறும் குற்றஞ்செய்தா
ராதலால் விரைந்தன்னரை
நொறுக்கினுர் முதுகெலும்பைத்
தமிழர்கள் என்றசேதி
குறித்தசொல்கேட் டினபத்தின்
குதிக்கும் நாள் எந்நாளோ?

புரட்சிக் கவிஞன் கண்ட இந்நாளைக் காண பொங்கல் நன்னுளில், புத்தாண்டின் தொடக்கத்தில், புதிய முறுக்குடன், புதிய உற்சாகத்துடன் நமது பணியைத் தொடர்வோமாக.

# கூறியதும் ........ கூறமறந்ததும்

"பகலோன்"

### தேவைகளை அறிதற்கா!

"பண்டைக் காலத்தில் அரசர்களும் மந்திரிகளும் ஊர்கள் தோறும் சென்று மக்களின் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றுவதைப் போன்றே இப்பொழுது மந்திரிகளிருவரும் இங்கு வந்துளர்"

[உதவி வித்தியாதிபதி எஸ். யூ. சோமசேகரம், மந்திரிகள் யாழ் நகர் சென்ற போது]

"பறித்த தமிழ் உரிமையைத் தருமாறு தமிழினம் ஒன்றுபட்டுப் போராடுவதைப் பொருட்படுத்தாமல் அதைத் தடுப்பதற்கு அராங்கம் அடக்குமுறை மேற்கொள்வதைப் போலப் பண்டைக் கால அரசர்கள் செய்திருக்கமாட்டார்கள்" என்று கூறியிருந்தால் வரவேற்பு களை கட்டியிருக்கும்.

### ஒப்வின்றி உழைத்த உத்தமர்

"எனது பதவிக் கால கடைசி நாள் வரையும் சேவை செய்யப் போகிறேன். என்னைப் பதவியில் உயர்த்திவைத்த சிங்கள எசமான்களுக்கு நன்றி செலுத்தவும், நான் வாங்கும் சம்பளத்திற்கு பிரதிபலனுகவுமே அவ்வாறு செய்யப் போகிறேன்.

[யாழ்ப்பாணத்துத் தமிழ் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர்]

தமிழினத்திற்கு அவர் செய்த துரோகங்களையும், அவரின் பதவிப் பித்தையும் அறிந்த அவருடைய நண்பர்கள் 'இன்னும் மூன்று மாதத்துக்காகுதல் பதவியிலிருக்க அவர் ஆசைப்படுவதில் வியப்பில்லை' என்கின்றனர்.

### பேச்சிலா ஐக்கியம்?

"ஐக்கிய இலங்கையே எமது இலட்சியம்".

[யாழ்ப்பாணத்தில் மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தின]

"தமிழரின் மொழி உரிமையைப் பறித்து அவர்களின் உரிமைப் போராட்டத்தை அடக்கி அவசரகால நிலைமையை நீட்டிக் கொண்டிருப்பது ஐக்கியத்தை வளரச் செய்வதற்கே". இப்படிக் கூறியிருந்தால் பொருத்தமாக அமைந்திருக்கும்.

# சாம்பல் மேடு

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

அவள் முகத்தைச் சுழிக்கிருள்.

'...காசுக்காக நான் கண்டவைக்கும் பாய் விரிப்பனெண்டு...'

அவளுடைய நெஞ்சம் அழுகிறது.

அவளுடைய ஏழ்மையை ஓட்டுவதற்குத் தேவைப்படும் பணத்தைக் கொண்டு, ஊரறியாத இரகசியப் பிணைப்பாக; வைப்பாக, அவளை மாற்ற முயன்றவர்கள்—

அவள் வீட்டு விளக்குமாற்றைக் காணுத குறை!

குறுக்கு வழியிற் போக எத்தனையோ பேர்...

நேர்வழியிற் போக ஒருவரும் இல்லை!

அவளுடைய பிள்ளைகள் இல்லாவிட்டால்—

ஊரில் 'பொதுத் தொண்டு'க்குப் பேர் பெற்ற பிரக்கிராசியாருக்கு அவள் வைப்பாகக் கூட மாறியிருப்பாள்- அவள் ஏழைப் பெண் என்ற ரீதியில்.

ஆனுல்,

அவள் 'தாய்' என்ற உணர்வில்—

'நாளைக்கு என்ரை பிள்ளையளைப் பற்றி என்ன சொல்லுவினம். 'வேசேன்ரை பிள்ளையள்'...'

தாய்மை உணர்வில் அவள் இன்னும் வாழ்ந்து, தன் பிள்ளைகளுக்காக மரக்கறிக் கடகத்தைச் சுமந்து நடந்து கொண்டிருக்கிருள்.

எண்ணச் சுமைகள் கனத்து, அழுத்த—

செல்லத்தின் கண்களில் நீர் சுரந்து, கன்னத்திற் கோடிட்டுச் சுடுகிறது.

கண்ணீரில் வெம்மை! அது இதயத்தின் கொதிப்பு!

முள்ளும் கல்லும் நிறைந்த ஒற்றையடிப் பாதைகள் கழிந்து, சுகமான தார் ரோட்டில் அவள் இப்போ நடந்துகொண்டிருக்கிருள்.

அவள் வாழ்க்கை—

இன்னமும் முள்ளில்..., கல்லில்...

ஆலடிச் சுமைதாங்கியில் தலைப்பாரம் சற்றே இறக்கப்படுகிறது.

—ஒரு பெருமூச்சு!

இன்னும் ஒருமைல் தூர நடை.

அதன் பிறகு—

பிறகும் நடை; தீராத நடை!

(அடுத்த வாரம் முடியும்)


பொங்கற் புது நாளில்
புத்தெழிலும்,
புதுமையும்
பொங்குக!

கே.என். அப்துல் காதர் ராவுத்தர்
அன் கம்பெனி லிமிட்டெட்,
312, ஸ்கினர்ஸ் வீதி தெற்கு,
கொழும்பு.

தந்தி : மெடல்
தொலைபேசி : 2956&2028




## தைப் பொங்கல்

-ஆனந்தராசா, மாதகல்-

தைப் பொங்கல் என்னும் திருநாள் தமிழ் மக்களின் தொன்று தொட்டு வரும் சிறந்த கொண்டாட்டமாகும்.

உலகிலே வாழும் எந்த மனிதனும் தான் செய்த தொழிலிலே நல்ல பலனை அடையும்போது சந்தோஷமடைகிருன். அதேபோலவே ஏர் பூட்டி நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்த உழவன் தன் பலனைக் கண்டதும் பகலவனை வணங்கிப் பொங்கி இன்பம் கொண்டாடும் விழாவே பொங்கல் விழாவாகும். இவ்விழாவை அநேகமாகத் தமிழ் மக்களே கொண்டாடி வருகிருர்கள்.

பொங்கல் விழாவின் அன்று, அலங்கரித்த முற்றத்தில் உண்மை, உறுதி, ஊக்கம், என்ற மூன்று அடுப்புகளை வைத்து, அதன் மேல உழைப்பாகிய பானையை வைத்து, அறிவாகிய நெருப்பைப் புகுத்தி, அருளாகிய பாலை ஊற்றி, அறமாகிய அரிசியைப் போட்டு இன்பமாகப் பொங்கி மகிழ்வார்கள். பொங்கிய சோற்றை சூரியனுக்குப் படைத்து கோவிலுக்குச் சென்று, வீடு திரும்பி உற்ருர் உறவினரோடு உணவருந்தி மகிழ்தல் வழக்கம்.

இத்திருநாளை ஒட்டி மாட்டுப்பொங்கல் வருவது வழக்கம். அன்று மாட்டை நீராட்டிக் குங்குமம் இடுதலும், மாட்டின் கழுத்தில் மாலையிடுதலும், மாடு கட்டும் இடத்தைத் தூயதாக்கிய பின் அங்கு பொங்குவார்கள். மாட்டுப் பொங்கல் உழவனேடு சேர்ந்து பாடுபட்ட மாட்டிற்கு நன்றியைத் தெரிவிக்கும் முகமாகக் கொண்டாடப்படும் திருநாளே யாகும்.

சிறுவர் இத் திருநாளை இன்பமாகக் கழிப்பதற்கு பல வேடிக்கையான விளையாட்டுக்களில் ஈடுபடுவார்கள். அநேகமாகச் சிறுவர்கள் வாணங்களையும், வெடிகளையும், மத்தாப்புக்களையும் கொளுத்தி மகிழ்வார்கள். பலர் தமது நண்பர்களுக்கு இந்நாளை நன்ஞளாகக் கொண்டாடும்படி ஆசி கூறி வாழ்த்துக்கள் அனுப்புவார்கள். சில மாணவர்கள் தமக்கு இன்பம் தரும் இடங்களைத் தேடிச் சென்று அங்கு தமது பொழுதை இன்பமாகப் போக்குவார்கள். பெரியோர்கள், அப்படியே சுற்ற மித்திரர்களோடு கூடி உல்லாசமாக சல்லாபித்து இருப்பார்கள். இத்திருநாள் எல்லாருக்கும் சந்தோஷத்தை ஊட்டும் திருநாளாகும்.

## உழவர் திருநாள்

—அன்புமதி சுந்தர்—

பகல்,இரவு பாராது பாடுபட்டுழைக்கும் பாட்டாளி மக்களின் பெருநாள், காளை ஓட்டி களனி சென்று வயல் உழுது வளம் காணும் உழவர் திருநாள். காடு வெட்டிக் களனியாக்கி-நெல் விதைத்து, நெடிதுயர்ந்த கதிர் கண்டு, களிப்புற்று மனம் மகிழும் தமிழர் திருநாள். தைப்பொங்கல் பெருநாள்—தமிழர் தனிநாள், பொங்கல் திருநாள்.

உழைத்துழைத்து உருக்குலைந்து உருவமற்ற நிலையில் வாழும் இன்றையப் பாட்டாளி மக்கள், ஒப்புயர்வற்ற இன்றைய உழவர் திருநாளைக் கண்டு பெருமையடைகிருர்கள்.

பாராண்ட தமிழ் மன்னர்கள் கூட உழவர் பெருமக்களை உபசரித்து நடத்தியிருக்கிருர்கள். உலகம் செழிக்க உழவுத் தொழில் செழிப்புற வேண்டுமென்பது ஔவையின் வாக்கு! "வரம்புயர நீருயரும் நீருயர நெல்லுயரும்..........." என்ற அடிகளே இதற்குச் சான்று.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்வோர்" என்று தமிழ் மாதின் தலைமகன் வள்ளுவன் கூறியதிலிருந்து உழவுத் தொழில் உயர்ந்து நிற்கிறது.

"ஏரும் இரண்டுளதாய், இல்லாதேவித் துளதாய்..........." என்றஔவையின் வெண்பா உழவுத் தொழிலுக்கு இன்னும் பெருமையைக் கொடுக்கிறது.

"மேலி பிடிக்கும் கை விறல் வேந்தர் நோக்கும் கை". உழவு செய்யும் உழவர் பெரு மக்களின் கைகளில் தான் அரசனின் ஆட்சியும் தங்கியிருக்கிறது என்பதை தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

அன்று ஈழம் உழவுத் தொழிலில் உயர்ந்த ஸ்தானம் வகித்தது பாரதநாடு பட்டினியால் வாடியபோது, அதற்குச் சோறு கொடுத்து உதவுவது ஈழத்தின் கடமை என்று உணர்ந்தது. உபசரித்து வாழ்ந்தது. "ஈழத் துணவும் காழகத்து ஆக்கமும்" என்னும் பட்டனப் பாலை அடிகள் இதற்குச் சான்று.

அன்று வாழ்ந்த மன்னர்களும் உழவுத் தொழிலையும், உழவர்களையும் போற்றிப் புகழ்ந்து—மதித்து வாழ்ந்து வந்திருக்கிருர்கள்.

இந்த வரிசையில் தமிழ் மன்னர்கள் சிறந்து விளங்குகிருர்கள். இவர்களுக்கு நாங்களும் சளித்தவர்களல்ல என்பதைப் போல் சிங்களவர்களும் குளங்கள் வெட்டுவதில் சிறந்து விளங்கினர். இதனுல் தான் உழவுத் தொழில் சிறப்புற்று உழவர் பெரு மக்கள் களிப்புற்ருர்கள்.

இந்த நிலை, எமது காலத்திலும் ஏற்படவேண்டும். உழவர் பெருமக்களை அரசாங்கமும், அரசாங்க உத்தியோகத்தரும் போற்றிப் புகழ வேண்டும். உழுது வாழும் பெருமக்களுக்கு அரசாங்கம் ஆக்கமும், ஊக்கமும் ஊட்ட வேண்டும்.

அதன் மூலம் தான் எமது நிலை உயரும், உழவர் மனம் மகிழும். வாழ்வு கொழிக்கும். இதற்கு இளைஞர்களாகிய நாமும் ஆக்கமும் ஊக்கமும் காட்டி பொங்கல் புது நாளை—தமிழர் முதல் நாளை-உழவர் திருநாளை, மகிழ்வுடன் கொண்டாடுவோமாக!

### உங்களுடன் ஒரு வார்த்தை

ஜெயராணி வேலாயுதபிள்ளை, பொறளை—உமது கட்டுரைகள் விரைவில் 'வளர்மதி'யில் இடம் பெறும்.

மனேரஞ்சிதம் தேவி, நீர்கொழும்பு—உமது வாழ்த்துக்களுக்கு நன்றி.

விமலா நடராசா, விமன்காமம்—உமக்கு அத்தாட்சிப் பத்திரம் அனுப்பி வைக்கப்படும்.

—வளர்மதி மாமா

## பொங்கலோ பொங்கல்!

—விமலா நடராசா—

பொங்கல் இனிய பொங்கல்
பாடிக் களிக்கும் பொங்கல்!
நெஞ்சில் இன்பம் நிறைய
நீண்டு வந்த பாற்பொங்கல்!
ஏர் பிடிக்கும் உழவர்கள்
ஏற்றிப் பாடும் புலவர்கள்
பார் முழுதும் தமிழர்கள்
பாடிப் பொங்கும் பாற்பொங்கல்!

★

பொக்கை வாய்த் தாத்தாவும்
பச்சைக் குழந்தை, பாலகரும்
மிக் களிப்புடன் ஏற்றிடும்
இனிய பொங்கல் பாற்பொங்கல்!
எமக்கு வந்த இன்னல்கள்
எம்மைப் பிடித்த துயரங்கள்
அனைத்தும் ஒழிய வந்ததே
ஆசைப் பொங்கல் பாற்பொங்கல்!

### வளர்மதி

அத்தாட்சிப் பத்திரம் வேண்டுமா?

அப்படியானுல்...

அனுப்பி விட்டீர்களா?

ஆமாம்!

உங்கள் பெயர் விலாசம், அங்கத்துவ எண் இவற்றைத்தான்!

### எனது கிராமம்:

## காரைநகர்

—ந. ஸ்ரீகந்தா—

எனது கிராமம் காரைநகராகும். இங்கு சுமார் பதினையாயிரம் மக்கள் வாழ்கின்றனர். அனைவரும் தமிழர்களேயாயினும் ஓரிரு சிங்களச் சோதரர்களும் வாழ்கின்றனர்.

எமது கிராமத்தில் இரு கல்லூரிகளும் மற்றும் பல ஆரம்ப பாடசாலைகளும் உண்டு. சுமார் இரண்டாயிரத்தைந்நூறு (2500) மாணவர்கள் இங்கு கல்வி பயில்கின்றனர்.

இங்கு வியாபாரிகள், கமக்காரர்கள், மீன்பிடித் தொழிலாளர்கள், ஆசிரியர்கள், அரசாங்க ஊழியர்கள், தொழிலாளர்கள் ஆகிய பலதிறப்பட்டோர் வசிக்கின்றனர்.

எங்கள் கிராமம் நாலாபக்கமும் கடலாற் சூழப்பட்டது. காரைநகரையும் புன்னுலையையும் இணைக்கும் பாலம் காரைநகர்-யாழ்ப்பாணம் பஸ் பாதையில் முதலிடம் வகிக்கின்றது. முன்பு காரைதீவு என்று அழைக்கப்பட்ட இக் கிராமம் இப்போது காரைநகர் என வழங்குகின்றது.

எங்களூர், 'கிராமசபை' என்னும் உள்ளூராட்சி மன்றத்தால் பரிபாலிக்கப்படுகின்றது. இங்குள்ள கசூரினுக் கடற்கரை இலங்கையிலேயே அழகு மிக்க கடற்கரைகளுள் ஒன்ருகும். இக் கடற்கரையை நாடிப் பல உல்லாசப் பிரயாணிகள் வருவதுண்டு.

இங்குள்ள மக்கள் தமிழ் மீது தணியாக்காதலுடையவர்கள். இங்கு இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு அசைக்க முடியாத அமோக ஆதரவுண்டு. அக் கட்சியின் கிளை ஒன்று இங்குளது.

எங்கள் கிராமம் தமிழரசுக் கட்சித் தலைவர்களுள் ஒருவரான திரு. அமிர்தலிங்கம் பாராளுமன்றப் பிரதிநிதியாயிருக்கும் வட்டுக் கோட்டைத் தொகுதிக்குள் அடங்கியுள்ளது.

## வளர்மதி புதிய மருமக்கள்

3681 பிராங் நல்லையா, "லிடியா லொட்ஜ்", அல்வாய் மேற்கு, அல்வாய்.


3682 அ. ஹ. மு. சாஹுல் ஹமீது, 93, மெலிபான் வீதி, கொழும்பு—11.

3683 நடராஜ புவனேந்திரன், 92, ஔவையார் வீதி, திருக்கோணமலை.

3684 மா. நல்ல ரெத்தினம், அரசினர் மத்திய கல்லூரி, வந்தாறு மூலை செங்கலடி.

3685 கா. அருட்பிரகாசம், துறைநீலாவணை, கல்முனை.

3686 நா. சிவேந்திரன், 74, நாரஹென்பிட்டி ருே ட் நுகேகொட.



இந்தச் சதுரத்தின் மேல் மூலைகள் இரண்டிலும் இரண்டு சிறிய கறுப்புச் சதுரங்கள் இருக்கின்றன. இவற்றுள் ஒன்றில் இருந்து மற்றதற்கு கோடுகளைத் தொடாமல் போவதற்கு ஒரேயொரு வழிதான் இருக்கிறது. எங்கே, பென்சில் ஒன்றை எடுத்து வழியைக் கண்டு பிடித்துக் கீறிவிடுங்கள் பார்க்கலாம்.

(விடை அடுத்த வாரம்)

அன்புள்ள மருமக்களே!

உங்கள் அனைவருக்கும் எனது தைப் பொங்கல் வாழ்த்துக்கள்.

உங்கள் இதயங்களில் எல்லாம் இன்பம் என்னும் ஊற்று, பொங்கி வழியட்டும்.

இல்லங்கள் தோறும் அன்பு என்ற அமுதப் பொங்கல் பொங்கட்டும்.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது தமிழகத்துத் திருவாக்கு.


உங்கள் எல்லோருக்கும் அப்படியே வழி பிறக்குமென நம்பும்,

உங்கள் அன்பின்,

வளர்மதி மாமா

# தமிழகத்தின் வளம் சிறப்புற்று விளங்க மக்களின் ஆதரவு அவசியம்

## அரஸ்கோ இன்டஸ்ரீஸாரின் பாராட்டத்தக்க முன்மாதிரி



அரஸ்கோ தொழிற்சாலையின் முகப்புத் தோற்றம். முன் நிற்பவர் உரிமையாளர் திரு. ஆர். அரசரத்தினம்.

பாரத நாடு ஒரு புறம் விடுதலைக்குப் போராடிக் கொண்டிருக்கையில் மறு புறம் நாட்டையும், மக்களையும் சுயாட்சிக்குத் தகுதியுடையவர்களாக்குவதிலும் ஈடுபட்டிருந்தது. ஒரு நாடு, அந்த நாட்டில் வாழும் மக்கள் சுயாட்சிக்குத் தகுதியுடையவர்கள் என்றால், அதன் கருத்து எத்துறையிலும் மாற்றார் கையையெதிர்பார்த்திருக்காத ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதேயாகும்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் இன்று சுயாட்சிக் கோரிக்கையை முன்னிறுத்தி உள்ளார்கள். எனவே தங்கள் பிரதேசத்தின் பொருளியல் தரத்தைத் தரமான அளவுக்கு உயர்த்த வேண்டியது தமிழ் பேசும் மக்களின் கடன். குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ள தனவந்தர்கள் இது விடயத்தில் தங்கள் சக்தியை அதிகம் செலவு செய்ய வேண்டியவர்களாகிறார்கள். அப்பொழுதுதான் நமது பிரதேசங்களில் செழிப்பான ஒரு நிலையை ஏற்படுத்த முடியும், நாமும் நமது அரசியல் விடுதலையை நோக்கி வேகமாக முன்னேறலாம்.

### நமது பொருள் வளம் சிறக்க....

தமிழ் மக்கள் மத்தியில் உள்ள தனவந்தர்களில் அநேகர் தங்கள் முதலை தமது பிரதேசங்களுக்கு வெளியிலேயே உபயோகப்படுத்துகிறார்கள். நிச்சயம் இது கண்டனத்திற்குரிய செயலாகும். இவர்கள் தமிழ் பிரதேசத்தில் முதலீடு செய்வதன் மூலம், தமிழ் இனத்திற்குப் பல வழிகளில் நன்மை செய்பவர் ஆவார்கள். இது விடயத்தில் யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள அரஸ்கோ இன்டஸ்றீஸ் வழிகாட்டியுள்ளார்கள். இவர்களின் இம்முயற்சிக்கு தமிழ் பேசும் மக்கள் நிச்சயம் கடமைப்பட்டவர்களாவார்கள்.

தமிழ்ப் பிரதேசங்களில் முதலிடுவதன் மூலம், தமிழ் இளைஞர் மத்தியில் நிலவும் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்கவும், தமிழ்ப் பிரதேசத்தின் பொருள் வளத்தைப் பெருக்கவும், தமிழர்களின் எதிர்கால அரசியல் மாற்றத்திற்கு சிறந்த அடிக்கல்லாகவும் இன்னும் பல வழிகளிலும் தமிழ்ச்சமூகத்திற்கு நன்மை செய்தவர்களுமாவார்கள். இதை ஏனோ நம் மத்தியில் உள்ள அநேக தனவந்தர்கள் ஏற்கிறார்களில்லை. அரஸ்கோ இன்டஸ்றீஸ் இவையனைத்திற்கும் சிகரம் வைத்தாற் போல தங்கள் முயற்சியில் முனைந்துள்ளார்கள்.

முதன் முறையாக தமிழ் நாட்டில் திறமான 'லொசஞ்சர்'களை உற்பத்தி செய்ய முனைந்துள்ளார்கள் அரஸ்கோ இன்டஸ்றீஸார் லொசஞ்சர், றொவ்வி போன்றவற்றில் முதலீடு செய்வது சற்றுச் சிந்தனைக்குரிய விடயம். காரணம், இவை மேலை நாடுகளில் இருந்து, குறிப்பாக இங்கிலாந்திலிருந்து, பெருந்தொகையாகப் பல ரகங்களில் இறக்குமதி செய்யப்படும் பொழுது, அவற்றுடன் எதிர்த்துப் போட்டியிடக் கூடிய தரத்துக்கு இவற்றைத் தயாரிப்பதென்பது கடினமானது ஒன்று. என்றாலும், அரஸ்கோ இன்டஸ்றீஸார் துணிந்து இம்முயற்சியில் இறங்கியது பாராட்டப்பட்டவேண்டியதே.

மிகக் குறுகிய காலத்தில் எட்டு ரகங்களில் லொசஞ்சர்களைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறார்கள். மேலும் அவசர தேவைக்கும், சிக்கனத்திற்கும் உகந்த முறையில் குளிர் பானப் பவுடர்களை வேறு தயார் செய்கிறார்கள். அதுவும் ஒன்பது வகைக் குளிர்பானப் பவுடர்களைத் தயார் செய்கிறார்கள்.

பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்து, வெளிநாடுகளிலிருந்து புதியநவீன யந்திரங்களையும் இறக்குமதி செய்துள்ளார்கள். அறுபதுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்களுக்குத் தொழில் வசதியும் கிடைத்துள்ளது. அரஸ்கோ இன்டஸ்றீஸ் உரிமையாளர் திரு. ஆர். அரசரத்தினத்தின் இம் முயற்சி நிச்சயம் பாராட்டப்பட வேண்டிய ஒன்றே.

இன்று முதல் தமிழ் பேசும் மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு, சுதேசியப் பொருள் என்பதற்காக மட்டுமல்லாது, நமது நாட்டுச் சுவாத்தியத்துக்கு ஏற்றதாக, மேலை நாட்டு லொசஞ்சர்களுக்கு எந்த விதத்திலும் சோடை போகாததாகவும் உள்ள தரம்வாய்ந்த அரஸ்கோ லொசஞ்சர்களையும், குளிர்பானப் பவுடர்களையும் ஆதரிக்கவேண்டும்.

நமது பிரதேசங்களில் தொழிற்சாலை என்று கூறக் கூடியளவுக்கு உள்ளவை விரல் விட்டு எண்ணக்கூடியவையே. எனவே இங்கு கடமையாற்றும் இளைஞர்கள் இவற்றின் வளர்ச்சிக்கு ஏற்ற முறையில் நடந்து கொள்ள வேண்டும். அவ்விதம் செயல்படுவதன் மூலமே இதர தனவந்தர்களும் நமது பிரதேசங்களில் புது முயற்சிகளில் துணிந்து செயல்படுவதற்கு வசதியாக இருக்கும்.


## நவீன யந்திரங்களினுல் தமிழ் நாட்டில் தயாரிக்கப்படும்

## 'அரஸ்கோ' 'மூன்று மயில்' மார்க்





லொசஞ்சர்களையே வாங்கி உங்கள் குழந்தைகளுக்குக் கொடுத்து ஆனந்தமடையுங்கள்.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகும் லொசஞ்சர்களைப் பார்க்கிலும், இது சிறந்தது என்பதற்கு ஒரு முறை வாங்கினுல் உண்மை விளங்கும்.

**தரத்தில் சிறந்தது, விலையும் சகாயம் உடையது**

**"மூன்று மயில்" மார்க் லொசஞ்சர்களில் பிள்ளைகளின் வளர்ச்சிக்கு அவசியமான**

**"குளுக்கோஸ்" பழரசம் முதலியன**

அதிகமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.






"அரஸ்கோ" றொவ்விகள், "அரஸ்கோ" லொசஞ்சர்கள், "அரஸ்கோ" பழரச ஜுஜுப்ஸ், "அரஸ்கோ" புறுட் றெப்ஸ், "அரஸ்கோ" பெப்பமின்ற், "அரஸ்கோ" சொக்கலேட் ஒறேஞ்ச், "அரஸ்கோ" கிளியர் மின்ற்ஸ், "அரஸ்கோ" பொன் பொன்ஸ்

இவற்றைக் கேட்டு இன்றே வாங்குங்கள்.





"அரஸ்கோ" றொவ்விகள் அழகிய புது டிசைன்களுள்ள ¼ இருத்தல், ½ இருத்தல், 1 இருத்தல், 4 இருத்தல் டின்களிலும் 1 இருத்தல், 3 இருத்தல், 7 இருத்தல் பைகளிலும்

**இலங்கை எங்கும் கிடைக்கும்.**

**"மூன்று மயில்" மார்க் லொசஞ்சர்களை மறக்காதீர்கள்.**

# அரஸ்கோ இன்டஸ்றீஸ்.

**பருத்தித்துறை றேட், நல்லூர், யாழ்ப்பாணம்.**

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
**ராஜ்** (நீர்கொழும்பு) **வெம்பிளி** (கண்டி) **விஜயா** (மட்டக்களப்பு) **ஸ்ரீகிருஷ்ணா** (திருகோணமலை)
**மொடர்ன்** (பதுளை) **லக்ஷிமி** (இரத்தினபுரி) **ஜுப்பிட்டர்** (குருணாகலை) **தீவொலி** (நுவரெலியா)
**விஜிதா** (ஹட்டன்) **ஜெமினி** (ராகலை)

காமினி திரையில்
வார நாட்களில் தினசரி
பிற்பகல் 2-00 மணி

பதவி என்ற கத்தி அதை உபயோகிப்பவனையே பழிவாங்கும் என்ற தத்துவத்தின் அடிப்படையில் உருவான சிறந்த கதை.

எம். ஜி. ராமச்சந்திரன் — பத்மினி - ராகினி
எஸ். வி. சகஸ்ரநாமம் —எம். என். நம்பியார்
எம். ஜி. சக்ரபாணி—எம். என். ராஜம்
கே. ஏ. தங்கவேலு—எம். எஸ். சரோஜா
மற்றும் பலர் நடித்த

# ராணி சம்யுக்தா

திரை கதை, வசனம், பாடல்கள்:
**கவிஞர் கண்ணதாசன்**

டைரக்ஷன்:
யோகானந்

இசை:
கே. வி. மகாதேவன்

பின்னணி : டி. எம். சௌந்தரராஜன், பி. சுசீலா, ஜமுனாராணி



---

# பொங்கல் புத்தாண்டைச் சிறப்புடன் கொண்டாட எமது திரை விருந்து!!

**சென்ட்ரல்** (மருதானை) **ராணி** (யாழ்ப்பாணம்) மற்றும் 4 திரைகளில்

* பாலையா * மனோகர் * கல்யாண்குமார் * முத்துகிருஷ்ணன் * ராமராவ்
* நாகேஷ் * எம். வி. ராஜம்மா * விஜயலக்ஷ்மி நடித்த வெற்றிச் சித்திரம்.

## இந்தியாவில் 100 நாட்களுக்கு மேல் ஓடியது!



# தாயில்லாப் பிள்ளை

வசனம் : மு. கருணாநிதி எம். எல். ஏ.

'மனோகரா' புகழ் டைரக்டர் பிரசாத் சொந்தத்தில் தயாரித்து டைரக்ட் செய்திருக்கும் படம்.

இசை : கே. வி. மஹாதேவன்

பாடல் : கவிஞர் கண்ணதாசன் — கொத்தமங்கலம் சுப்பு — மருதகாசி

"மனிதன் பிறக்கும்போது ஜாதியுடன் பிறப்பதில்லை. இடையில் வந்து புகுவதுதான் அது" என்ற உயரிய கருத்தைக் கொண்ட படம்.

---

## மகத்தான தைப்பொங்கல் திரை விருந்து!

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

**எல்பின்ஸ்டன்** (மருதானை) **ரெக்ஸி** (வெள்ளவத்தை) **வேல்ஸ்** (கண்டி) **இம்பீரியல்** (மட்டக்களப்பு) **கிங்க்ஸ்** (பதுளை)



திலிப் குமார்—மதுபாலா
டர்கா கோதி—சுரேந்திரா
பிருதிவிராஜ் கபூர்—குமார்
நிகார் சுல்தானு
கோபி கிருஷ்ணு
நடித்த

# அக்பர்



சங்கீதம்:
நௌசாத்
பாடல்கள்:
கம்பதாசன்
பின்னணி:
ராதா, ஜெயலெட்சுமி,
பி. சுசீலா

7 வருடங்களாகத் தயாரிக்கப்பட்டு, ரூபா 125 லட்சம் செலவு செய்யப்பட்டு, பம்பாயில் 2 வருடங்கள் ஓடிய சிறந்த இந்திப் படமான 'முகால் ஏ அஸா'மின் தமிழ்ப் பிரதி

சக்கரவர்த்தி அக்பரின் மகன், இளவரசன் சலீமின் கதையை—அழகிய நாட்டியக்காரி அனார்க்கலியிடம் அவன் கொண்ட காதலை—சித்தரிக்கும் சிரஞ்சீவிக் காவியம்!

பாருங்கள் : கண்கவர் 'டெக்னிக் கலரி'ல் அழகான நடனங்களை!

## கெயிட்டி

8-வது வாரமாக
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

எஸ். எஸ். ராஜேந்திரன்—விஜயகுமாரி
நடித்த

# சாரதா

## செல்லமஹால்

மகத்தான 4-வது வாரமாக
காண்பிக்கப்படுகிறது!

எம். ஆர். ராதா — எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி
பி. எஸ். சரோஜா—சந்திரகாந்தா—கே. ஆர். ராமசாமி
ஓ. ஏ. கே. தேவர்—மனோரமா நடிக்கும்

# எதையும் தாங்கும் இதயம்

இப் பத்திரிகை இலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் ஜனவரி மாதம் 13-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.